

# இந்து ஒளி
# HINDU OLI

மகா சிவராத்திரி சிறப்பிதழ்

நந்தன வருடம் தை - பங்குனி வெளியீடு
January - March 2013

தீபம் - 17 சுடர் - 02

அகில இலங்கை இந்து மாமன்றக் காலாண்டிதழ் Quarterly of All Ceylon Hindu Congress

# 03.03.2013 ல் வரலாறு படைத்த நிகழ்வு

(பக்கம் 43ஐ பார்க்கவும்)



கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணியத் திருத்தலத்தில் பொதுச்செயலாளர், செஞ்சொற்செல்வர், ஆன்மீகச்சுடர், திருமதி கயிலாசபிள்ளை, மாமன்ற அறங்காவலர்சபைத் தலைவர் ஆகியோர் ஆன்மீகப் பேழையுடன் ஆலயவழிபாட்டுக்கு ஆயத்தம்.



ஆன்மீகப் பேழை பல்லக்கில் ஏற்றப்பட்டுவிட்டது



ஊர்வலம் ஆரம்பம்



ஆன்மீகச்சுடர், செஞ்சொற் செல்வர், சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் ஊர்வலத்தில்



ஏனைய பெரியோர்களுடன் ஊர்வலம் தொடர்கிறது



ஊர்வலம் மாமன்றத்தை வந்தடைகிறது



ஆன்மீகச் சுடரை மாமன்ற தலைவர் பாதபூசை செய்து வரவேற்கின்றார்.



ஆன்மீகப் பேழையை மாமன்றத் தலைவர் தலையில் தாங்கி தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் எடுத்துவருகிறார்

உ

சிவமயம்

# பஞ்சபுராணங்கள்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள்செவ் வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

## திருவாசகம்

விண்ணாளும் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானை
தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டானை(ப்)
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல் காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணாமலை யானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

## திருவிசைப்பா

பாடலங் காரப் பாசில்கா(சு) அருளிப்
பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங் காரத்(து) எம்பெரு மக்கள்
நெஞ்சினுள் நிறைந்துநின் றானை
வேடலங் காரக் கோலத்தின் அமுதைத்
திருவீழி மிழலையூ ராளும்
கேடிலங் கீர்த்திக் கனககற் பகத்தைக்
கெழுமுதற்(கு) எவ்விடத் தேனே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண் டசுரு திப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டெனும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலாமுணர்ந் தோதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்


உ

சிவமயம்

# இந்து ஒளி

தீபம் – 17 சுடர் – 02

நந்தன வருடம் மாசிமாதம் 26ஆம் நாள்

10.03.2013


## இலங்கையில் இந்துப் பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டும்

இலங்கை வரலாற்றில் இந்து மதம் வகிக்கும் பங்களிப்பு எல்லை அற்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலங்கைமுழுவதும்சிவாலயங்களும்சிவப்பொலிவும்சிறப்புற்று விளங்கியதை இதிகாசங்களில் ஒன்றாகிய இராமாயணம் நன்கு விளக்குகிறது. இலங்கை வரலாற்றுடன் மிகவும் தொடர்புபட்ட இந்து மதம் பற்றிய முழுமையான ஆய்வுகள் சீரிய முறையில் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. நேர்மையான ஆய்வுகளை வெளிப்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் அரசியல்வாதிகள் அவற்றை தடுத்து நிறுத்தி விடுகின்றனர். சோழர் காலத்தில் கட்டப்பட்ட பொலநறுவை சிவன் கோயிலையும், சிவன் கோயில் சுற்றாடலையும் 'சதுர் மங்களம்' எனப் பெயர் சூட்டி சோழர்கள் பல்வேறு சமூகப்பணிகளை ஆற்றினர் என சில வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சோழர்களது ஆட்சிக்காலத்தில் உருவான ஆலயங்கள் பல பின்பு அழிக்கப்பட்டன.சோழர் காலத்தின் போது ஈழத்து இந்து சமய வளர்ச்சி நிலை பற்றிய முழுமையான ஆய்வு இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை.

அந்நியர்கள் இலங்கையை ஆண்ட காலத்தில், தாம் சார்ந்த கிறிஸ்தவ கத்தோலிக்க மதங்களின் வரலாற்று நிலைகளை அம்மதத்தினர் பதிவு செய்து அவற்றை உரிய ஆவணங்களுடன் பேணி வருகின்றனர்.ஆனால் தொன்மை வாய்ந்த இந்து ஆலயங்கள், அந்நியரால் அழிக்கப்பட்ட இந்து சமய மடங்கள், இந்து மத அரசர்களின் சமய ரீதியான பணிகள் இதுவரை சரியான முறையில் ஆவணப்படுத்தப்படவில்லை.

பௌத்த சமயத்தவர்கள் தொடர்பான வரலாறுகள், ஆவணங்கள் சம்பந்தப்பட்ட ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.இதற்கான காரணம் பௌத்த மதம் தொடர்பான பல்கலைக்கழகங்கள் இலங்கையில் நிறுவப்பட்டு மத ரீதியான ஆய்வுகளும் ஆவணப்படுத்தும் முயற்சிகளும் சுதந்திரத்துக்கு முன்னும் பின்னும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் இந்து மதத்துக்கு உரிய பல்கலைக்கழக பாடத்திட்டமே மிகத் தாமதமாகத்தான் ஆரம்பிக்கப்பட்டது.இலங்கை வரலாற்றுத்துறை சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக ஆய்வாளர்கள் இந்து மதம் தொடர்பாக வெளியிட்ட கருத்துகள் போதிய திருப்தி அளிக்கக்கூடியதாக இல்லை.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

# இந்தச் சுடரில்...


| | |
|---|---|
| 01. பஞ்சபுராணங்கள் | 1 |
| 02. இந்து சமய வழிபாட்டு மரபுகளில் விரதமுறையும்... | 3 |
| 03. கோயில் மூத்த திருப்பதிகத்தில்.......... | 8 |
| 04. தட்சிணாமூர்த்தி | 12 |
| 05. கோயில் (சிதம்பரம்) | 13 |
| 06. சிவலிங்கம் | 14 |
| 07. எடுத்த பொற்பாதம் | 19 |
| 08. சிந்தனைக்கு ஒரு விடயம் (மாணவர் ஒளி) | 23 |
| 09. சிந்தனைக் கதைகள் (சிறுவர் ஒளி) | 24 |
| 10. சிவராத்திரி வேண்டுகோள் | 25 |
| 11. தாய்மையே இறைவனின் முதல் வடிவம் (மங்கையர் ஒளி) | 26 |
| 12. நலம்பல தந்தருளும் நந்தியெம்பெருமானும்.... | 28 |
| 13. உலகளாவிய ரீதியில் இந்துமதம் | 29 |
| 14. கீரிமலை புனித பூமியில் மடம் | 31 |
| 15. சைவப்பெரியார்கள் மூவரின் நினைவாக......... | 32 |
| 16. ஆறுமுகநாவலரும் சிதம்பரமும் (நாவலர் பக்கம்) | 33 |
| 17. இறை அனுபவம் | 35 |
| 18. திருமூலர் காட்டிய பெருநெறி | 37 |
| 19. ஈசன் உவக்கும் இன்மலர்கள் (விபுலானந்தர் பக்கம்) | 38 |
| 20. இந்திய கலைகளின் நோக்கங்களும்..... | 39 |
| 21. சிவதொண்டர் அணிச் செய்தி | 41 |
| 22. Who is Siva? | 42 |
| 23. பங்குனி மாதச் சிறப்பு தினங்கள் | 44 |
| 24. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயில் | 45 |
| 25. A Personal Account of Yogaswami..... | 48 |
| 26. சண்டிகேசுவரர் | 51 |


**அடுத்த சுடர்**

**விஜய வருடம்**

**சித்திரை - ஆனி**


ISSN : 2012-9645


## வாழ்த்து

சிவனடியே சிந்திக்கும் சிவனடியார் பதம் வாழ்க
பவமது நீங்க மேலாம் பரனருள் வேண்டித்
தவமது புரிந்து மற்றும் தரணியிலுள்ளோர் எல்லாம்
சிவநெறி வழியே நின்று சீருடன் நீடு வாழ்க!


# இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
நந்தன வருடம் தை – பங்குனி இதழ்
**10.03.2013**



ஆசிரியர் குழு :
திரு. கந்தையா நீலகண்டன்
கலாநிதி சைவஞானபானு ஆறு. திருமுருகன்
கலாநிதி முத்தையா கதிர்காமநாதன்
சிவஸ்ரீ ம. பாலகைலாசநாத சர்மா
திரு. த. மனோகரன்
திரு. அ. கனகசூரியர்



| | |
|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா 50.00 |
| வருடாந்தச் சந்தா [உள்நாடு] | ரூபா 200.00 [தபாற் செலவு தனி] |
| வருடாந்தச் சந்தா [வெளிநாடு] | US டொலர் 10 |



## அகில இலங்கை இந்து மாமன்றம்

A.C. H. C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 2, இலங்கை.
யாழ் பணிமனை : 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

இணையத்தளம் : http:/www.hinducongress.lk
மின்னஞ்சல் : hinducongress@gmail.com
தொலைபேசி : 0112434990, தொலைநகல் : 0112344720



இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில்
தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.



# HINDU OLI

**Issue of**

**ALL CEYLON HINDU CONGRESS**
**THAI - PANKUNI 10.03.2013**



**Editorial Board :**
Mr. Kandiah Neelakandan
Dr. Aru. Thirumurugan
Dr. Muthiah Kathirgamanathan
Sivasri M. Balakailasanatha Sarma
Mr. D. Manoharan
Mr. A. Kanagasooriar



| | |
|---|---|
| Price : | Rs. 50.00 |
| Annual Subscription (Inland) | Rs. 200.00 (Excluding Postage) |
| Annual Subscription (Foreign) | U. S. $ 10 (Including Postage) |




**ALL CEYLON HINDU CONGRESS**
**A.C.H.C. Bldg.**
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo - 2, Sri Lanka.
Jaffna Office : 211/17, Temple Road, Nallur, Jaffna.

Website : http://www.hinducongress.lk
E-Mail : hinducongress@gmail.com
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720


Next Issue :
**SITHTHIRAI - AANI**


**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**



# இந்துசமய வழிபாட்டு மரபுகளில் விரதமுறையும் சிவராத்திரி விரத மகிமையும்

**ப்ரம்மஸ்ரீ மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா**
*சிரேஷ்ட விரிவுரையாளர் -சமஸ்கிருதத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்*
*ஆய்வாளர் - காசி இந்துப் பல்கலைக்கழகம், வாரணாசி, இந்தியா*

ஆன்மீகத்துக்கு "விரதங்கள்" மிகுந்த தொடர்புடைய வழிபாட்டுக்கு உரியமுறைகளில் ஒருபாகமாக விளங்குகின்றன. விரதம் என்பது ஆகம வழிபாட்டு முறைகளுக்கு தொடர்பு ஏற்படுத்துவன. இது வீட்டிற்குரிய செயல். பூசைக்குரிய அங்கங்களைக் கொண்டது. பிரதிமை, பிரதிஷ்டை, தியானம், அபிஷேகம், வஸ்திரம் சமர்ப்பித்தல், நைவேத்தியம் (அமுதுபடைத்தல்) மலர் அர்ச்சனை முதலியவை அவை. விரதம் மேற்கொள்ளப்படும் இடம் புனிதமான சமயக் கோவிலாக மாறுகின்றது. காலப்போக்கில் விரதங்கள், கோவில்களுடன் தொடர்புள்ளவைகளாக மேற்கொள்ளப்படுகின்றன. விரததினங்களில் விரதத்திற்குரிய தெய்வங்கள் மிகவும் வேண்டப்பட்டு சிறப்புப் பெறுகின்றன.



### விரதம் என்ற சொல்லின் விளக்கம்

விரதம் என்பது : விருப்பம், ஆணை, விதிமுறை, நடத்தை, வழிமுறை, கோட்பாடு என பொருள் கொண்டது. இரண்டாம் நிலையாக ஆன்மீக செயல் முறைசப்தமாக பரிணமித்து முடிவில் எந்த புனிதமான செய்முறையையும் கறிக்கவந்துள்ளது. விரதம் எளிமை, பக்தியை அடிப்படையாகக் கொண்ட உயர் செய்முறை. இவ் உண்மையான நம்பிக்கை, கொள்கை, ஆன்மீகமதக் கோட்பாடுகளின் அடிப்படையாக உண்ணாமை, உறங்காமை, பூசனை முதலிய ஒழுக்க முறைகளை தன்னுள் கொண்டது.

### சைவவிரதங்கள்

விநாயகசதுரத்தி விரதம், சித்திவிநாயக விரதம், சங்கடஹரகணபதி விரதம், ஸ்கந்தஷஷ்டி விரதம், ஸரஸ்வதிபூஜை, துர்க்காஷ்டமி விரதம், மங்கள கௌரீ விரதம், ஆமுக்தாபரண விரதம் (சிவனைக் குறித்து புரட்டாதி மாதசுக்லபட்ச ஸப்தமியில் அனுஷ்டிப்பது), படிப்பிரதோஷவிரதம், சனித்ரயோதசி விரதம், சோமவாரவிரதம், அமாசோமவார விரதம் (அமாவாசை கூடிய திங்கட்கிழமை), பக்தீச்வரவிரதம் (பௌர்ணமிதினத்தில் குழந்தை வேண்டி பெண் களால் செய்யப்படுவது), கேதாரேச்வரவிரதம், உமா மகேஸ்வர விரதம், சிவ ராத்திரி விரதம் என்பன விபரிக்கப்பட்டிருக்கின்றன. இவை சைவர்களால் அனுஷ்டிக்கப்படுபவையாகும்.

விரதம் மேற்கொள்ளப் பட வேண்டிய முறைகள் விரதங்கள் எல்லோராலும் அனுஷ்டிக்கப்படுவதால் அவை பிரசித்தமாக உள்ளன. பெண்களுக்காகவே சில குறிப்பிட்ட விரதங்கள் உள்ளன. விரதம் இருப்பவர்கள் பக்தி கொண்டு நம்பிக்கையுடன், தீய எண்ணம் நீங்க, சமுதாய நலனுக்காகவும், தனக்காகவும் விரதங்களை மேற்கொள்ள வேண்டும்.

விரதம் சங்கற்பத்துடன் ஆரம்பிக்கும். இது விரதம் மேற்கொள்ளதன் விருப்பத்தைத் தெரிவிப்பது. நீராடுவது, ஒரு பொழுதோ, நாள் முழுவதும் உண்ணாமை, சரீர, பிறசௌகர்யங்களைவிடுதல், புலனுக்குரிய இன்ப நுகர்ச்சிகளைவிடுதல் ஆகியன மற்றநெறிமுறைகள். விரதங்களை நடுவில் கைவிடுவது பாபமாகும். தவிர்க்க முடியாத காரணங்களால் விடப்படும் விரதங்களுக்கு பிராயச்சித்தம் உண்டு.

உபவாசம் விரதத்தின் முக்கியமான அம்சம். தற்போது உபவாசம் என்பது உண்ணாமை என்ற

பொருளில் வழங்குகின்றது. உபவாசம் என்பது – சுக, சௌகர்ய கொண்டாட்டங்களினின்றும் விடுபட்டு, பூததயை, பொறுமை, தூய்மை, அவா இன்மை கொண்டு ஜபம், யஞ்ஞம், தியானம் கதாச்ரவணம் என்றவகையில் விரதத்தைக் கழிப்பதாகும். விரதங்களில் நைமித்திகம் (ஒரு நிமித்தத்தைக் குறித்துச் செய்வது) என்பது விதிக்கப்பட்ட – செய்யப் படவேண்டிய நித்தியகர்மாக்களை முன்னிட்டே அனுஷ்டிக்கப்பட வேண்டும். அஸாதாரண சமயங்களில் ஒருவர் தனக்காக மற்றொருவரை விரதம் மேற்கொள்ள ஏற்பாடு செய்யலாம்.காம்ய விரதங்களுக்கு (தான் நினைத்ததை நடக்கச் செய்வது) பிறரை பிரதிநிதியாக வைக்கக்கூடாது.

ஹவிஸ் என்பது பொதுவாக பக்குவம் செய்யப் பட்ட அன்னத்தைக் குறிக்கின்றது (நைவேத்தியம்). பருப்பு, காய்,கனிவகைகள்,மற்றும் சத்தான எளிய உணவைப் படைத்து அதில் ஒருபாகத்தையே விரதம் மேற்கொள்பவர் உண்ணவேண்டும்.

### சிவராத்திரிவிரதச்சிறப்பு

கயிலாயத்தில்பார்வதி சிவபெருமானிடம்உயிர்கள் உய்யும் வழி பற்றி விவாதித்துக்கொண்டிருந்தாள். அப்போது தேவி இறைவனிடம், நாதா! உங்களை வழிபாடு செய்வதில் எந்தநாள் மிகவும் உகந்தது? என்று கேட்டாள். சுவாமியும் அன்னையின் விருப்பமறிந்து, உமா! மாசிமாதத் தேய்பிறையில் வரும் சிவராத்திரியே எனக்கு மிகவும் உகந்தநாளாகும். அந்நாளில்செய்யும் தீர்த்த ஸ்நானம், தூபதீபம், நிவேதனம், அபிஷேகம் ஆகியவற்றைக் காட்டிலும் விரதம் மேற்கொள்வதே சிறப்பாகும். சிவபெருமானின் உள்ளம் அறிந்த உமையவள் மிகவும் பரவசமுற்றாள். தானும் சிவராத்திரி நோன்பிருக்க எண்ணம் கொண்டாள். தன்னுடைய தோழிகளுக்கும் விஷயத்தை தெரிவித்தாள். அவர்கள் பூலோகத்திற்கு தெரியப்படுத்தினர்.இப்படியே சிவராத்திரி விரதமகிமை உலகெங்கும் பரவியது.

### சிவராத்திரிவிரதம் அனுஷ்டிக்கப்படும் முறை

சிவனுக்குரிய முக்கியவிரதம் இதுவாகும். மாசிமாதம் கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தசி இரவில் செய்வது. திதிநண்பகல் நேரம் பூராயிருக்கவேண்டும். இது சிவன் முதலில் லிங்கவடிவான தினம். உபவாசம், கண்விழித்தல் சிறப்பானது. ஒவ்வொரு ஜாமத்தின் முடிவிலும் சிவபூஜை அர்க்கியம், பாத்யம் முதலியவைகளுடன் செய்யப்படவேண்டும்.

1ம் பக்கத் தொடர்ச்சி

கொழும்பு பல்கலைக்கழகத்தில் எழுபதுகளில் தொடங்கப்பட்ட 'இந்து நாகரிகம்' என்ற பாடம் பின்னர் யாழ் பல்கலைக்கழகத்திலும், மட்டக்களப்பு, பேராதனை பல்கலைக்கழகங்களிலும் இன்று வரை ஒரு பாடமாகவே கற்பிக்கப்பட்டு வருவதுடன் குறுகிய ஆய்வுகளை பாடத்திட்ட எல்லைக்குள் நின்று சமர்ப்பிக்கிறார்கள். கொழும்பு பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத்துறை செயலிழந்து போய்விட்டது.இதுவரை இலங்கையில் எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் இந்து சமய பீடம் உருவாக்கப்படவில்லை.ஆனால் இஸ்லாமிய மதத்துக்கான ஆய்வுகளுக்கு பல களங்கள் தென்கிழக்கு பல்கலைக்கழகத்திலும் ஏனைய இஸ்லாமிய நிறுவனங்களாலும் போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இந்து மதம் தொடர்பான தனித்துவ ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்தையும் வழங்கப்போவதாக தெரியவில்லை.இலங்கை ஒரு முழுமையான பௌத்த நாடாக மாற்றுவதற்கு இந்துக்களின் புராதன தலங்கள் இருந்த இடங்கள் பல தொடர்ந்து பறிக்கப்பட்டு வருவதை உணரக்கூடியதாக இருக்கிறது. இலங்கை வரலாற்றில் இந்துக்களுக்கு பெருமையளித்த திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்றும் தமிழ் வேந்தர் கால பெரும் சொத்தாகும். ஆனால் இன்று கன்னியா வெந்நீர் ஊற்றுக்கு அருகிலிருந்த மிகப் பழமை வாய்ந்த விநாயகர் கோயில் அகற்றப்பட்டு கன்னியா வெந்நீர் ஊற்று சூழலை பௌத்த மத சூழலாக மாற்றியுள்ள சம்பவம் மிகவும் வேதனைக்குரியது.

இந்து சமயம் தொடர்பான நீதி நேர்மையான ஆய்வு நிலை எமது நாட்டில் உருவாக்கப்படவேண்டும். இலங்கையில் இந்துப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டு இந்து சமயம் தொடர்பான சகல ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும்.அது மட்டுமன்றி இந்து மதம் உலகுக்கு வழங்கிய இந்து தத்துவக் கோட்பாடுகள், இந்து கலை கலாசார பாரம்பரியங்கள், இந்து மத ஆயுள்வேத சித்தமருத்துவ பாரம்பரியங்கள் என்பன ஆராயப்பட்டு அவற்றின்மேன்மையைகாப்பதற்குபல்கலைக்கழகரீதியில் சீரான முயற்சிகள் ஏற்படுத்துவது அவசியமாகும்.இதனைக் கருத்திற் கொண்டே அகில இலங்கை இந்து மாமன்றம் இந்து ஆராய்ச்சி நிலையத்தையும் இந்து மத ஆய்வுக்கான தொடக்க நிலைப்பணிகளையும் ஆரம்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையை ஆட்சி செய்யும் அரசுகள் இந்துப் பல்கலைக்கழகத்தை நிறுவாதுவிட்டால் எதிர் காலத்தில் அகில இலங்கை இந்து மாமன்றம் போன்ற உயர் நிறுவனங்கள் இந்து பல்கலைக்கழகத்தை தோற்றுவிக்கவேண்டியது காலத்தின் கட்டாய கடனாகும்.

சிவராத்திரியன்று சிவாலயத்திற்கு வில்வ இலையுடன் செல்ல வேண்டும். இரவு கடைசி ஜாம பூஜை வரை அங்கே இருக்க வேண்டும். சிவாய நம என உச்சரிக்க வேண்டும். அன்றுசாப்பிடக்கூடாது. நோயாளிகள் எளிய உணவுகளை எடுத்துக் கொள்ளலாம். முதல் ஜாம பூஜைக்கு பால், அடுத்த பூஜைக்கு தயிர், மூன்றாம் ஜாமத்திற்கு வெண்ணெய், நான்காவது ஜாமத்திற்கு தேன் ஆகியவற்றை அபிஷேகம் செய்வதற்காக கோயிலில் ஒப்படைக்க வேண்டும். மறுநாள் காலையில் அன்னதானம் செய்ய வேண்டும். அன்னதானத்துக்குப் பிறகே சாப்பிட்டு விரதத்தை பூர்த்தி செய்ய வேண்டும்.

சிவம் என்ற சொல்லுக்கு சுகம் என்று பொருள். சிவராத்திரி விரதம் அனுஷ்டித்தால்குடும்பத்தில் நன்மை பெருகும் என்பது நம்பிக்கை. இந்த விரதத்தை முறைப்படிஅனுஷ்டிக்க வேண்டும்.

## சிவராத்திரிவிரத வகைகள்

சிவராத்திரி விரதம் ஐந்து வகைப்படும்.

1. மகாசிவராத்திரி
2. யோகசிவராத்திரி
3. நித்திய சிவராத்திரி
4. படஷ்ஷிய சிவராத்திரி
5. மாத சிவராத்திரி

ஒவ்வொரு மாதமும் தேய்பிறை சதுர்த்தசி இரவு மாத சிவராத்திரி ஆகும். சிவனடியார் பலர் இந்த சிவராத்திரியையும் மாதந்தோறும் தவறாமல் கடைப்பிடித்து வருகின்றனர்.

சிவாயலங்களில் நடைபெறும் நான்கு ஜாம அபிஷேக ஆராதனைகளுக்கு அவரவர் வசதிக்கேற்பப் பொருள்களைக் கொடுத்து உதவலாம்.

## நான்கு ஜாம வழிபாட்டிற்குரிய திரவியங்கள்

### முதல் ஜாமம்

- அபிஷேகம் - பஞ்ச கவ்வியம்
- அலங்காரம் - வில்வம்
- அர்ச்சனை - தாமரை
- நிவேதனம் - பாற்சாதம்
- பட்டு - செம்பட்டு
- தோத்திரம் - இருக்கு வேதம்,சிவபுராணம்
- மணம் - பச்சைக் கற்பூரம், தேர்ந்த சந்தணம்
- புகை - சாம்பிராணி, சந்தணக்கட்டை
- ஒளி - புட்பதீபம்

### இரண்டாம் ஜாமம்

- அபிஷேகம் - பஞ்சாமிர்தம்
- அலங்காரம் - குருந்தை
- அர்ச்சனை - துளசி
- நிவேதனம் - பாயாசம், சர்க்கரைப் பொங்கல்
- பட்டு - மஞ்சள் பட்டு
- தோத்திரம் - யசுர் வேதம், கீர்த்தித் திருவகவல்
- மணம் - அகில்,சந்தணம்
- புகை - சாம்பிராணி,குங்குமம்
- ஒளி - நட்சத்திரதீபம்

### மூன்றாம் ஜாமம்

- அபிஷேகம் - தேன், பாலோதகம்
- அலங்காரம் - கிளுவை,விளா
- அர்ச்சனை - மூன்று இதழ் வில்வம், சாதி மலர்
- நிவேதனம் - எள்அன்னம்
- பட்டு - வெண் பட்டு
- தோத்திரம் - சாம வேதம்,திருவண்டப்பகுதி
- மணம் - கஸ்தூரி சேர்ந்த சந்தணம்
- புகை - மேகம், கருங் குங்கிலியம்
- ஒளி - ஐந்துமுக தீபம்

### நான்காம் ஜாமம்

- அபிஷேகம் - கருப்பஞ்சாறு,வாசனை நீர்
- அலங்காரம் - கரு நொச்சி
- அர்ச்சனை - நந்தியாவட்டை
- நிவேதனம் - வெண்சாதம்
- பட்டு - நீலப் பட்டு
- தோத்திரம் - அதர்வண வேதம், போற்றித்திருவகவல்
- மணம் - புனுகு சேர்ந்த சந்தணம்
- புகை - கர்ப்பூரம்,இலவங்கம்
- ஒளி - மூன்று முக தீபம்

## சிவராத்திரி விரதம் பற்றிய கதைகள்

இவ்விரத்தைப் பற்றிய ஐதீகங்கள் பல உள்ளன. ஒரு காலத்தில் உலகப் பிரளயத்தின் போது உயிர்கள் எல்லாம் சிவனிடத்தே ஒடுங்கின. உலகங்களே தோன்றவில்லை. இந்த நிலையில் எல்லையில்லாக் கருணையுடைய அம்பிகை அண்டங்கள் தோன்றி இயங்கும் பொருட்டு இறைவனை இடைவிடாது தியானம் செய்தாள். அப்போது இறைவன் தன்னுள் ஒடுங்கி இருந்த உலகங்களை மீண்டும் உண்டாகச் செய்து உயிர்களையும் படைத்தருளினார். அப்பொழுது உமையவள் சுவாமி நான் தங்கள் மனதில் தியானித்துப் போற்றிய காலம் "சிவராத்திரி" என்று பெயர் பெறவேண்டும் என்றும், அதனைச் சிவராத்திரி விரதம், என்று யாவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், அதை கடைப்பிடிப்பவர்கள் எல்லா நலன்களும் பெற்று முக்தியடையவேண்டும் என்று பிரார்த்தித்தார் இறைவனும் அவ்வாறே என்றும் அருள் புரிந்தார்.

அம்பிகையைத் தொடர்ந்து நந்தியம் பெருமான், சனகாதி முனிவர் சிவராத்திரி விரதம் அனுஷ்டித்து தங்கள் விருப்பம் நிறைவேறப்பெற்றார்.

ஒருகாலத்தில் உலகம் அழிந்தபோது மீண்டும் உலகை சிருஷ்டிக்க உமாதேவி சிவனை பூஜித்து ஒரு இரவு முழுவதும் இருந்த விரதமே சிவராத்திரி விரதம்.

மகாபாரதத்தில் சிவராத்திரி விரதம் பற்றி கூறப்படுகிறது. பீஷ்மர் அம்புபடுக்கையில் படுத்தபடி தர்மத்தைப்பற்றி எடுத்துக்கூறும்போது சித்ரபானு என்ற மன்னன் அவரிடம் மகா சிவராத்திரி விரதம் பற்றி கூறுகிறான். இந்த மன்னனுக்கு பூர்வஜென்ம வரலாறுகளை நினைவுகூறும் சக்தி உண்டு. அதன் அடிப்படையில் கடந்த பிறவி ஒன்றில் அவன் இவ்விரதத்தை அனுஷ்டித்ததாக சொல்கிறான். அந்த பிறவியில் அவன் சுச்வரன் என்றபெயரில் வேடனாக இருந்தான். இந்த பெயருக்கு இனியகுரல் என்று பொருள். ஒருமுறை வேட்டைக்கு சென்றபோது ஒரு மரத்தில் ஏறி அமர்ந்திருந்தான். அது ஒரு வில்வ மரம். இரவுமுழுக்க காத்திருந்தும் எந்த மிருகமும் அகப்படவில்லை. குடும்பத்தாரின் நினைவு அவனுக்கு வந்தது. பசியும் தாகமும் அவனைவாட்டி எடுத்தது. குடும்பத்தினரை நினைத்து கண்ணீர் விட்டான். பொழுதுபோகவில்லையே என்பதற்காக மரத்தில் இருந்த வில்வ இலைகளை பறித்து தரையில் போட்டுக் கொண்டிருந்தான். மறுநாள் ஒரு மான் சிக்கியது. அப்போது ஒருவன் வேடன் எதிரே வந்தான். அவன் அந்த மானை தனக்கு தரும்படி கேட்டான். பசியால் அவன் முகம் வாடி உள்ளது என்பதை அறிந்த வேடன், அவனுக்கும் தன்னிடம் இருந்த மான் இறைச்சியின் ஒரு பகுதியை கொடுத்தான். பிறகு வீட்டிற்கு சென்று சாப்பிட்டான். அந்தவேடனின் இறுதிக்காலம் வந்தது. அவன் இறந்ததும் சிவலோகத்திற்கு சென்றான். வேடன் ஆனாலும் காட்டில் மரத்தின் மீது அமர்ந்திருந்த நாள் சிவராத்திரி என்பதால், சிவபதம் கிடைத்துவிட்டது. அன்று இரவில் வில்வ இலைகளை கீழே போடும்போது மரத்தின் அடியில் இருந்த லிங்கத்தை கவனிக்கவில்லை. இடுப்பில் கட்டியிருந்த குடுவையிலிருந்து மிச்சம்மீதி இருந்த தண்ணீர் லிங்கத்தின் மீது பட்டது. அபிஷேமாகவும், அர்ச்சனையாகவும் ஏற்றுக் கொண்டார். விரதத்தின் முடிவில் தானமும் செய்துவிட்டான். இதன் காரணமாக அவனுக்கு சொர்க்கம் கிடைத்தது.

பார்வதிதேவி ஒருநாள் விளையாட்டாக சிவபெருமானின் கண்களை மூடினாள். ஈரேழு உலகங்களும் இருளில் மூழ்கி உயிர்கள் வருந்தின. அந்நாளே மகாசிவராத்திரி என்று கூறுவர். திரயோதசியன்று மாலையில் சிவபெருமான் பிரதோஷ நடனம் ஆடினார். அன்றிரவு தேவர்கள் பாற்கடலை கடைந்து பெற்ற விஷத்தை சிவபெருமானுக்கு அர்ப்பணித்தனர். சிவபெருமான் நஞ்சையும் விரும்பி உண்டு தேவர்களைக் காத்தார். விஷத்தைக் குடித்ததால் மயக்கமடைந்தார். அன்றிரவு சிவபெருமானைத் துதித்து தேவர்கள் யாவரும் வணங்கிநின்றனர். அந்நாளே சிவராத்திரி.

மார்க்கண்டேயனின் உயிரைப் பறிக்க எமன் விரைந்து வந்தான். உயிரைக் காத்துக் கொள்ள அவன் சிவலிங்கத்தை ஆரத்தழுவிக் கொண்டான். ஆனாலும், தர்மவானான எமதர்மன் பாசக்கயிற்றை வீசினான். கயிறு லிங்கத்தையும் பற்றிக் கொண்டது. சிவபெருமான் எமனை காலால் உதைத்தார். அதன்பின், தேவர்கள் சிவனை வேண்டி எமனைஉயிர்ப்பித்தனர். அந்நாளே மகாசிவராத்திரி என்று கூறுவர். அதனால், மகாசிவராத்திரி நாளில் சிவனை வழிபட்டோருக்கு மரணபயம் நீங்கும் என்பது ஐதீகம்.

## சிவராத்திரிபூஜை வீட்டில் செய்யும்முறை

உங்கள் வீட்டில் சிவலிங்கம் அல்லது நடராஜர் சிலை இருந்தால் வீட்டிலேயே நான்கு ஜாமமும் பூஜை செய்யலாம். அன்று பகலில் சாப்பிடாமல், மாலையில் பழம், பால் மட்டும்அருந்தி பூஜையைத் துவக்க வேண்டும். மாலை 6.30, இரவு 9.30, நள்ளிரவு 12.30, அதிகாலை 3 மணி ஆகிய நேரங்களில் வில்வ இலை மற்றும் மலர் தூவி தீபாராதனை காட்ட வேண்டும்.இடைப்பட்ட நேரத்தில் குடும்பத்துடன் அமர்ந்து சிவாயநம நமசிவாய என மந்திரம் சொல்லலாம். சிவன் தொடர்பான பாடல்கள், கதைகளை பக்தியுடன் ஒருவர் சொல்ல, மற்றவர்கள் கேட்கலாம்.

மனிதனுக்கு சத்வ, ரஜோ, தமோ என்னும் மூவித குணங்கள் இருக்கின்றன. இதில் சாதுக்களிடம் இருக்கும் உயர்ந்த குணமே சத்வகுணம். ரஜோ, தமோ குணங்கள் நம்மை தாழ்ந்த நிலைக்கு கொண்டு செல்பவை. காமம், கோபம், பொறாமை கொண்டு செயலைச் செய்பவன் ரஜோ குணம் பொருந்தியவன். சோம்பல், தாமதம்ஆகிய குணங்களைக் கொண்டவன் தாமச குணம் பொருந்தியவன். சிவராத்திரி விரதத்தின் மூலம் இவ்விரு குணங்களையும் போக்கிக் கொள்கிறோம். சோம்பல் தரும் தூக்கத்தை வெல்லவேண்டும் என்பதால், இந்நாளில் இரவு முழுவதும் விழிக்கவேண்டும் என்பதை விரத நியமமாக ஏற்படுத்தினர்.சிவனை அபிஷேகம் செய்வது புற வழிபாடு. உண்மையில் சிவபெருமான் ஒளிவடிவமானவர். தவக்கனலால் அவர் ஜொலிக்கிறார். அவரிடம் நாம்," இறைவா! பால் தண்ணீர், பால் போன்றவற்றால் நாங்கள் அபிஷேகம் செய்கிறோம்.



## சிவ தத்துவம்

'சிவாயநம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை என்ற உறுதி மொழியில் சைவமக்களுக்கு அபார நம்பிக்கை உள்ளது.

'ஒன்று அவன் தானே, இரண்டு அவன் இன் அருள்' என்கிறார் திருமூலர். அந்த ஒன்று சிவன். அவன் திருவருட்சக்தியோடு கூடி இந்த உலகத்தையும், அண்ட புவனங்களையும் தம் அளப்பெருங் கருணையினால் பரிபாலனம் செய்து வருகின்றான். அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது என்பது உண்மை மொழி. சிவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன். அனைத்திற்கும் மூலமும் முதலுமாக உள்ளவன். 'அம்மையே அப்பா, ஒப்பிலா மணியே, அன்பினில் விழைந்த ஆரமுதே' என்கிறார் மாணிக்கவாசகர். உண்மையும் அவனே. செம்மையும் அவனே, நன்மையும் அவனே. 'சிவன் ஓடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை' என்பது திருமந்திரம் தரும் முடிந்த முடிவு. சிவனின் தன்மையைச் சொல்ல வந்த திருமூலர்.

"தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
..................................................
சேயினும் நல்லன் அணியன் நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ் சடை யோனே."

என்கிறார். சிவனை எதனுடனும் ஒப்பாகக் கூறாமல், எல்லாவற்றிலும் மேலாக கொள்ளப்பட்டிருக்கும் பாங்கு நோக்கற்பாலது.

"சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே."

'சிவ சிவ' என்று சிவநாமத்தை உச்சரித்துக்கொண்டு இருந்தால், எம்மைப் பிறப்புக்கள் தோறும் தொடர்ந்து வருகின்ற தீவினைகள் தொலைந்து போகும். அதுமாத்திரமா? 'சிவ சிவ' என்று சொல்பவர், மனித நிலையிலிருந்து தெய்வீக நிலைக்கு உயர்த்தப்பட்டுவிடுவர். சிவகதியும் உறுதியாகிவிடும்.

*(நன்றி: கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரத்தின் சைவ நற்சிந்தனைக் களஞ்சியம்)*

நீர் எம்மை ஞானத்தால் நீராட்டுவீராக. பாவம் அனைத்தையும் போக்கி புனிதமாக்குவீராக. உமது அருளால் அநீதியும், அக்கிரமமும் ஒட்டுமொத்தமாக அகற்றப்படட்டும். இரண்டற்ற நிலையில் பரம் பொருளான உமது அருள் எம்மிடம் பூரணமாக நிலைத்திருக்கட்டும் என்று வழிபடவேண்டும்.

### சிவராத்திரிவிரதத்தின்பலன்கள்

சிவனுக்கு நடைபெறும் சிவராத்திரிதின அபிஷேகத்தை கண்கள் பனிக்க, மெய்சிலிர்க்க கண்டுதரிசித்து, அபிஷேக தீர்த்தத்தை அருந்தினால் தீராதநோய்கள் தீரும் என்பது ஆன்றோர், சான்றோர் வாக்கு. கரும்புச்சாறு அபிஷேகத்துக்கு வழங்குவதால் தடைகள், தோஷங்கள், உடல் உபாதைகள், நீங்கும் என்பது ஐதீகம்.


வைணவ சம்பிரதாயத்தில் வைகுண்ட ஏகாதசிக்கு உள்ள பலன்கள் எல்லாம் சைவவழிபாட்டில் சிவராத்திரிக்கும் உண்டு.

சிவராத்திரிவிரதமும் சிவ வழிபாடும் பாவ வினைகளால் உண்டானபிணி, தடை, தோஷம், பாவங்கள், கர்மவினைகள், மரணபயம், யமபயம் போன்றவற்றை நீக்கி முத்திக்கு வழிகாட்டும் என்பது நாயன்மார்களின் கூற்றாகும்.

ஆன்மிக சாதகர்கள் அனைவருமே இருக்க வேண்டிய விரதம் சிவராத்திரி. தண்ணீரைக் கூட அருந்துவதைத் தவிர்ப்பது சிறப்பு. உலக அமைதி மற்றும் சுபிட்சத்திற்காக சிவனுக்குரிய ஹோமம் செய்ய வேண்டும் அல்லது அதில் கலந்துகொள்ள வேண்டும். நாள் முழுவதும் ஓம்நமசிவாய மந்திர ஜபத்தை தியானிக்க வேண்டும். இரவில் சிவாலயத்தில் ஒன்றுகூடி நான்குகால அபிஷேக தரிசனமும், மந்திரஜெபமும் செய்யவேண்டும். என் இதயத் தாமரையில்வீற்றிருக்கும் ரத்தினமான சிவனே! உம்மை நான் வணங்குகிறேன். சிரத்தை, பக்தி என்னும் நதியிலிருந்து கொண்டு வரப்பட்ட புனித நீரான என் தூய மனதால் அபிஷேகம் செய்கிறேன். தியானம் என்னும் நறுமணப்பூக்களால் வழிபடுகிறேன், என்று சொல்லி உளமாற வழிபட வேண்டும். சிவபெருமானே! நீரே என் உயிர். என் மனமே பார்வதி. என் கருவி கரணங்களே உமது சேவகர்கள். என் உடலே உமது வீடு. என் அன்றாட செயல்கள் அனைத்தும் உமது வழிபாடு. என் உறக்கத்தில் உம்மோடு இரண்டற கலந்து விடுகிறேன். என் கால் நடக்கும் பாதை எல்லாம் உமது கோயில் பிரகாரம். என் பேச்செல்லாம் உமது பிரார்த்தனை மொழி. இவ்விதம் என் எண்ணம், சொல், செயல் அனைத்தையும் உமக்கே அர்ப்பணிக்கிறேன், என்றும் பிரார்த்திக்கலாம். சிவராத்திரி நாளன்று மனவீட்டில் விளக்காக திகழும் ஐந்தெழுத்து மந்திரம் நமசிவாயத்தை இயன்றவரை சொல்லி ஆயிரமாயிரம் நன்மைகளை வாழ்வில் பெறுவோமாக!

# கோயில் மூத்த திருப்பதிகத்தில் ஒரு கணக்குக் குறிப்பு

**டாக்டர் வை. இரத்தினசபாபதி** M. A., Ph.D.
*சென்னை*



## முன்னுரை

**கோ**யில் என்ற சொல்லானது தில்லையில் கூத்தப்பெருமான் ஆடும் பொன்னம்பலத்தையே குறிக்கும். சித்தாந்த சைவத்தை சுத்தாத்வைதம் எனக்கூறி விளக்கவந்த சிவஞானமுனிவர் எடுத்துக் காட்டும் குறிப்பானது கோயில் என்பதற்கும் பொருந்துவதே.

அத்வைதம் என்ற சொல்லானது கேவலம் என்ற அடைமொழியுடன் விசிட்டம் என்ற அடைமொழியுடன் துவைதம் என்ற அடைமொழியுடனும் இணைந்து முறையே கேவலாத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதாத்வைதம் என்ற தத்துவக்கொள்கையை குறிக்கும். இவ்வாறு அடைமொழி எதுவும் இல்லாமல் சுத்தமாக நின்ற அத்வைதக் கொள்கையே சித்தாந்த சைவக்கொள்கை. அது போலவே கோயில் என்ற சொல்லும் அடைமொழி எதுவும் இல்லாமல் சுத்தமாக நின்றால் அது தில்லைக்கூத்தன் ஆடும் பொன்னம்பலத்தையே குறிக்கும். கோயில் என்பதுடன் திரு என்ற அடைமொழியை சேர்த்துவிட்டாலும் கூட அது ஒரு பொதுச் சொல்லாக நின்று இன்ன அம்மையார் உடனுறையும் இன்ன இறைவன் திருக்கோயில் என்றே சுட்டிக் கூற வேண்டிய நிலைமையை பெற்று விடுகிறது.

மணிவாசகப்பெருமான் கோயில் திருப்பதிகம் என்ற அமைப்பில் இருபதிகங்கள் அருளியுள்ளார். "உடையாள் உன்றன் நடுவிருக்கும்" எனத்தொடங்கும் பதிகம் கோயில் கோயில் மூத்த திருப்பதிகம் என்றும் "மாறி நின்றெனை" எனத்தொடங்கும் பதிகம் கோயில் திருப்பதிகம் என்றும் போற்றப்படுகின்றன. இரண்டு பதிகங்களுள் முதலிற் பாடிய பதிகம் ஆதலின் "உடையாள் உன்றன் நடுவிருக்கும்" எனத்தொடங்கும் பதிகம் கோயில் மூத்த திருப்பதிகம் என வழங்கப்பெற்றது என்பது அறிஞர் காட்டும் மரபு வழி விளக்கம். கோயில் மூத்த திருப்பதிகத்தின் முதற்பாடலில் மாணிக்கவாசகப் பெருந்தகையால் சுட்டிக் காட்டப்பெற்ற ஒருகுறிப்பினை தெரிவிப்பதே இக்கட்டுரையின் உட்கோளாக அமைகிறது.

## அம்மையும் அடிகளும்

சிவனெனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி எம்மாள் எனப்போற்றப்பெறும் திருக்கயிலைக்கிறைவனால் மும்முறை 'அம்மையே' என அழைக்கப் பெற்ற காரைக்கால் அம்மையார் திருவாலங்காட்டு பதிகங்கள் இரண்டு அருளியுள்ளார். இரண்டுமே திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் என்றே போற்றப்படுகின்றன. பதிகம் எனும் அமைப்பில் வரும் திருவருள் நெறி சார் திருமுறைகளுக் கெல்லாம் காலத்தால் முற்படப்பாடப் பெற்ற பதிகங் களாதலின் மூத்த திருப்பதிகங்கள் எனப்பெற்றன என்பதே மரபு வழியில் நின்று திருமுறைப்பேரறிஞர்கள் எடுத்துக் காட்டும் விளக்கம்

காரைக்கால் அம்மையாருக்குக் காலத்தால் பிற்பட நின்றவர் மணிவாசகப் பெருந்தகையார் என்ற ஆய்வியல் முடிவை ஒட்டிய கருத்தே முன் அமைக்கப்பெற்றது. அடிகள் அம்மையாருக்குத் காலத்தால் முற்பட்டவர் என்ற கருத்தின் வழியே நின்று சிந்தித்தால் மூத்த என்ற சொல் அம்மையார் திருப்பதிகங்களில் அமைந்த தன் காரணத்தை வேறு வகையில் விளக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

காரைக்கால் அம்மையார் அருளிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் இரண்டினுள் 'கொங்கை திரங்கி' என்ற தொடக்கமுடைய முதற்பதிகம் திருவாலங் காட்டைப்பற்றியது. இப்பதிகம் முழுவதும் "ஆடும் எங்கள் அப்பன் இடம் திருவாலங்காடே" என்ற தொடராலேயே முடியும் திருவுடையாகிறது." எட்டி இலவம் என்ற தொடக்கத்தையுடைய இரண்டாம் பதிகத்தில் மூன்றாம் எட்டாம்திருப்பாடல்கள் தவிர ஏனையவைகளில் முறையே குழகன் ஆகுமே அழகன் ஆகுமே பெருமான் ஆகுமே பரமன் ஆகுமே குழகன் ஆகுமே அழகன் ஆகுமே பரமன் ஆகுமே விமலன் ஆகுமே என



அமைகின்றன. மூன்றாம் திருப்பாடல் "நட்டம் பேணும் இறைவன் பெயரும் பெருங்காடே" என்றும் எட்டாம் திருப்பாடல் "பெருங்காட்டில் மாயன் ஆட மலையான் மகளும் மருண்டு நோக்குமே" என்றும் நிறைவு பெறும் திருவுடையன. அழகன் ஆடும் ஆலங்காட்டை முதல் பதிகத்திலும் ஆலங்காட்டில் ஆடும் நிலையை இரண்டாம் பதிகத்திலும் அமைந்துள்ள குறிப்பை அம்மையாரிடம் தெளிவாக காணமுடிகிறது.

ஆளுடைய அடிகள் என்று அடிமை பேணும் அருளாளர்களால் பெரிதும் போற்றப்படும் மணிவாசகப் பெருந்தகை அருளிய கோயில் திருப்பதிகம் இரண்டினுள் மூத்த திருப்பதிகம் முழுவதும் பொன்னம்பலம் பேசப்பெறுகிறது. கோயில் என்ற சொல்லே காணப்படவில்லை. இரண்டாம் பதிகமாகிய கோயில் திருப்பதிகத்தில் பொன்னம்பலம் என்ற சொல்லுக்குப் பதிலாக திருப்பெருந்துறையே பதிகம் முழுவதிலும் சூட்டப்பெறுகின்றது. உடையாள் உன்றன் எனத் தொடங்கும் கோயில் மூத்ததிருப்பதிகத்தில் பெருமான் தன்னையே கோயிலாக கொண்ட பெருமை பேசப்படுகின்றது.இரண்டு திருப்பதிகங்களும் அருளப்பெற்ற இடம் திருத்தில்லை என்றே பேசப்பெற்றாலும் மூத்த திருப்பதிகத்தில் பொன்னம்பலம் என்பதால் திருத்தில்லை என்பதும், அதுவே கோயில் என்பதும் உறுதியாகின்றது. முதற்பதிகத்தை படித்த நிலையில் இரண்டாம் பதிகத்தை படிப்பதால் திருத்தில்லை கோயில் என்பன ஒன்றே எனக் கொள்ளும் அளவுக்கு திருப்பெருந்துறையும் பொன்னம்பலமும் ஒன்றே என்றோ, திருப்பெருந்துறை பொன்னம்பலம் திருத்தில்லை கோயில் என்ற அனைத்தும் ஒன்றே என்றோ கொள்ள இயலவில்லை. திருத்தில்லையில் அருளப்பெற்ற திருத்தசாங்கம் திருப்பள்ளி எழுச்சி என்பவைகளிலும் திருப்பெருந்துறையே குறிக்கப்பெறுகின்றன.

## அடிகளும் பெருந்துறையும்:

பாண்டிய நாட்டுத் திருப்பெருந்துறையில் அடிகளை மிகவும் உருக்கிய அருளியல் நிகழ்வு ஒன்று உண்டு. அடியவர் திருக்கூட்டத்துடன் வந்து குருந்த மரத்தின் கீழ் இருந்து தம்மை ஆட்கொண்ட குருமுதல்வன் அடியவர் திருக்கூட்டத்தை அங்கே எழுந்த சோதியில் கலக்க வைத்து தம்மையும் அடியாருடன் கூட்டாமையை அடிகள் மிகவும் மனம் நொந்து வேண்டுகிறார். அப்பொழுது "தில்லைக்கு வருக" என்ற ஆணை பிறந்தது. தில்லைக்கு வந்த அடிகள் தில்லையில் பொன்னம்பலத்தில் பாண்டி நாட்டுத் திருப்பெருந்துறையில் அடியாருடன் புகுத்தாமையை நினைத்து நினைந்து வேண்டுகிறார். தில்லைக்கு வந்த பிறகும் அடிகள் ஒரு திருப்பெருந்துறையை அறிமுகப்படுத்துகின்றார்.

சிதம்பரத்தின் வடகீழ்த்திசையில் தில்லை திருக்கோயிலின் தென்புறத்தே திருப்பாற்கடல் தீர்த்தம் உள்ளது. அதனை ஒட்டி அதன் வடக்கே அமைந்த கோயில் ஒன்று உண்டு. அதற்குத் திருப்பெருந்துறை என்றே பெயர். பாண்டி நாட்டுத் திருப்பெருந்துறை கோயிலைப் போலவே தில்லை திருப்பெருந்துறையிலும் ஆன்மநாமப் பெருமான் சிவயோகாம்பிகை எனப்படும் இறைவன் இறைவி திருவறைகளில் திருவடிகளே வைக்கப்பட்டுள்ளன. தில்லைத் திருப்பெருந்துறைக்கோயிலில் அமைந்த ஒரு தனியிடத்தில்தான் அடிகள் தங்கித் தவமியற்றியதாக கொள்ளும் கருத்து இன்றும் கேட்கப்படும் செவிவழிச் செய்தி. அடிகளைப் பொறுத்த வரையில் பாண்டிநாட்டுத் திருப்பெருந்துறை மூத்த திருப்பெருந்துறை.அங்கே நடைபெறாத அடியாரின் கலப்பு என்னும் அற்புதம் அப்படியே இங்கு வேண்டப்படுகிறது என்ற வகையில் தில்லைபொன்னம்பலம் மூத்த திருப்பெருந்துறையாகவே அமைய யாண்டும் எந்த ஒரு திருக்கோயில் நிகழ்வுகளும் இங்கே முற்றுவிக்கப்படும் என்ற நிலையில் இக்கோவில் சிவகலைகளும் இங்கே வந்து நிறைவுறுகின்றன என்ற நிலையில் 'கோயில்'என்ற சுத்த நிலை நிறைநிலை அமைகிறது எனக் கொள்ள இடம் தருகின்றது.

அடிகளின் வரலாற்று அடிப்படையில் பெருந்துறை புகுதல் பேரின்ப வெள்ளம் மூழ்குதல் என்ற இருபெருஞ் செய்திகளை எடுத்துக்காட்டி முன்னதை கோயில் மூத்த பதிகத்திலும் பின்னதாக நின்ற பேரின்ப வெள்ளம் மூழ்குதலைக் கோயில் திருப்பதிகத்திலும் அருளியுள்ளார் என்ற குறிப்பைக் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கால் அறியலாம்.

பொன்னம்பலத்திற் கூத்தப்பெருமானுடன் கலந்ததும் அடிகள் அருளிய அனைத்துப் பதிகங்களும் வாசகம் என்ற பெயரால் ஒன்றிய ஒருமைத் திருவருளனுபவத் தலைப்பால் இணைப்புறுத்தப் பெற்று திருவாசகம் எனப்பெற்றதும் ஆகிய அருளியல் நிகழ்வுகள் அமைகின்றன.

பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம் மூழ்கிய புனிதன் மொழிந்த வாசகமே அதற்கு வாக்கியம். தூசகல் அல்குல்வேய்த் தோளிடத்தவனே' என்பது நால்வர் நான்மணிமாலையில் அமைந்த சிவப்பிரகாசரின் திருவருட் சொல் அமுதம். கோயில் திருப்பதிகம் என்ற இரண்டாம் திருப்பதிகத்தின் இறுதிப்பாட்டு'தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னை சங்கரா யார் கொலோ சதுரர் அந்த மொன்றிலா ஆனந்தம் பெற்றேன். யாது நீ பெற்றதொன் றென்பால் சிந்தையே கோயில் கொண்டவெம்பெருமான் திருப்பெருந்துறை உரை சிவனே எந்தையே ஈசா உடலிடங்கொண்டாய் யானிதற்கு இலன் ஓர் கைம்மாறே'' என்பது பேரின்ப வெள்ளம் மூழ்கிய அனுபவம் ஆகியவைகளை இதிற் காணலாம்.

## கணக்குக் குறிப்பு

கோயில் மூத்த திருப்பதிகத்தின் முதல் திருப்பாட்டு குறிப்பினை உட்கொண்டது என்பது மரபுவழிச் சிந்தனை. இதனை அறிவதற்கு ஒருவனைக் கணக்குக் குறிப்பு ஒன்றை அருளாளர்கள் அருளியுள்ளார்கள்.

ஒலியாலும், தன்மையாலும் ஒரு பொருளைக் கேட்டும் துய்த்தும் அறிதல் போலவே ஒரு பொருளை எண்ணாலும் எழுத்தாலும் அறியும் முறை ஒன்று உண்டு என்பதைத் திருநாவுக்கரசர் திருவாக்கால் அறியலாம். எண்ணும் எழுத்தும் வாழும் உயிர்க்கு இருகண் என்ப கண்கள்

இரண்டும் இருவேறு பொருள்களைப் பார்த்தல் இல்லை. ஒன்றை இருவகைகளிற் பார்க்கின்றன.

*"எண்ணவன் காண் எழுத்தவன் காண்"*

*திருவலிவலம் - திருத்தாண்டகம் - 7*

*எண்ணாகி எண்ணுக்கோர் எழுத்தும் ஆகி"*

*நின்ற திருத்தாண்டகம் -2*

*"எண்ணுநலின் எழுத்தை"*

*திருக்கற்குடிதிருத்தாண்டகம் - 3*

*"எண்ணாகி எழுத்தாகி இயல்பும் ஆகி"*

*திருப்பாசூர்த் திருத்தாண்டகம் -1*

*எண்ணும் எழுத்தும் சொல்லானாய் போற்றி"*

*வேற்றாகி என்ற கயிலைப் பதிகம் -7*

என்பவை நாவரசரின் அருள்வாக்குகள்.

"ஒன்று வெண்பிறை" என்ற தொடக்கத்தையுடைய தனித் திருக்குறுந்தொகையின் ஒன்பதாம் பாட்டின் இறுதியாக, நாவரசர் அமைத்துப்பாடிய வரி.

"ஒன்பது ஒத்து நின்று என்னுள் ஒடுங்குமே" என்பது, இதனை ஒட்டியே திருவருட்பிரகாச வள்ளற் பெருமான்.

"ஒன்பதாகிய உருவுடைப் பெருமான் ஒற்றிப் பெருமான்"

என அருளியுள்ளதை நோக்குக. எழுத்தால் அறியும் பெருமானை எண்ணாலும் அறிதல் வேண்டும் என்பதாகிய குறிப்பு உயிரோட்டமாக அமைவதைக் காணலாம்.

'சிவசிவ' என்பதை முன்மொழிந்து பயந்தரும் முறையைத் திருமந்திரம் எடுத்து இயம்புகிறது.

"சிவசிவ" எனப்பிரித்தால் 'சி' என்பது

இறைவனாக அமைய 'வ' என்பது அருட் சக்தியாக அமைய, உடையாள் உன்றன் நடு இருக்கும் என கருத்துத் தெளிவு உண்டாகும். அடுத்து "சிவசிவ" என அமைந்தால் உடையாள் நடுவு நீ இருத்தி" என்பதும் புலனாகும். 'சிவசிவ' எனக்கூறின் இரண்டு உண்மைகள் புலப்படுகின்றன. எழுத்தால் உணர்ந்த குறிப்புப் பொருளை எண்ணாலும் உணரும் முறை உண்டு. '

'ஓம்' எனும் பிரணவத்தின் விரிவே 'சிவாய நம' எனப்பெறும் "ஓம்" என்பது அ, உ, ம, புள்ளி எனப்பெறும் விந்து, நாதம் என ஐந்தாய் நிற்கும். 'அ' என்பதே சிவபரம்பொருள். 'உ' என்பதே அருட்சத்தி 'ஓ' என்பது உயிரெழுத்து நெடுங்கணக்கில் பத்தாம் எழுத்து 'ஐ' என்பது இடைக்கூட்டே 'ஓ' என்பது. இது எண் முறை. 'அ' என்பது தமிழ் நெடுங்கணக்கில் 'எட்டு' என்ற எண்ணைக் குறிக்கும் 'உ' என்பது இரண்டு என்ற எண்ணைக் குறிக்கும்.

எட்டு என்ற (8) எண்ணில் (2) இரண்டு என்ற எண் அடங்கி நிற்கும் 'அ' என்பது 'எட்டு என்ற எண்ணையும் சிவத்தையும் குறிக்கும். 'உ' என்பது இரண்டு எண்ணையும் அருட்சத்தினையும் குறிக்கும்.

எட்டு என்ற எண்ணில் இரண்டு என்ற எண் அடங்கி நிற்கும் ஆகையால் உடையாள் உந்தன், நடுவிருக்கும் என்பதும் 'உ' என்ற எழுத்தில் 'அ' என்ற எழுத்து அடங்கி நிற்கும் ஆகையால் உடையாள் நடுவுள் நீ இருத்தி, என்பதும் நாம் எண்ணாலும் எழுத்தாலும் உணரும் அமைப்பு முறைகளாம்.

இனி "அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பது" என்பதையும் இவ்வாறே காணலாம்.

"ஓம் என்ற பிரணவத்தையும் 'சிவாயநம' என்பதையும் இணைத்தால் 'அ' என்பதன் விரிவே 'சி' என அமைகிறது. 'உ' என்பதே 'வ' என அமைகிறது. எண் அடிப்படையில் அ, உ என்பன (8+2=10) எட்டும் இரண்டும் என நின்று சி. வ என்ற எழுத்துக்களாய், கூட்டுநிலையில் பத்து என நின்றன. ந, ம என்பன மெய்யெழுத்து வரிசையில் எட்டாவதும், அதன்மேல் நின்ற இரண்டாவதும், கூட்டுநிலையில் பத்து என நின்றவைகள். பல எழுத்துக்களாகிய நம என்பனவும் எட்டும், இரண்டும் எனப்பிரிந்து நின்று, கூட்டமைப்பில் 'பத்து' என நின்றன.

சிவ/ய/நம

என்பதில் 'சிவ' என்பதும் பத்து 'நம' என்பதும் பத்து. ஆயினும் எட்டு, இரண்டு எனநின்றே பத்து ஆயின. 'ய' என்ற எழுத்து உயிரைக் குறிக்கும். தமிழ் எண் கணக்கில் 'ய' என்பது பத்து என்பதைக் குறிக்கும். உயிர் எவ்வாறு 'பத்து' என நின்றது. உயிர் யாண்டும் தனித்து நிற்காது. 'நம' என்ற பத்தைச் சார்ந்து நிற்கும். அல்லது 'சிவ' என்ற பததைச் சார்ந்து நிற்கும் இந்தப் பத்திலாவது அந்தப் பத்திலாவது சேர்ந்து தான் நிற்க வேண்டும். ஆகையால் உயிர்க்கும் 'பத்து' என்ற எண் இருபாலாய் நின்று எண்ணின் அடிப்படையில் அமைந்த பெயராயிற்று. 'பத்து' என்பதில் உயிர் இருத்தல் என்பது பொதுநிலை. அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பது ஆனால் என்பது அனுபவநிலை. 'ஒன்பது' என நின்ற தொன்மைப்பொருள் 'ய' என்பதை இல்லமாக்கிக் கொள்கிறது. 'ய' என்பதே உயிர்.

"ஒன்பது ஒத்து நின்று என்னுள் ஒடுங்கும்" என்பது வாசீகர் வாக்கு. 'ய' கரத்தை இல்லமாகக் கொண்ட 'கோ' என்ற வகையில் ஆன்மாவானது இறைவனின் கோயிலாக அமைகிறது. ஒன்பது என்பதைத் தன்னுள் அடக்கிய அனுபவநிலையில் அடியவர்கள் பத்து என நின்றார்கள். அதனால் அவர்கள் 'பத்து' என்ற நிலையில் பத்தர் என பெற்றனர். உடையானையும் உடையாளையும் தமக்கு உடைமை எனப் பெற்றமையால் "பத்துடையீர் ஈசன் பழ அடியீர்" என்றார். ஒன்பது ஒத்துத் தம்முள் அடங்கியதைத் தம் அனுபவமூலமாக வெளிப்படுத்தும். 'கோயில்' என நின்றவர்கள் பத்து, பத்தர் பத்தர் எனப் பெற்றனர். அவர்களே நடமாடும் "கோயில் நம்பர்" எனப்பெற்றனர். "ஊனுடம்பு ஆலயம் எனப்பெற்றனர். அதனை ஒன்றில் இரண்டு என்ற வகையில்...

"அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பது" என்றார். அடியார் நடுவுள் இருந்தால் 'கோயில்'அனுபவம் வாய்க்கும் என்பதைக் குறிப்பில் உணர்த்தினார். பன்னிரண்டாந் திருமுறை அனுபவம் முழுவதும் 'கோயில்' என்பதற்கும் அவனேதானே ஆகிய அந்நெறி" என விளக்கி மெய்ப்பொருள் நிலையும் உய்ப்பெருநெறியும் இணைத்து வழங்கினார் மெய்கண்டார்.

திருநெறிய தமிழ் எனப்பெறும் திருமுறையில் எண், எழுத்து அடிப்படைகளில் வருவனவற்றைத் தொகுத்து

ஆய்தல் வேண்டும். அருளனுபவக் குறிப்புகளிற் பலவற்றை எண்ணாலும் எழுத்தாலும் இணைத்தால்தான் உணர முடிகிறது. அவ்வாறு அருளப் பெற்ற திருமுறைப் பதிகங்கள் பல உள்ளன.

திருஞானசம்பந்தர் சீர்காழியின் பன்னிரு நிலைகளைத் தாங்கிய பெயர்களில் தான் பத்தில் நின்றேன் என்று குறிப்பிட்டருளுகின்றார்.

## முடிப்புரை

எண்களின் அடிப்படையில் மெய்ப் பொருளை உணர்தல் ஒருவகை அனுபவ நிலை. அருணலஞ் சான்ற திருமுறை யாசிரியர்களின் அருளிப்பாடுகளைப் பண்ணின் அடிப்படையில் பொருளின் அடிப்படையில் ஆய்ந்து தெளிதில் போலவே எண்ணின் அடிப்படையிலும் ஆய்ந்து தெளிதல் உண்டு. இம்முறை ஏனைய இரண்டு முறைகளில் நின்று ஆய்ந்து தெளிதலை மறுக்கும் முறை ஒன்று. ஏனைய முறைகளைப்போலவே எண்ணாலும் ஆய்ந்து தெளிந்து திருவருளின்பம் துய்க்க இயலும் எனக் கொள்ளலாம். எண்ணின் அடிப்படையில் பல அருளனுபவச் செய்திகளை திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் முதன்மைப்படுத்தி அருள்வழியில் நின்று எடுத்துக்கொடுத்தார்கள். அவ்வகையில் நின்ற அருளனுபவ வழியே கோயில் என மலர்ந்து அது தில்லையாய் திருச்சிற்றம்பலமாய் பொன்னம்பலமாய் பன்னிரண்டாந்திருமுறை அரங்கேற்ற கோயிலாய் வெளிப்பட்டது என உணர்தல் நின்ற கோயில் அனுபவம் 'பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை எட்டினோடு இரண்டும் அறியேனையே' என்ற மணிவாசகர் வாக்கினையும் இணைத்துத் தெரிதல் வேண்டும். இவைகளையெல்லாம் தன்னுட் கொண்டுவந்து நிறுத்தும் மணிவாசகரின் கோயில் மூத்த திருப்பதிக. பாடலை இங்கே கண்டு தெளியலாம்

*உடையாள் உன்றன் நடுவிருக்கும்*
*உடையாள் நடுவில் நீயிருத்தி*
*அடியேன் நடுவில் இருவீரும்*
*இருப்பதனால் அடியேன் உன்*
*அடியார் நடுவில் இருக்கும் அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம்*
*முடியாமுதலே என்கருத்து*
*முடியும் வண்ணம் முன்னின்றே.*

## ஐந்து தலங்கள்

உலகம் பஞ்ச பூதங்களால் ஆனது. மண், நீர், தீ, வளி, வான் என்பன ஐம்பூதங்கள். இவை பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்றும் கூறப்பெறும். உலகம் ஐம்பூதங்களாலானது என்பதைத் தொல்காப்பியர்,

நிலந்தீ நீர்வளி விசும்போடு ஐந்துங்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின் - 1589


எனத் தொல்காப்பிய மரபியலிற் கூறியுள்ளார். உயிர்களது உடம்புகளும் ஐம்பூதங்களின் சேர்க்கையால் ஆனவையே. 'அண்டத்திலுள்ளது பிண்டத்தில்' என்பது பழமொழி.

ஐம்பூதங்களைப்பற்றித் தெளிவாகவும் நுட்பமாகவும் உணர்ந்த நமது பெரியோர்கள் ஒவ்வொரு பூதத்தின் பெயராலும் ஒரு தலத்தை ஏற்படுத்தினர். அவை பஞ்சபூதத் தலங்கள் எனப்படும். அவையாவன:

| | | | | |
|---|---|---|---|---|
| மண் | - | பிருதிவித்தலம் | - | காஞ்சிபுரம் |
| நீர் | - | அப்புத்தலம் | - | திருவானைக்கா |
| தீ | - | தேயுத்தலம் | - | திருவண்ணாமலை |
| வளி | - | வாயுத்தலம் | - | திருக்காளத்தி |
| வான் | - | ஆகாயத்தலம் | - | சிதம்பரம் |

கடல்விடம் நுகர்ந்த காசினி லிங்கம்
காஞ்சிமா நகருறை லிங்கம்
காவிரி வடபால் வருதிரு ஆனைக்
காவினில் அப்புலிங் கமதாம்
வடதிசை அண்ணா மலையினில் லிங்கம்
வன்னியின் வடிவுகா ளத்தி
வாயுலிங் கமதாம் சிதம்பர லிங்கம்
மாசில் ஆகாயலிங் கமதாம்.

*-தில்லைக்கலம்பகம் 32-*



# தட்சிணாமூர்த்தி

மூலட்டான ஈசுவரர் கோயில் கருவறையில் வெளிப்புறம் தெற்குப் பக்கத்தில் தட்சிணாமூர்த்தி கோட்டம் உள்ளது தட்சிணாமூர்த்தி தத்துவம் வருமாறு:

கல்லாலின் நிழலில் தட்சிணாமூர்த்தி வீற்றிருக்கிறார். இவர் சிவபரம் பொருளின் பரமகுரு வடிவாகிய தோற்றம். அறம் பொருள் இன்பம் வீடு மொழிந்தார் என்று சம்பந்தர் திருமுதுகுன்றப் பதிகத்தில் பாடுகிறார். முனிவர் நால்வர்க்கும் இவர் செய்த உபதேசத்தை வியந்து ஆதிசங்கரர் பாடுகிறார். 'வட விருட்சத்தின் அடியில் விருத்தரான சீடர்கள், அவர்களுடைய குரு இளைஞர் (16 வயது) குருவின் உபதேசம் மௌனம், சீடர்களுக்கு இருந்த எல்லாச் சந்தேகங்களும் நீங்கிவிட்டன' என்று இந்த குரு தம் வலது கையில் பிடித்த சின் முத்திரையால் மும்மலம் வேறுபட்டு ஒழிய மொயத்து உயிர் (ஆன்மா) சிவ பரம்பொருளின் தாள் நிழலில் அடங்கும் உண்மையைக் கட்புலனாகும் அடையாளமாக் காட்டுவது இவ்வடிவம். கற்றோருக்கே அன்றி மற்றோருக்கு இது விளங்காது.

**அறிஞர் மு. அருணாசலம்**

சொற்சுவை என்ற நூலில்



*கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா*
*றங்கமுதற் கற்ற கேள்வி*
*வல்லார் கணால்வருக்கும் வாக்கிறந்த*
*பூரணமாய் மறைக் கப்பாலாய்*
*எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை*
*யிருந்தபடி யிருந்து காட்டிச்*
*சொல்லாமற் சொன்னவரை நினையாமல்*
*நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்.*

**– பரஞ்சோதி முனிவர் –**

தட்சிணாமூர்த்தியைத் தென்முகக் கடவுள் என்பர். 'ஆலமர் செல்வர்' என்ற சங்க நூல்கள் இவரைக் குறிப்பிடுகின்றன. தட்சிணாமூர்த்தியே எல்லாக் கலைகளுக்கும் ஞானங்களுக்கும் உரிய தலைவராவர்.


"மனித குலத்தின் விழுமிய பெருஞ்செல்வமாக விளங்கும் சிந்தனைத்திறன், சிந்தித்து உணரவல்ல உரிமைச்சிறப்பு, சிந்தித்து உணர்வதனால் விளையும் தெளிவு நலம், மோன வரம்பாகிய ஞானநலம் முதலிய, அரிய பல நுட்பக் குறிக்கோள்களைத் தட்சிணாமூர்த்தியுருவம் தக்காங்கு விளக்கிக்கொண்டு தனிப் பெருஞ்சிறப்புடன் திகழ்கிறது" என்கிறார் தத்துவமேதை டாக்டர் இராதாகிருஷ்ணன்.

எல்லாச் சைவத் திருக்கோயில்களிலும் கருவறையில் தென்புறச் சுவரில் ஒரு மாடத்தில் தட்சிணாமூர்த்தி எழுந்தருளியிருப்பார். ஞான நன்னெறியில் வேட்கை உடையவர்கள் இவரை வழிபடு கடவுளாகக் கொண்டு போற்றுவர். வேதாந்த சித்தாந்த சமரச வித்தக ஞானச் செல்வராகிய தாயுமான சுவாமிகள், "சிரகிரி விளங்கவரும் தட்சிணாமூர்த்தி சின்மயானந்த குருவே" என இவரைப் போற்றித் துதித்திருக்கிறார்.

– தெய்வத் திருவுருவங்கள் என்ற நூலில்

'ஞானத் தமிழாகரர்' **ந. ரா. முருகவேள்**

(தணிகைப் பதிப்பக வெளியீடு)



# கோயில் (சிதம்பரம்)

**தமிழ்க்கடல் 'ராயசொ'**

*திருமூலநாதர் - உமையம்மை சபாநாயகர்- சிவகாமியம்மை*

*சம்பந்தர்: 2, அப்பர் : 8, சுந்தரர் : 1*

கோயில் என்றாலே சிதம்பரத்தைக் குறிக்கும். சைவர்களுக்குக் கோயில் சிதம்பரம்; வைணவர்களுக்குக் கோயில் திருவரங்கம். சிதம்பரத்துக்குப் பொன்னம்பலம் என்று பெயர். அம்பலம், அரங்கம் இரண்டுமே சபையைக் குறிக்கும்.

தில்லைப்பதி மூவர் தேவாரம் பெற்றதோடு திருவாசகத்தால் பெரிதும் சிறப்பிக்கப் பெற்றது. திருவாசகத்தில் சிதம்பரம் 65 இடங்களில் செப்பப் பெறுகிறது. திருவாசகம் அருளிய பெரியார் மாணிவாசகப் பெருமான் திருவாசகத்தின் பொருள், 'கூத்தப்பெருமானே' என்று காட்டித் தில்லைத் தலத்திலேயே கூத்தப்பெருமான் திருவடி நீழலில் இரண்டறக் கலந்தார் என்ப.

தேவார திருவாசகம் தவிர, பன்னிரு திருமுறைகளுள் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினொராம் திருமுறை, பெரியபுராணம் ஆகிய அனைத்திலும் தில்லைக்கூத்தன் பெருமை பெருகப் பேசப் பெற்றிருக்கின்றன.

திருநீலகண்ட நாயனார், திருநாளைப்போவார் நாயனார், கூற்றவநாயனார், கோச்செங்கட் சோழ நாயனார், கணம்புல்ல நாயனார் ஆகிய அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஐவரும் மறைஞான சம்பந்த சிவாச்சாரியார், உமாபதி சிவாச்சாரியார் ஆகிய சந்தான குரவர் நால்வருள் இருவரும் வீடுபேறு அடைந்த பெருமைபெற்ற தலம் தில்லை.

மணிவாசகப் பெருமான், 'திருச்சிற்றம்பலக் கோவையார் பாடி அருளிய பதி. சேரமான் பெருமாள் நாயனார் "பொன் வண்ணத்து அந்தாதி" பாடிய புண்ணிய பதி.

சேக்கிழார் அடிகள் "பெரியபுராணம்" பாடி, யானைமீது இவர்ந்து அநபாய சோழனால் சிறப்பிக்கப்பெற்று அரங் கேற்றிய அழகிய பதி.

நம்பியாண்டார் நம்பியால் தேவாரப் பதிகங்கள் கண்டெடுக்கப் பெற்ற திருத்தலம்.

**-திருத்தலப்பயணம்-**

*கோயில் நூலில் திருத்தலம் பயணத்திலிருந்து கூறப்பட்டது.*


## சிவன் விரதங்கள் - 8

1. கார்த்திகை மாதம் திங்கட்கிழமைகளில் கைக்கொண்டு பின் தொடர்ந்து ஒவ்வொரு திங்கட்கிழமையும் இருப்பது.
2. மார்கழி திரு ஆதிரை நாளில் மேற்கொண்டு. பின் மாதந்தோறும் வரும் திருஆதிரை நாளில் இருப்பது.
3. உமாமகேஸ்வர விரதம், கார்த்திகை மாதம் பௌர்ணமியில் கைக்கொண்டு பின்வரும் எல்லாப் பௌர்ணமி நாட்களிலும் இருப்பது.
4. மாசி, தேய்பிறை சதுர்த்தசி (சிவராத்திரி) யில் தொடங்கி ஒவ்வொரு மாத சிவராத்திரியிலும் மேற்கொள்வது.
5. கேதாரேஸ்வர விரதம் – புரட்டாசி வளர்பிறை அட்டமி முதல் ஐப்பசி அமாவாசைவரை இருப்பது.
6. பங்குனி உத்திரநாளில் திருமண விரதம் கடைப்பிடிப்பது.
7. தை சதுர்த்தசியில் பாசுபத விரதம் இருப்பது.
8. வைகாசி வளர்பிறை அட்டமியில் அட்டமி விரதம் இருப்பது.

## உமை விரதங்கள் - 3

1. சித்திரை மாதம் வளர்பிறை வெள்ளிக்கிழமை தொடங்கி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இருப்பது.
2. ஐப்பசி உத்திரநாளில் இருப்பது.
3. புரட்டாசி வளர்பிறைப் பிரதமை முதல் நவமி வரையில் இருப்பது.


## World Saiva Flag Day on March10




World Saiva Flag Day falls on March10. It is observed on the Maha Sivarathri Day by Saivaites all over the world including Sri Lanka under the auspices of World Saiva Council. This year, Sri Lanka Branch of the World Saiva Council, is making arrangements to organize, the Flag Day on a large scale than on previous occasion. On this day, the Saiva Flag with the Nanthy symbol depicted on it will be sold to the Saiva public in Hindu temples, schools and in public places by members and volunteer organizations.

The WSC Sri Lanka Branch has requested Saivaite organizations interested in participating in this event to contact Dr. Muthiah Kathirkamanathan, Secretary at 9, Jaya Road Colombo 04. For clarifications, they can call President K. Thyaparan on 2502606, Vice President S.Dhanabalaa on 077-7631787 or Secretary M.Kathirkamanathan on 077-7656070.

***Source : OMLANKA Sri Lanka News Website***



# சிவலிங்கம்

க. பரமேஸ்வர தீக்ஷிதர்
சிதம்பரம்

*"தொல்லை விளைவந்து சூழாமுன் தாழாமே*
*ஒல்லை வணங்கி உமையென்னும் - மெல்லியல் ஓர்*
*கூற்றானைக் கூற்றுருவங் காய்ந்தானை வாய்ந்திலங்கு*
*நீற்றானை நெஞ்சே நினை"*

*– அம்மையார்.*

சிவபெருமானார் ஆன்மாக்கள் தம்மை வழிபட்டுய்யுமாறு கொண்ட நிர்குண சொரூபத்தின் சகல வடிவமே இலிங்கமாம்.

அது சதாசிவ சொரூபம். கர்மஸாதாக்ய வடிவமாகிய அதிற் பீடம் சக்தியையும், இலிங்கபாகம் சிவத்தையும் உணர்த்தும். இச் சாதாக்யத் திருமேனி ஸர்வான்மாக்களையும், சர்வாண்டங்களையும் அடக்கியிருக்கும் பரம காரணனை விளக்கியுள்ளது.

ஆதலின் உலக மக்களனைவரும் எளிதிற்றியானித்து வழிபாடு புரிதற்குச் சிறந்த சின்னமாக உள்ளது. இதைக் காட்டினும் சிறந்ததொரு சின்னம் வேறில்லை.

இலிங்கமென்ற சொல்லே அடையாளம் என்னும் பொருள் பற்றி எழுந்ததேயாம். சிவலிங்கமெனும் சொல்லை ஏழுவேற்றுமைகளில் வைத்துப் பிரித்துப் பொருள் கொள்ளலாகும் முறையே முதல் வேற்றுமையில் சிவனே இலிங்க வடிவன். 2. சிவனை உருவாகக் கொண்டதே இலிங்கம். 3. சிவனோடே அச்சிவனாலேயே (உண்டான) இலிங்கம். 4. சிவனின் பொருட்டு (சிவபூஜைக்காகவே) இலிங்கம். 5. சிவனிடமிருந்து (இது முதலான சகல சின்னங்களும் உண்டானது) சிவலிங்கம். 6. சிவனுடைய வடிவே இலிங்கம். 7. சிவனிடத்திலேயே சகலமும் வியாப்தம் – இலிங்கம் இன்னும் இப்பதத்தின் விளக்கங்களை விரிவாக வடமொழி, தென்மொழி நூல்களில் கண்டு இன்புறலாகும்.

இச்சிவலிங்கம் பரார்த்தலிங்கம் என்றும், இஷ்டலிங்கம் என்றும் இருவகையாகும். இவற்றுள் பரார்த்தம் என்பது ஐவகைத்து, 1. சுயம்பு, 2. காணபம், 3. தெய்விகம், 4. ஆரிஷம், 5. மானுஷம் என்பன.

இஷ்டலிங்கமாவது அவ்வவரும் சுவார்த்தமாய்ப் பூஜித்தற் பொருட்டு தத்தம் குருவினிடத்திற் பெறுவதாகும். மற்றது பரார்த்தமாக இப்பூவுலகின் கண்ணே விசேடித்துக் கூறப்பட்ட 1008 சிவாலயங்களிலும் அப்பரார்த்த பூஜைக்குரியோரால் காலந்தவறாது பூஜிக்கப்பட்டு வருவதாகும். அவற்றுள், சுயம்பு – தானே தோன்றியது. காணபம்–கணங்களால் பூஜிக்கப் பெற்றவை, தெய்விகம்–விஷ்ணு, பிரம்மா, தேவேந்திரன் முதலாய தேவர்களால், அவர் தம் பூஜார்த்தமாக ஸ்தாபிக்கப் பெற்றனவாம். ஆரிஷலிங்கம் என்பது வியாக்ரபாதர், பதஞ்சலி, விபசித்து, வசிஷ்டர் முதலான குருசிரேஷ்டர்களினால் போற்றப் பெற்றனவாகும். மானுடர்களால் ஸ்தாபிக்கப் பெற்றவையே மானுஷலிங்கம் எனப்படும்.

இவ்வாறு வேறுபட்ட இலிங்கஸ்தாபனத்தைப் பற்றி "தைத்திரிய ஸ்ரீ கிருஷ்ண யஜுர் வேத உபநிஷத்" நாராயண வல்லியில் – "திவ்யலிங்கத்துக்கு நமஸ்காரம்" என்று தேவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கத்தையும், "பவலிங்கத்துக்கு நமஸ்காரம்" என்று மானுட லிங்கத்தையும், "ஆத்ம லிங்கத்துக்கு நமஸ்காரம்" என்று இருதய குகையில் விளங்கும் ஆன்மலிங்கத்தையும் (சலன லிங்கம்), "சர்வலிங்கமும் ஸ்தாபிற்கப்பாலது" என இதர வஸ்துகளாலாய லிங்க ஸ்தாபனத்தையும் எடுத்து மொழியப்பட்டு இருக்கிறது.

இஷ்டலிங்கத்தில் கொள்ளற்பாலன 1. பச்சை மண்ணாலாயது, 2. சுட்ட மண்ணிலிங்கம், 3. மரத்தாலானது, 4. சிலாலிங்கம், 5. உலோகத்தினாலான வார்ப்புலிங்கம், 6. நவரத்தினங்களால் ஆன லிங்கம், 7. மணிலிங்கம், 8. இரசலிங்கம், 9. பாணலிங்கம், 10. சுயம்பு லிங்கம் ஆகியன.

இவற்றில் பச்சை மண்ணாலாய இலிங்கம் முதல் சிலா லிங்கம் வரை ஒன்றுக்கொன்று பப்பத்து மடங்கு உயர்ந்த புண்ணியத்தை நல்கும். அவற்றிலும் வார்ப்பு லிங்கம் நூறு மடங்கு நன்று. அதனினும் ரத்தின லிங்கம் அனந்த மடங்கு உயர்வு. மணிலிங்கம் லட்சம் மடங்கு அதிக குணம் வாய்ந்தது. பாணலிங்கம் பூஜிக்கின் அதிற்கோடி மடங்கு புண்ணியந்தரும். இரசலிங்கமும், சுயம்பு லிங்கமும் அவற்றின் அதிகம் பயன் தருவன. இக்கருத்தை மறை ஞான சம்பந்ததேவனார் அருளிய,

*"மண்சுட்ட மண்மராங்கல் வண்செம் பெழுவாயு*
*மொண்மை யிரத்தினந்தா னும்"*
*"மணிவான லிங்கமிர தஞ்சுயம்பு தானு*
*மெணிலிவையொன் றுக்கொன்றேற் றம்."*

என்னும் குறள்களாலறியலாம்.

இஷ்டலிங்க பூஜையில் பெரும் பகுதி பாணலிங்கமே எல்லாராலும் பூஜிக்கப்பட்டு வருகின்றதொன்றாகும்.

கூத்தனுக்கு குடமுழா முழக்கும், வாணாசுரன் தனது ஆயிரங்கரங்களால் உளுந்து பிரமாண முதல் முழத்தளவினது வரையிலான இலிங்கங்களை பூசித்து நதியிலிட்டவையே வாண லிங்க மெனவும், பாண லிங்கமெனவும் படும்.

இந்த பாண லிங்கம் பூசிக்கப்பட்டு வரும் ஸ்தானங்களில் இலிங்காத்ரியும், காளிகாவர்த்தமும், ஸ்ரீகிரியும், கன்யகாச்ரமமும் கன்யா தீர்த்தமும், நேபாளமும், மஹேந்திர பர்வதமும், அமரேச் வரமும் அடங்கும்.

இம்மாதிரியான பாண லிங்கத்தை துலையிட்டு நிறுக்கின் அதன் எடையில் ஒவ்வொரு முறையிலும் மாறுதல் உண்டாகும்.

பாண லிங்கத்தில் வெண்மை, செம்மை, கருமை என நிறம் வாய்ந்தவை முறையே அந்தணர் முதலாய நால் வருணத்தார்க்கும் பூசிக்க ஏற்றனவாம். கிடையாவிடத்து கருமை எல்லார்க்கும் உரியனவாம். இவற்றுக்கு பீடம் அஷ்டகோண, ஷட் கோண, சதுஷ் கோண, விருத்தம் உடையதாக அவ்வவ் வருணத்தாரால் அமைத்துக் கொள்ளற் பாற்று, அன்றியும் விருத்தமென்கிற வட்டமான பீடம் எல்லார்க்கும் ஆம்.

இவ்வாறு பீடத்திலிருத்தி பூசிக்கின் "பாண லிங்கத்தில் நின்மல நிராமயராய் சுத்த ஷாட்குண்ய பரிபூரணம் வாய்ந்த சிவபெருமான் மற்றைய மண்ணாதிலிங்கங்களிற் செய்யப் பெற வேண்டிய ஆவாஹன முதலியன இன்றியே அனவரதமும், அப்பாண லிங்கத்தின்றும் நீங்காது இருப்பர்" என சைவ நூல்கள் இயம்புவதாலேயே பாண லிங்கம் எல்லாராலும் பூசிக்கப்பட்டு வருவதாயிற்று.

இப்பாண லிங்கத்தில் தூலமாயுள்ள பக்கத்தை முடியாயும், உன்னதமான பாகத்தை முகமெனவும், குவிந்திருக்கும் இடம் அடிபாகமாகவும் கொண்டு, பாண லிங்கத்தின் உயரத்தில் 5–இல் 2 பங்கை பீடத்துட் பதித்து அஷ்ட பந்தனஞ் சாத்திப் பூசித்து வர வேணும்.

இங்ஙனம் பிரதிட்டிக்கு முறைமையெல்லாம் சிவனிடத்து பக்திமிக்கு அச்சதா சிவனொருவனையே நினைத்து அன்பு மீதுறப் பூசிக்க வேண்டி எழுந்தனவேயன்றி அன்பும், பக்தியுமின்றி, மந்திரமின்றி எவ்வளவு முறையோடு தாபித்து பூசிக்கினும் அது பயனாகா.

*"நட்ட கல்லை தெய்வமென்று நாலுபுட்பஞ் சாத்தியே,*
*சுற்றிவந்து மொனமொனென்று சொல்லு மந்திரமேதடா,*
*நட்டகல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்*
*சுட்ட சட்டி சட்டுவங் கறிச்சுவை யறியுமோ"*

எனும் சிவ வாக்கியத்தில் நாதன் உள்ளிருக்கையில் நட்ட கல்லும் பேசும். சுட்ட சட்டி சட்டுவங் கறி சுவையறியும். இதற்கு சொல்லு மந்திரம் ஏது–காரணம் (ஹேது ஒ என்பது அசை)

பின்னும் சிவலிங்கத்தில் அவ்யக்தமென்றும், வியக்தா வியக்த மென்றும், வியக்த லிங்கமெனவும், மூவகையாக அவ்வுருவகையும் பிரியும்.

அவ்யக்த மென்பதே அருவுருவம். கண்ணுக்கு சிவலிங்க வடிவு உருவமாய் தோற்றினும் கண், காது, மூக்கு முதலிய அவயவங்களால் முற்றுப் பெறாமல் விளங்குஞ் சிவலிங்கமெல்லாமே அவ்யக்த லிங்கங்கள்தாம் ஆயின், பின்னை வியக்தா வியக்த லிங்கம் என்பதில் அவ்விலிங்க மத்தியில் ஒரு முகமோ நாற்புறங்களிலும் முகத்துடனோ, ஐம்முகங்களுடனோ அமைந்து இருப்பது ஆகும்.

இவ்வியக்தா வியக்த லிங்கம் ஒரு முகத்துடன் சிதம்பர சபையில் இரகசியத்தின் முன்னர் வைத்து பூஜிக்கப்பெற்று வருகிறது காணலாம்.

பின்னும் காளஹஸ்தி, நேபாளம் முதலிய இடங்களிலும் இந்த வியக்தா வியக்த லிங்கம் பூசிக்கப்பட்டு வருகிறது.

அருவ உருவாக வழிபடும் இச்சிவலிங்கமே வியக்த லிங்கமாக வழிபடப்படும் இடத்து உருவம் கொண்டு–சர்வதோபத்ரம்–வர குத்தமானம்–சைவாதிகம்–ஸ்ரீராசிகம் என நான்காகவும், பின் அந்நான்கு பதினாறாயும், அவையே அறுபத்து நான்காயும் விரிவடையும்.

இவற்றுள் 25 வியக்த லிங்கங்கள் ஆவன.

1. சந்திரசேகரர், 2. உமாசேகர், 3. ரிஷபாரூடர், 4. சபாபதி, 5. கல்யாணசுந்தரர், 6. பிக்ஷடானர், 7. காமாரி, 8. காலாரி, 9. திரிபுராரி, 10. ஜலந்தராரி, 11. மாதங்காரி, 12. வீரபத்ரர், 13. ஹரிஹரர், 14. அர்த்தநாரி, 15. கிராதர், 16. கங்காளர், 17. சண்டேசானுக்ரகர், 18. நீலகண்டர், 19. சக்ரதானர், 20. கஜாமுகானுக்ரகர், 21. சோமாஸ்கந்தர், 22. திருஏகாபதர், 23. சுகாஸனர், 24. தக்ஷிணாமூர்த்தி, 25. இலிங்கோத்பவர்.

அவ்வியக்த லிங்கத்தினின்றே வியக்த லிங்கம் உண்டானதற்கு காலாரியும், இலிங்கோத் பவருமே அறிகுறி.

இவ் வியக்தலிங்கங்களான இருபத்தைந்து மூர்த்தங்களுமே சிதம்பர ஸ்ரீ மூலநாத கர்பகிரஹ சுற்று மதிலின் புறத்தில்மேல் பாகத்தில் தென்புறத்தில் தக்ஷிணாமூர்த்தி சன்னதியிற் தொடங்கி வடபாற் சண்டேசர் சன்னதி வரையிற் சித்திர ரூபமாக முற்காலத்தில் வரையப் பெற்றிருந்தவாறே சைவத் திருவாளர் நற்றிருப்பணிச்சீலர், ஸ்ரீ கருமுத்து எஸ். சொக்கலிங்கஞ் செட்டியார் அவர்கள் தமது மூலநாதற் கோயிற் திருப்பணியில் புதுக்கியிருக்கின்றார்கள்.

இவ்வாறு ஆலயத்தினுள் சிதம்பர ஸ்ரீமூலநாதர் போன்று கருவறையில் பூசனையிலுள்ள சிவலிங்கம் சூக்குமலிங்கமெனவும், அவ்வக்கோயிலின், விமானம் கோபுரம் முதலியன தூலலிங்கமெனவும், நந்தி முதலியன காரணலிங்க மெனவும் பலி பீடம் பத்ரலிங்கமெனவும் கொள்ளப்படும்.

சூக்குமலிங்கம் பதியையும், காரணலிங்கமாகிய நந்தியெம் பெருமான் பசுவையும், பத்ரலிங்கமாகிய பலிபீடம் பாசத்தையும் உணர்த்துமென்பர். சிவபக்தியிற் சிறந்தோரால் இருதய கமலத்தினுள் தியானிக்கப்பட்டு கற்பிதமாய்ப் பூசிக்கப்படும் ஆத்தும சிவலிங்கம் "சலன லிங்கம்" எனப்படும். இவ்வகை ஆத்தும லிங்கத்தை திருமூலர் தமது திருமந்திரத்தில் பிண்ட லிங்கப் பகுதியில் ஒரு மந்திரத்தால் அறிவுறுத்துகின்றார்.

*"மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்*
*மானுட ராக்கை வடிவு சிதம்பரம்*
*மானுட ராக்கை வடிவு சதாசிவம்*
*மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே"*

இம்மந்திரத்தில் சிதம்பரத்தைக் குறிப்பிட்டது என்னையெனில் இச்சிதம்பர சபையின் கண்ணே அனைத்துலகும் உய்யும் வண்ணம் உமாதேவியார் காண அனவரதமும் ஆனந்தக் கூத்தாடுகின்ற வியக்த லிங்கமாகிய சபாபதியும், அவர் முன்னர் "அழகிய திருச்சிற்றம்பலமுடையார்" எனும் திருநாமத்தோடு விளங்கும் சதா சிவ சொரூப சகல மூர்த்தியாகிய சந்திரமௌலீஸ்வரரும் (ஸ்படிக லிங்கமும்), நிர்குணமாய், வேதங்களிலுமறியப்படாத தாய் நிரதிசயானந்த நின்மலமாய் பரம ரகசியமாய் விளங்குகின்ற அருவமான ஆகாச லிங்கமெனவும், சிதம்பரமெனவும் படுகின்ற இரகசிய ஸ்தானமும், பதஞ்சலி வியாக்ரபாதராற் பூசிக்கப்பெற்ற சுயம்பு மூர்த்தியும், பாற்கடல் ஈந்த பிரானுமாகிய ஸ்ரீ மூல நாத சிவலிங்கமும் ஒரு கருத்திற் கொள்ளற் பொருட்டே எனத் தோன்றுகின்றது.

திருக்கூத்து–சபாபதி, சதாசிவம்–சந்திரமௌலீசர், சிதம்பரம்–அருவமாகிய, ரகசியம் சிவலிங்கம் – ஸ்ரீ மூலநாதர்.

இவ்வாறு இந்நான்கு லிங்கத்தினிடனும் ஒத்த கருத்துக் கொண்டே திருவாவடுதுறை யாதீனத்து சிவஞான சுவாமிகள் தாம் இயற்றிய சிவநாமக்கலி வெண்பாவில்

***"பொன்னி வடகரையிற் பொன்னம்பலக்கோயின்***
***மன்னு சிவகாமி மகிழ்ந்தேத்த–நன்னடன***
***மாடுஞ் சபாபதியே யம்மையுமை கண்குளிர***
***நாடுநீ திருமூல நாயகா...."***

என உரைக்கின்றார்.

சிவலிங்கங்கள் பஞ்ச பூதலிங்கங்களாக (மண்–நீர்–தீ–வளி–வெளியாக) பஞ்ச பூதஸ்தலங்களில் ஆராதிக்கப்பட்டு வருவது யாவருமறிந்த ஒன்றே.

இங்ஙனமே சிவனது அட்டமூர்த்தமும் சிவலிங்க சொரூபமே இதில் யஜமானனாகிய தானே இலிங்கவடிவாகின்றான்.

*"எட்டுமூர்த்தியாய் நின்றியலுந்தொழி*
*லெட்டு வான்குணத் தீசனெம்மான்றனை*
*யெட்டு மூர்த்தியு மெம்மிறை யெம்முளே*
*யெட்டு மூர்த்தியு மெம்முளொடுங்குமே"*

(த. தி. குறுந்தொகை, அப்பமூர்த்தி)

இவ்யஜமானன் தாமியற்றும் வேள்வியிலும் ஓம குண்டரூபமாக இலிங்க பீடத்தை தாபித்து, அக்னிவடிவாகிய சிவலிங்கம் பிரதிஷ்டித்து தானேயதுவாக பாவித்து, பூசிக்கின்றனனென்று ஆகமங்கள் விதந்து ஓதுகின்றன.

ஆகவேதான் கும்பாபிஷேக முதலான பெருஞ்சாந்திகளை ஆலயங்களில் நிகழ்த்துங் காலத்து அவ்வஷ்டலிங்க மூர்த்தி சொரூபமாக எட்டு ஓம குண்டங்களும் ஸமஷ்டி சொரூபமாக பிரதான குண்டமும் அமைத்து யாகம் புரிகின்றனர்.

இக்கருத்தை திருவதிகை மனவாசகங்கடந்தார் தாமருளிய உண்மை விளக்கம் என்னும் தமது நூலிற் காப்பும் முன்னுரையும் நீங்கிய முதற் செய்யுளில் வலியுறுத்துகின்றார்.

*"நாற்கோணம் பூமி-புனல் நண்ணுமதியின்பதி,*
*ஏற்குமனல் முக்கோணமெப்போதும்-ஆர்க்கும்*
*அறுகோணங்கால்-வட்டமாகாய-மான்மா*
*வுறு காயமாமிவற்றாலுற்று."*

ஓர் சிவலிங்கம் நிறுவப்பட வேண்டிய பீடத்திற்கு 'பிண்டிகை' என்று பெயர். இது வட்டமாகவோ, சதுரமாகவோ இருக்கும். அதன்மேல் 'உபானம்' 'ஜகதி' 'குமுதம்' 'பத்மம்' 'கம்பம்' எனவும், நடுவே 'கண்டம்' எனவும் அதே போல் கவிந்த மேற்பகுதி 'பட்டிகை' 'நிம்னம்' 'கிருதாவரி' என்னும் பாகங்களும் அமையும். இவற்றில் ஆவுடையாரினின்றும் சிவலிங்க பாணத்தின் உயரப் பிரமாணம் வெளிப்புறம் நீண்டிருக்கும் பகுதி 'நாளம்' எனப்படும்.

இப்பீடப் பகுதியை ஆதாரமாகக் கொண்டே வேள்வி குண்டமும் அமைவதாக ஆராய்ச்சியாளராகிய அறிஞர் கூறுவர்.

எங்ஙனமெனின் முற்கூறிய உபானம் முதல் கம்பன் வரையிலான பகுதிக்கு சமமாக வேள்விக் குண்டத்தின் கீழ்மேகலையும், குண்டத்துக்கு சமமாக நடு மேகலையும், பட்டிகை, நிம்னம், கிருதாவரி என்பனவற்றுக்கு இணையாக குண்டத்தினது மேல் மேகலையும் கருதப்படும். குண்ட நாபியே இலிங்க 'நாள' மாகவும் ஹோம குண்டத்தின் யோனியே சிவலிங்கத்தின் இரத்தின நியாஸத்வாரமாகவும், குண்டத்தினுட் பாகம் யாவும் சிவலிங்கத்தின் ஆவுடையாராகவும், மூண்டெழும் கனலே ஜோதிர் மயமான சிவலிங்கமாகவும் உணரப்படுகிறது.

இவ்வாறு ஸ்தாபிக்கப்பட்ட சிவாக்னியாகத்தில் முன்னர் செய்யப் பெறும் பூர்வ தந்த்திரக் கிரியை யாவும் அங்ஙனம் பிரதிஷ்டித்த சிவனுக்குச் செய்யும் கர்பாதானாதி ஸம்ஸ்காரங்களுக்கு ஒப்பாகும் என்பர்.

இதனால் சிவாக்னி தாபிக்கப்படுகின்ற சிவயாக சாலையில் குண்டங்களை நிறுவும் போது பிருதிவி முதலான தத்துவத்தை உணர்த்துவதான ஈசானாதி பஞ்ச குண்டங்களாகவோ, அன்றி பல சர்வாதி அஷ்டமூர்த்தி சொரூபத்தோடு சமஷ்டி லிங்க தத்துவத்துடனாய நவ குண்டங்களாகவோ, அவ்வஷ்டமூர்த்தி சொரூபமே முப்பத்து முக்கோடி தேவதாபேதமாக ஒவ்வொரு குண்டத்துக்கும் ஒரொரு கோடி தேவதா சொரூபமாக முப்பத்து மூன்று குண்டங்களை அமைத்து ஒவ்வொன்றும் சிவலிங்க சொரூபமாகக் கருதி வேள்வியியற்றி பூசிக்கப் பெறுகின்றது.

இங்ஙனம் முப்பத்து மூன்று குண்டங்களையும் போது அவை முறையே சோம–சூர்ய–அக்னி குண்டங்களாக மூன்று பிராகாரமாக அமையும்.

சோம கலைகள் 16 குண்டங்களும், சூர்யாம்சம் 12 குண்டங்களும், அக்னியாம் மகமாக 5 குண்டங்களும் (விசேஷமாக இவ்வைந்துத் தக்ஷிணாக்னி, கார்ஹபத்யம், ஆஹவனியம், ஸப்யம், ஆவஸத்யம் எனும் யாக்ஞிக குண்டங்களாகும்) அமைக்கப் பெறும். இவ்வுத்தம பக்ஷமாகிய யாகசாலை இதுவரை நிகழாததொரு அற்புதமாக அமைக்கப் பெற்று இச்சிதம்பரம் ஸ்ரீ மூல நாதருடைய மஹாகும்பாபிஷேகம் சைவபூஷணம் சொக்கலிங்கஞ் செட்டியார் அவர்களுக்குக் கிடைத்தது, அவர்களும் பரம்பரை முன்னோரும் செய்த பாக்யமே. இவ்வாறு 33 குண்டங்களை அமைத்துப் பூசிக்கும் முறைமையை எடுத்து இயம்பி தாமே முன்னின்று தில்லை வாழந்தணர்களாகிய பொது தீக்ஷதாளின் பெரும் ஒத்துழைப்புடன் நடத்தித் தந்த எனது குருநாதரும், ஆசார்யவர்யருமாகிய பிரம்மஸ்ரீ க. மீ. ராஜகணேச தீக்ஷிதரவர்கள் விரும்பிக் கூறிய முறையே திரு செட்டியார் அவர்கள் மிகுந்த பொருட்செலவுடனும், பக்தியுடனும், காரணலிங்கமாக கருதற்பாலதாகிய துவாரபாலகரையும் புதிதாக நிர்மாணிக்கச் செய்து பிரதிஷ்டிக்கச் செய்து ஆலயத்துக்குரிய அங்கத்தைப் பூர்த்தி செய்ய விரும்புவதால் மங்காத புகழுக்குரிய பெருமை அடைகிறார்கள்.

முன்னர் கூறிய சிவயாக சாலைக்கு அமையும் குண்டங்கள் எல்லாவற்றுக்கும் அடிப்படையாக சதுரச்ரம் எனப்படும் நாற் கோண குண்டமே கருதப்படும்.

1. இது பிருதிவி தத்துவ லிங்கமாம்.
2. அர்த்த சந்திர குண்டம் – பாதிமதி வடிவம் கொண்ட இக்குண்டம் நீராகிய அப்பு தத்துவ லிங்கமாம்.
3. முக்கோண குண்டம் – தீ – தேஜஸ் தத்துவலிங்கம்.
4. அறுகோண குண்டம் – வாயு தத்துவலிங்கம்.
5. வட்ட குண்டம் – ஆகாய தத்துவ லிங்கம்.
6. பத்ம குண்டம் – சந்திர தத்துவலிங்கம்
7. எண்கோண குண்டம் – சூரிய தத்துவலிங்கம்
8. யோனி குண்டம் – யஜமான தத்துவலிங்கம்.
9. விருத்த குண்டம் – பிரதானம் – ஸமஷ்டி (ஆன்ம) தத்துவலிங்கம்

இதே பஞ்ச குண்டமாய் ஆகும் போது –

நாற்கோணம் – தத்புருஷலிங்கம் – கிழக்கு தெற்கில் அகோர லிங்காத்மக குண்டமும், வடக்கில் வாமதேவாத்மக குண்டமும், மேற்கில் சத்யோஜாத குண்டமும், ஈசானத்திக்கில் ஈசான குண்டம் விருத்த வடிவாக பிரதானமாக அமைக்கப்பெறும்.

சிவலிங்கத்தின் அடிப்பகுதி பிரம்ம பாகம் எனவும், மத்தியில் விஷ்ணு பாகம் எனவும், மேற்பரப்பு உருத்திர பாகம் எனவும் கருதி பூசித்தல் வேணும்.

இத்தகைய சிவலிங்கம் "சர்வதேசிகம், சர்வஸமம், வர்த்த மானம், ஸ்வஸ்திகம், த்ரைராசிகம், ஆட்யம் என பலவகை உள்ளதாக ஆகம நூல்களில் கூறப்பட்டு உள்ளனவற்றை விரிவஞ்சி விரிக்காது விடுத்தாம்.

தற்போது ஆலயங்களில் விசேஷமாகப் பூஜிக்கப் பெற்று வரும் சஹஸ்ரலிங்கம், தாராலிங்கம், முகலிங்கம் என்பனவற்றையும்,

ஈசானாதி பஞ்சபிரம்மத்தையும் சிறிது நினைவு கூறச் செய்து அச்சிவனுக்கு நிகழ்த்தும் பூசனை உபசார முதலியவற்றின் உள் நோக்கையும் சிறிது விளங்கச் செய்து இக்கட்டுரையை ஈசன நட்டுணை கொண்டு நிறைக்கின்றேன்.

ஒரே சிவலிங்க பாணத்தில் சிறிது சிறிதாக ஆயிரம் லிங்கங்கள் அமைந்து இருப்பது ஹைஸ்ர லிங்கமாகும். அத்தகைய லிங்கத்தை பூசிக்கின் ஆயிரம் லிங்கங்களை வழிபட்ட பலன்ஏற்படும் என்று சொல்லாமலே விளங்கும். வேதத்திற் கூறிய ஆயிரந்தலையுடைய புருஷனும் இச் சஹஸ்ரலிங்கமே.

தாராலிங்கமென்பது 5–7–9–12–16 ஆகிய பட்டைகளை லிங்க பாகத்தில் கொண்டு விளங்குவதாகும். இவ்வாறான தாராலிங்கங்கள் நமது சிதம்பரம் கோயிலில் நவலிங்க சன்னிதியில் உள்ளன. நடுவேயுள்ள பாஸ்கரேசுவரர் எனும் சூரியலிங்கம் பல பட்டைகளுடன் பிரகாசித்துக் கொண்டு இருப்பது கண்டு மகிழலாம்.

அடுத்து முகலிங்கம் என்பது ஒரு வாசலுள்ள கர்ப்பகிருகத்துடனாகிய கோவிலில் ஒரு முகமுள்ள சிவலிங்கமும், நான்கு வாசல்களுடனாகிய கர்ப்பகிருஹமுள்ள கோவிலில் நான்கு முகங்களுடன் கூடிய முகலிங்கமும் அமைந்திருக்கும். நமது சிதம்பர ஸபையில் ஒரு முகமுள்ள முகலிங்கமும், நான்கு வாசல்களுடன் கூடிய நேபாளம், காளஹஸ்தி முதலிய கோவில்களில் நான்கு முக முகலிங்கமும் காணக்கிடப்பதாகும்.

ஒவ்வொரு அவ்யக்த சிவலிங்கமும் முகமில்லாது போல் தோன்றினும் ஐந்து முகங்கள் இருப்பதாகவே பாவனை செய்து பூஜிக்கப்படும். அவை ஊர்த்வமுகமாக வெண்மை நிறம் வாய்ந்த ஈசானமும், கிழக்கு நோக்கியதாக பொன்மை நிறம் பொருந்திய தத்புருஷ முகமும், தெற்கு நோக்கி கருமை நிறம் கொண்ட அகோரமும் வெண்ணிறமாய் சத்யோஜாதமெனும் முகம் மேற்கு நோக்கியதாகவும், வடக்கு நோக்கி செம்மையாய்ச் சமைந்த வாமதேவமுகமும் பாவிக்கப்படும். இம்முகங்கள் சத்யோஜாதாதி ஈசான மீறாக பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாச மென ஐம்பூத தத்வமுகங்களாகவும், ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளலாகிய ஆற்றலனைத்தும் கொண்டதாயும், அவை நான்கு வேதங்களையும் ஆகமத்தையும் மொழிந்து வெளிப்படுத்தியுவையாகவும் பெரியோர் கூறுவர்.

யாவும் பஞ்சபூதங்களாலமைத்து அங்ஙனமமைத்த சகல சராசர ஜீவராசிகளையும் மண்ணிற்றோற்றி, நீரிற்காத்து, நெருப்பிலழித்து, காற்றில் மறைத்து, ஆகாயத்திலருளும் ஆற்றல் படைத்த எம் சிவனார் அவ்வவரின் பக்குவ நிலைக்கேற்ப அருள வேண்டி தமது ஐந்து திரு முகங்களையும் அயன்–அரி– அரன்– மகேசன்– சதாசிவன் என பஞ்ச பிரம்மமாக விரிகிறான். இக்கருத்தை,

*"மலர்ந்த வயன்மா லுருத்திரன் மகேசன்*
*பலந்தரு மைம்முகன் பரவிந்து நாதம்*
*நலந்தருஞ் சத்தி சிவன்வடி வாகிப்*
*பலந்தரு லிங்கம் சிவன்வடி வாகிப்*
*பலந்தரு லிங்கம் பராநந்தி யாமே"*

என்றும் திருமந்திரம் உணர்த்தும்.

இவ்வமைப்புக்கள் யாவும் ஒருங்கிணைந்த இச் சிவலிங்கத்தை பூசிக்க எழுந்த பஞ்சோபசாரங்களும் பிருதிவி முதலிய ஐம்பூத தத்துவங்களை உள்ளடக்கியவையே ஆம்.

சந்தனம் சமர்ப்பித்தல், நிவேதனம் முதலிய பிருதிவியிற் றோன்றியவற்றை அளிப்பதால் பார்த்திவ உபசாரமாம்.

அர்க்யம், பாத்யம் அளித்தல், ஆசமனம் கொடுத்தல், அபிஷேகம் செய்தல் முதலான நீருடனாகிய உபசாரங்களைச் செய்தல் ஆப்யோபசாரமாகும்.

தீபங்காட்டுதல், ஆபரணங்கள் சாத்துதல், கண்ணாடி காட்டுதல் முதலிய ஒளியுடன் சம்பாதித்த உபசாரங்கள் தைஜஸோபசாரமாகும்.

தூபமிடுதல், சாமரையிரட்டுதல், விசிறி வீசுதல், குடை பிடித்தல் முதலிய காற்றுடன் சம்பந்தப்பட்ட உபசாரங்கள் வாயவ்யோபசாரம்.

புஷ்பங்கள் சாத்துதல், அர்ச்சித்தல், தோத்தரித்தல், கீதமிசைத்தல், வேத மந்திரங்களை ஓதுதல், ஜபித்தல், மணியடித்தல், வாத்யகோஷம் முதலிய ஒலி சம்பந்தமான உபசாரங்கள் – சப்த குணகம் ஆகாசம் என்றதினால் வைஹாயஸ உபசாரமாகும்.

இங்ஙனமாக கருத்தமைந்த இப்பஞ்சோபசாரத்தை அடிப்படையாக வைத்து விரித்து எழுந்த உபசாரங்களே ஷோட சோபசாரம் எனும் 16 உபசாரங்களும், சதுஷ்ஷஷ்டியுபசார மென்ற 64 உபசாரங்களும் ஆகும்.

மேற்கூறிய உபசாரங்களையெல்லாம் அவ்வவற்றின் உணர்வுடன் இயற்றி அவ்வனைத்து தத்துவங்களுக்கும் அதிபதியும் தத்துவாதீதனுமான சிவனிடமிருந்தே உண்டாகி அவனிடமே ஒடுங்கும் தகைமை வாய்ந்ததாக எண்ணி, யாம் அனுபவிக்கும் இப்பிரபஞ்ச சிருஷ்டி யாவும் அவனருளிய தாலன்றோ என்றும் கிருதக்ஞையுடன் அவற்றால் ஏற்படும் சுகங்களை அவனிடமே அர்ப்பணித்து அவனருளுடன் மீண்டும் யாசித்து பெறுவதொன்றே சிவலிங்க பூசையின் லக்ஷியமாகும்.

இச்சிவனைப் பூசிப்பவர் எத்தகையராயிருப்பினும் ஈசனிடத்து இடைவிடாத இயற்கை அன்பும், அதனால் அவனிடத்துத் தோன்றி குழந்தைப் பாசத்துடன் கூடிய பக்தியுணர்வும் மிக மிக முக்கியமானது என்பது எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டுவதாகும். எத்தனையோ கோடி பிறவிகளில் இயற்றிய சிவபுண்ணியம் ஒன்றினால் மட்டுமே இத்தகைய அன்பும், பக்தியும் வாய்ந்து அரனடி போற்றி வீடுபேறு அடைவோம்.

*"கற்ற மனம் போற் கசிந்துகசிங் தேயுருகி*
*யுற்றகாங் லிங்க முயர் வேடம் - பற்றாக*
*முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்*
*பத்திகளில் நின்றிடுவார் பார்:*

எனும் சைவசமய நெறியும்

*"உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன்*
*பேர்வேண்டேன்*
*கற்றாரை யான்வேண்டேன் கற்பனவுமினிபமையுங்*
*குற்றாலத்தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரை கழற்கே,*
*கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே"*

எனும் திருவாசகமணிவாக்கும் உணர்த்துவதற்கிணங்க இயற்கையாகவே சிவனிடத்து அன்பும் மீதூர ஒருமித்த கருத்துடன் மனமும் மெய்யும் இயங்கச் சித்தத்தைச் சிவன்பால் வைத்துச் சிவலிங்க பூசை செய்யின் அஃது நிச்சயம் அச்சிவனையே சேருமாதலால் அவ்வழிபடுவோம் மும்மலமொழிந்து சிவமாவது திண்ணம் சிவம்.

(நன்றி: கோயில் 1979
வெளியீடு : சோமு நூலகம் சென்னை)

**இரத்மலானை மாணவர் விடுதிக்கு சமைத்த உணவு, உப உணவுப்பொருட்கள், பால்மா, உடுப்புவகைகள், மருந்துவகைகள், விடுதிக்குரிய பாவனைப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் போன்றவற்றை அன்பளிப்பாக வழங்கியவர்களது விபரம்.**

## டிசம்பர் – 2012

01. திரு. ஈஸ்வரக்குருக்கள் - களுபோவில
02. Dr. சிவகுமார் செல்லையா – கொழும்பு – 03
03. திருமதி. P. பரமநாதன் - கொழும்பு – 06
04. திருமதி. Y. அருட்செல்வம் - கொழும்பு – 06
05. திரு. P. முகுந்தன் - கொழும்பு – 06
06. Dr. திருமதி. சபிரா மொகிடீன் - தெஹிவளை
07. திரு. பாலா கணேஸ் - கோண்டாவில்
08. திரு. நவநீதன் - சூரியன் FM
09. திரு. B. சக்திவேல் - தெஹிவளை
10. திரு & திருமதி. கயிலாசபிள்ளை – கொழும்பு – 03
11. திரு. எஸ். கிருபானந்தமூர்த்தி – கொழும்பு
12. திரு. மா. தவயோகராஜா – கொழும்பு – 07
13. விஷ்ணு கோவில் - தெஹிவளை
14. சாயி சமிர்த்தி – கொழும்பு
15. முத்துக்கிருஷ்ண சுவாமி மிஷன் - கொழும்பு
16. திரு. என். உலகநாதன் - கொழும்பு – 06
17. I.D.M. நிறுவனம் - வெள்ளவத்தை
18. திரு. வே. ராஜ்குமார் - சுழிபுரம்
19. திருமதி. P. விஜயகுமார் - கொழும்பு – 03
20. திருமதி. சிறிகாந்தன் - கொழும்பு
21. American College - Colombo
22. திரு. சனார்த்த குமார் - வெள்ளவத்தை

## ஜனவரி – 2013

01. செல்வன். அஸ்வின்குமார் அரவிந்தன் - கொழும்பு – 03
02. திருமதி. தங்கராணி வைத்தீஸ்வரன்
    C/o ஜெயந்தன் - தெஹிவளை
03. திருமதி. சிவானந்தவல்லி கேதாரதாஸ்
04. திருமதி. T. சங்கரி – வெள்ளவத்தை
05. திரு. தனஞ்சயன் சிவதாசன் - கொழும்பு – 06
06. திருமதி. பாலயோகினி சிவானந்தன் - கொழும்பு – 05
07. விஷ்ணு கோவில் - தெஹிவளை
08. சாயி சமிர்த்தி – கொழும்பு
09. அமாவாசை
10. திருமதி. P. விஜயகுமார்
11. Young Minds Pre-School c/o Mrs. S. Rajaratnam
12. Mr. Jan Vilas Camp c/o திருமதி. சு. விக்னேஸ்வரன் - கொழும்பு - 08
13. செல்வி. காயத்திரி எட்வேட் & செல்வன். அபிஷேக் எட்வேட் - பூண்டுலோயா

## பெப்ருவரி – 2013

01. திரு. கனகராஜா "சிறியாணி ஹொட்டல்" - கொழும்பு - 11
02. திரு. ரமணன் C/o
    திருமதி. அகிலாண்டேஸ்வரி - கொழும்பு - 06
03. திரு. டிலோசன் ஞானேந்திரன் - கொழும்பு - 06
04. திரு. T. தர்ஷன் - கல்கிஸ்ஸ
05. திருமதி. அ. கயிலாசபிள்ளை - கொழும்பு - 03
06. விஷ்ணு கோயில் - தெஹிவளை
07. சாயி சமிர்த்தி - கொழும்பு
08. அமாவாசை
09. திரு. A. சிவநாதன் - தெகிவளை
10. திரு. எஸ். இராமச்சந்திரன் - இரத்மலானை

## நடராஜர் அபிஷேகங்கள்



**ஓர் ஆண்டில் நடராஜப் பெருமானுக்கு ஆறு அபிஷேகங்கள் நடைபெறும். நமக்கு ஓராண்டு என்பது தேவர்களுக்கு ஒரு நாள் ஆதலின், நடராஜப் பெருமானுக்கு ஓராண்டில் நிகழும் ஆறு அபிடேகங்களும் ஒரு நாளில் நடைபெறும் ஆறுகாலப் பூசையைக் குறிப்பன.**

1. **மார்கழி – திருவாதிரை [விடியல்]**
2. **மாசி – சுக்கிலபட்ச சதுர்த்தசி [காலசந்தி]**
3. **சித்திரை – திருவோணம் [உச்சிக் காலம்]**
4. **ஆனி – உத்தரம் [திருவந்திக்காப்பு]**
5. **ஆவணி – சுக்கிலபட்ச சதுர்த்தசி [இரண்டாம் காலம்]**
6. **புரட்டாசி – சுக்கிலபட்ச சதுர்த்தசி [அர்த்தயாமம்]**

**இந்த ஆறு அபிடேகங்களைக் குறிக்கும் வெண்பா வருமாறு:**

> **"சித்திரையில் ஓணமுதல் சீரானி உத்தரமாம்**
> **சத்ததனு ஆதிரையும் சார்வாகும் – பத்தி**
> **மாசியரி கன்னிகருவு சதுர்த்தசி மன்னும்**
> **ஈசர் அபி டேகதின மாம்"**

# எடுத்த பொற்பாதம்

சிவத்திரு அ. பொ. சுப்பையா M.A.

எடுத்த பொற்பாதம், நடராசப் பெருமானது இடது திருவடி. அது ஆன்மாவுக்கு முத்தி இன்பம் நல்குவது. உமையொரு பாகங்கொண்டவன், சிவபிரான். அவனது இடப்பாகம் சக்தி. எனவே உயர்த்தி நின்றாடி உயிரினத்தை உய்விக்கும் இடது திருவடியும் அதற்கேற்ப அழகுற வீசியாடும் இடது திருக்கரமும் அன்னை சிவகாமிக்கு உரியன. எனினும் அம்மையும் அப்பனும் வெவ்வேறல்லர்.



**பரமசிவம்**

சிதம்பர இரகசிய தத்துவத் தனிப்பரம் பொருள் சச்சிதானந்த வடிவனன் அருவமான அவன், நிலை பேரின்ப மான சிவ ஞானத்தினை உயிர்களுக்கு அருளுபவன். எத் தொழிலும் இயற்றாது சிவமே என வாளா இருப்பவன் அவன்

**சித்சித்தி**

அப் பெருமானது திருவுளமாகிய இச்சையே அவளது சங்கற்பம். அதுவே அவளது, ஆணை. அதனை ஏற்றுச் செயற்படுத்துபவள், அவனது சித்சத்தி. எனவே அவளுக்கு ஆணை என்றே ஓர் பரியாய் பெயரும் உண்டு.

**சிவத்தோடு சக்தி நீக்கமற நிற்றல்.**

காற்றினில் கலந்து இன்பம் தரும் மல்லிகை நறுமணம், மல்லிகையை விட்டுப் பிரிந்து வருதல் இல்லை கதிரவனிலிருந்து வெளிப்பட்டுப் பரந்து வீசுகின்ற கதிர் ஒளி, அக் கதிரவனைப் பிரிந்து விலகுவதில்லை. மின்சாரம் ஒன்றேயாயினும், தொழிற்பாட்டில் மின்னேற்றல் எதிர் மின்னேற்றல் இரு கூறாகிப் பயன் தருகிறது.

உருவத்தால் ஒன்றேயாவது மனித இருதயம் தொழிற்படு நோக்கில் அது வலம் இடம் என இரு கூறாகிறது. நரம்பு மண்டலத்தின் தலைமைத் தானத்தில் உள்ளது மூளை. அது உருவத்தால் ஒன்றாயினும் அமைப்பால் வலது இடது என்றும், தொழிற்பாட்டால் பெருமூளை சிறுமூளை என்றும் அறியுமாறுள்ளது.

இவையே போன்று, சிவனது ஆணை ஏற்றுத் தொழிற்படும் சிவசக்தியும், அவனை எப்பொழுதுமே பிரிவதில்லையே

**பரமன் கருணை**

சிதம்பர இரகசியமாய், வாக்கு மனங்களைக் கடந்து பொறிபுலன்களுக்கு எட்டாமல், எங்கும் நீக்கமற நிறைந்து நின்று, அனைத்தையும் தன்னுள் அடக்கிய உயர்தனி மெய்பொருளாம் சிவபிரான், தன்னைப் போன்றே நிலைத்து நிற்கும் பிற அநாதிப் பொருட்களைத் திருவுளங் கொள்ளுகிறான்.

ஆன்மாவும், ஆவணவமும் அவனது சிந்தையில் நிற்கின்றன. மூலமலமாகிய ஆணவம், அதன் பிறவித் தோழனாகிய மூல கன்மமும் அறிவற்ற சடமாயி ருந்தும் ஆன்மாவினுடைய சிற்றறி வினைத் தெளிய வொட்டாது மறைத்து, மயக்கி அவலத்துள் அழுத்தி நிற்கும் நிலையினை பெருமான் உன்னுகிறான். ஆன்மாவை அதருமக் கட்டிலிருந்து விடுவித்து நிலையான பேரின்பத்தை அதற்கு அருளுதற்கு அவன் திருவுள்ளங்கொள்ளுகிறான். இது பரசிவத்தினது அருவநிலை

இனி உயிர்களை இயக்குவதற்காக அவன் எடுத்தருளும் பல வடிவ வேறுபாடுகளையும் சிந்திப்போம்.

**அணுவுக்குள் அணுவாய் பரம்பொருள்**

அணுவிலுள்ள கருப்பொருளில் புரோடானைப் (Proton) போன்ற பரமசிவம்.

பரமசிவத்தினது ஞான ஆற்றலுக்குச் சித்சக்தி என்றும் பெயர் இவள் அணுவின் எலெக்ட்ரானை (Electron) ஒத்தவள்.

சிவனது வைப்பு ஆற்றலுக்கு மாயா சக்தி என்றும் பரிக்கிரக சக்தி என்றும் பெயர். இவள் அணுவில் உள்ள நியூட்டிரானைப் (Neutron) போன்றவள்.

**சிவத்தினது எளியதன்மை:**

பராசக்தியினின்று, அவளின் ஆயிரத்தில் ஒரு கூறாக ஆதிசக்தியைத் தோற்றுவிக்கிறான் இறைவன். திரோதன சக்தியாகிய அவளைத் திரோபவனாக மருவி நின்று மாயை எனும் வைப்பு ஆற்றலில் கூடுகிறான். அதன் விளைவாக அனைத்து உயிர்களும் வாழ்வதற்கான அண்ட சராசரங்களும், உயிர்களுக்கேற்ற உடலங்களும், உட்கருவிகளும், போகங்களும் அணுக்களின் திரட்சியாகத் தோன்றுகின்றன.

ஆதிசக்தியிலிருந்து ஆயிரத்தில் ஒரு கூறாக இச்சாசக்தியும், அவளிலிருந்து ஆயிரத்தில் ஒரு கூறாக ஞான சக்தியும், அவளின் ஒரு கூறாகக் கிரியா சக்தியும் என ஒன்றின் ஒன்று குறைந்தாகப் பல சக்திகளையும், ஆன்மாக்களது விருப்பம், அறிவு, செய்தல் திறன்களை விளக்குவதற்காகச் சிவபெருமான் தோற்றுவிக்கின்றான். தானும் இச்சிதா, நாதா, கர்த்தா என்ற பெயரோடு, முறையே அச்சக்திகளைக் கூடி நிற்கிறான். இது சக்தி பேதத்தின் பொது நிலை. தொடர்ந்து சிவபேதம் பற்றிச் சிந்திப்போம்.

### அரு உருவத்திருமேனி:

பரசிவமாகிய சிவசூரியனது கதிர்கள், மாயையில் வந்து பொருந்துகின்றன. இரண்டு மேகங்கள் மோதும் போது இடியும் மின்னலும் தோன்றுவது போல் சிவ சூரிய கதிர்களும் மாயையும் பொருந்தியவுடன், மாயையி லிருந்து முதலில் நாதத்தத்துவம் அதனின்றும் விந்து தத்துமும் தோன்றுகின்றன.

அதுகாறும் நிஷ்கனனாக இருந்த பரமசிவம் ஆன் மாக்களை உய்விக்க வேண்டுமென்ற திருக்குறிப்புடன் ஓம் என்னும் பிரணவத்தைத் திரு நோக்கம் செய்கிறான். உயிரினத்துக்கு வேண்டிய உயிர்ப்பு ஆற்றலான ஓம் என்னும் பிரணவம், சமஷ்டி பிரணவம், வியஷ்டி பிரணவம் எனப் பிரிகிறது. சிவபெருமானது திருஉளக் குறிப்பையே ஆணையாகக் கொண்டு அவனுள்ளிருந்து வெளிப்போந்த சித்சக்தி, வியஷ்டி பிரணவமாக விரிந்து நிற்க அவள் சமஷ்டி பிரணவமாகக் குவிந்து நின்று அவனைக் கூடுகிறாள்.

விந்துவிலிருந்து சாதாக்கிய தத்துவம் தோன்றுகிறது. இதுவே சிவபெருமானது அருவுருவத் திருமேனி. சிவலிங்க வடிவினதான இது, ஆவுடையாரும் சிவலிங்கமும் இணைந்த நிலை. அறிவும் செயலும் சம அளவினதாய இத்திருமேனியே சிவபெருமானது சதாசிவ மூர்த்தமாம்.

### திருமூலநாதர்:

இவ் அருவுருவத் திருமேனி ஏற்று, தில்லையம்பதியில் திருமூலநாதர் திருவருள் புரிகிறார். இத்திருமேனியே யோகிகளுக்கும் ஞானிகளுக்கும் தியானம்பண்ண உரியது. இனி இறைவனது உருவத்திருமேனி பற்றிச் சிந்திப்போம்.

### சிவபிரானது உருவத்திருமேனி

ஆன்மா ஆவணாதிபந்த பாசங்களால் கட்டுண்ட நிலை, பல தரத்து எனவே ஒவ்வொரு ஆன்மாவின் தகுதிக்கேற்பத் தானும் எளியவனாய் வந்து தோன்றி அருள் பாலிக்க விரும்புகிறான் பெருமானும். அதன் பயனாகவே அவனது பல்வேறு உருவத் திருமேனிகளைக் காக்கும் நற்பேறு நம் போன்றோர்க்கு இனிதாயிற்று.

### தில்லைக்கூத்தன்

சிவபெருமானது உருவத்திருமேனிகளுள் தில்லை அம்பலத்து ஆனந்தத் தனிநடன உருவமும் ஒன்றாயினும். திருமேனியின் ஒவ்வொரு உயரிய தத்துவத்தைச் சாற்றிநிற்கும்.

***தோற்றம் துடியதனில் தெரியும் ததி அமைப்பில்***
***காற்றிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமா***
***ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோத***
***என்ற மலர்ப்பதத்தே நாடு.***

### உடுக்கை ஒலி

ஆணவ அரச விணைப்பில் உறங்கும் ஆன்மாவினை உசுப்பி எழுப்புவதற்காக அவன் தனது வலது திருக்கரத்திலுள்ள உடுக்கையின் நாதத்தை எழுப்புகிறான்

முதற்படைப்புக் காலத்தில் அவன் குடிலை என்னும் மாயையில் எழுப்பும் நாதமே தத்துவங்களுக்குத் தோற்றுவாயாகும்.

அவனது இடையீட்டில்லாத் திருநடனத்தின் போது எழுகின்ற திருக்கரத்து உடுக்கை ஒலி, புதிய புதிய தோற்றங்களுக்கு வித்திடுகிறது.

### அமைந்த திருக்கரம்:

ஆணவ மாயையுள் கவரப்பட்டுக் கருத்தழிந்து இருளில் கிடக்கும் ஆன்மாவுக்கு அறிவுத் தெளிவூட்டுவதற்காகச் சிவபெருமான் தனது மாயை ஆற்றலையே சிறு விளக்கொளியாய்த் தந்தருளுகிறான். தனது பரிக்கிரக சக்தியாகிய அம் மாயையிலிருந்தே ஆன்மா உய்வுக் கென வண்ண வண்ண அண்ட பேரண்டங்களை உருவாக்கின்றான், வளமான உடம்பினைத் தருகின்றான். அவற்றை நுகர்தலாகிய போகத்தையும், அப் போகத்திற்குத் துணை நிற்கும் உட்கருவிகளையும் படைத்தருளுகிறான். பேரொளியாகிய இம்மாயை தன் ஒளிமயங்கி இறுதியில் ஆன்மாவினின்று நீங்குவதும், அவளருளால்தான்.

### அறப்போர்.

ஆணவம் என்பது அகவிருள். சிவன் பேரொளி பிழம்பு, ஆணவமாகிய இருளைக்கழலும் செய்தற்குத் தனது சட ஆற்றலாகிய மாயையே ஏவுகின்றான் அவன் ஆன்ம ஆணவப் பெரும்போரில் ஆன்மாவுக்குச் சிறு விளக்கொளியாய்த் துணை நிற்பன மாயையிலான உடல், உலகம் முதலியன.

### ஊன்றிய திருவடி

பூத இருள் தன்னுள் அடங்கிய பொருட்களைக் காட்டாது ஆயினும் தான் இருளாக இருப்பதையாவது தெளிவாகப் பிறர் அறிய நிற்கும். ஆனால் ஆணவமலமாகிய இருளோ தன்னுள் அடங்கிய பொருளையும் காட்டாது. தன்னுடைய இருப்பினையும் காட்டாது. மறைந்து நின்று ஆன்மாவைத் தீநெறிப்படுத்தித் தருக்குறச் செய்யவல்லது. எனவே சிவனும் மறைப்பு ஆற்றலாகிய திரோதான சக்தியைத் தொழிற்படுத்தி ஆணவத்தின் மறைப்பினை மடங்கச் செய்கிறான். உயிருக்கு முத்திப் பேறும் பேரின்பம் நல்கும் பொருட்டு, நீர்கலந்த பாலிலிருந்து நீரையும் பாலையும் பிரிக்கும் அன்னம் போல், ஆன்மாவை அழுத்திக் கொண்டிருந்த வலிய, தீய ஆணவத்தை முயலகனாகப் பிரித்த, வீரக்கழல் அணிந்த தனது வலது திருவடிக்கீழ் நடராசப் பெருமான் அழுத்தி நிற்கின்றான்.

### எடுத்தபொற்பாதம்

ஆன்மா தனக்கு இயல்பாக அமைந்த சிறு அளவிலான அறிவு, இச்சை, செயல்களால் தருக்குறாது அனைத்தும் சிவனது இச்சை சிவனது அறிவு, சிவனது செயல் எனச் சிவமயமாகக் கருதி இறைபணி நிற்றல் வேண்டும். அத்தகைய ஆன்மாவே அவளது குஞ்சித பாதத்தில் தஞ்சம் பெறுகிறது.

இடது திருவடியைச் சார்ந்த ஆன்மாவைச் சிற்றம்பலத்தான் தன் கால் பெருவிரலால் மேல்நோக்கி உந்தி, தனது சிரமேல் தாங்கிக் கொள்கிறான். தூக்கிய திருவடியில் தூக்கிய பெருவிரல் இதனை உணர்ந்தும். சரண் எனத் திருவடியில் வீழ்ந்த சந்திரனைத் தன் சிரந்தனில் அணிகலனாகச் சூடியது. அவனது இவ் அருள் வெளிப்பாடேயாகும்.

### அங்கியிலே சங்காரம்

சிவபெருமான் எரியாடி ஏறி என்பது எரிகின்ற நெருப்பு. சிவபெருமானது நெற்றிக்கண் நெருப்பு, காமவேளை எரித்து கந்தவேளைத் தோற்றுவித்தது.

அவனது திருமுறுவலாகிய உதட்டு நெருப்பு, முப்புரத்தை எரித்து மூவரசையும் தேவரையும் காத்தது

அவனது இடக்கரம் ஏந்திய நெருப்பு, அண்டத் தொகுப்பையே அழிக்க வல்ல ஊழித்தீயைத் தோற்றுவிப்பது.

அவனது திருமேனியாகிய நெருப்பு தருக் குற்றமாலும் அயனும் தன் பால் நெருங்கலொண்ணா அனற்பிழம்பாகி அவர்தம் ஆணவத்தை ஒடுக்கும். அவன் நள்ளிருளில் நட்டமிடும் சுடலை நெருப்போ உயிரது மன நோயை எரித்துப் பிறந்த பிறப்பறுத்து ஆன்மாவை ஈடேற்றுவது.

### திருச்சிற்றம்பல ஆடுகளம்

ஒவ்வொரு ஆன்மாவினது துவாத சாந்தத்திலும் சிவபெருமான்இடையறாது திருநடனமிடுகிறான்.

அவனது அண்டவெளித் திருநடனம் பதஞ்சலி, வியாக்கிரபாதர் முதலிய மெய்யடியார் பொருட்டுத் தில்லைச் சிற்றம்பலத்தில் காட்டப்பெற்றது.

அண்டத்து ஆடலையும் அம்பலத்தில் ஆடலையும் பிண்டத்துள்ளம் கண்டு உணர்ந்தவர்களே பேரளுளா ளராவர். அவர்களைப் போன்று, மூவிடத்திலும் ஒரே சேரச் சிவ நடனத்தைக் காணுதலும் அவனது திருக்கூத் தொலியைக்கேட்கவுமே சிவமாந்தன்மை சிவப்பேறெல்லாம் சிறப்புற அழைக்கப்பெற பேரின்பமாகும்.

எனவே இப் பேற்றினை எவ்வளவு பெறுவது? அண்ட நடனமும், அம்மன் நடனமும் பற்றிச் சிந்தித்தோம். மூன்றாவதாகிய பிண்ட நடனத்தைக்கான முற்படுவது பெரும் பயன் நல்கும்.

### ஆன்மா அனுட்டிக்க வேண்டிய நெறி

கடைத்தேற விரும்பும் ஆன்மா மேற்கொள்ள வேண்டிய நால்வகை நெறிகளும் சைவசாத்திரங்களுள் தெளிவாக அறிவுறுத்தப்பெறுகில் அவற்றை இற்றைநாள் அறிய நோக்கில் சிந்திப்பது நலன் பயக்கும்.

### மனித உடலில் கூத்தர் பெருமான்

சங்குகளில் வலம்புரி இடம்புரி என இரண்டு உண்டு. அவற்றுள் வலம்புரிச் சங்கு மிக அரிதில் கிடைப்பது. இரணட்டை வாடைப்பம் வெற்றிலை முதலிய இரட்டைகளைப் போன்றே வலம்புரி இடம்புரி ஆகிய இரண்டு சங்குகளது இணைப்பாக அமைந்திருப்பது மனித உடம்பு

மனிதனது உச்சித்தலைவாயில் சிவ நாதத்தைக் கேட்கும் நுண்காது ஆகும். மனிதனது இருப்பக்கமார்புக் கூடும், முதுகெலும்பின் நீண்ட பகுதி ஆகியவற்றின் அமைப்பு இரட்டைச் சங்கத்தின் அமைப்பைப் போன்றது. இதுசங்கநிதியாகும்.

இரப்பைக்கு மேலேயுள்ள உதரவிதான (Diaphram) பதினாறு இதழ்த் தாமரையாக அனுகத ஆதாரமாகச் சாத்திரங்கள் சிறப்பிக்கும் இது பதும நிதியாகம்.

இவ்வாறு சிவபெருமான் சங்கநிதி பதுமநிதி என்ற பெருநிதிகள் புடைசூழ் மனித இதயமாகிய நெஞ்சுத்தானத்தில் ஆனந்தக் களிநடனம் புரிகின்றான். குகை வடிவமான இப்பகுதியில் அவனைக் குஹ் யாதிகுஹ்யாய நம என்ற பத மந்திரத்தால் அபிடேகிப்பர், அடியவர்.

மனிதனது தலைப் பகுதியாகிய ஆகாயவெளியில் சிவபெருமான் புரிகிற ஞானநடனம் யோகிகளும் ஞானிகளுமே காணுவதற்கு எளிது.பிண்டாமாகிய மனித இதயத்தில் நிகழும் நடனம், நால்வகை நெறியாளரும் கண்டு இன்புறக் கூடியதாகும்.

### ஆன்மார்த்த பூசை நிகழுமாறு

புறத்தே, குரு, இலிங்க அடியார் வழிபாடுகளில் தாழ்த்தி வணங்குவதற்குத் தலையினையும், வாழ்த்தி வழிபடுவதற்கு வாயினையும் கூப்பித்தொழுவதற்குக் கைகளையும் வலம் வருவதற்குக் கால்களையம் பெருமான் அடியவர்க்கு அருளியிருக்கிறான். அவையே போன்று அகப் பூசைக்கென அவன் அமைத்தருளியுள்ள கருவிகரணங்களும் மிகச் சிறப்பானவை. அவற்றை அன்பொடு அவனுக்காகவே இயக்கியவரின் அவ்வனுபவ முதிர்ச்சியால் விளையும் பயன்கள் அளப்பரியன. வியக்கத்தக்கன.

மெய்யடியாரது நெஞ்சுப் பகுதியைச் சிவ பெருமானுக்குப் பூசைத் தானமாகவும், தலையைத் தியானத்தானமாகவும், அடிவயிற்றை ஓமத் தானமாகவும் சித்தாந்த சாத்திரங்கள் இடஞ் சுட்டி அறிவுறுத்தும் பூசைத்தானத்தில் சிவபெருமானுக்கு சோடசோபசாரம் நிகழுகிறது.

பூசை ஏற்கும் சிவபெருமான் அபிடேகப்பிரியன். அவன்மீது அடியவரது அன்பு ஊற்றால் குருதி இதய கமலத்தில் இடையீடின்றி அபிடேகமாகிக் கொண்டேயிருக்கிறது.

சிவகணங்களே, மெய்யடியாரது குருதியிலுள்ள சிவப்பு அணுக்களாம் (Red Blood Capsules). அவையே ஒழுங்கு குவிந்து, அலங்காரத்தீபமாக ஒளிவிடுகின்றன. அங்கு சாமரைகளாகப் பயனுறுபவை நுரையீரல் என்னும் காற்றைகளாகும். பெருமானுக்குக் காட்டப்பெறுகிற ஆலவட்டமே மனித ஈரல் (Liver)ஆகும். மற்றும் கண்ணாடியாக மண்ணீரலும், பனைஓலை விசிறிகளாகச் சிறுநீரகங்களும் சதர விசிறியாகச் சிறுநீரையும் (Bladder) கடைசியாக மூளையும் (Brain) கொடியாக உச்சித்தலையிலுமுள்ள நுண்செவியும் (Pineal Body) பயனுறுகின்றன.

உடலைச் சிவத்திற்காகவே அர்ப்பணிக்கும் இச்சீரமிகு ஆன்மார்த்த பூசை முதலில் வெறும் கற்பனை போன்றே தோன்றிடினும் ஆழ்ந்த அனுபவத்தின் பயனாக உள்ளத்துக்கு ஏற்படுகிற உறுதியையும், உடலுக்கு உண்டாகிற நோய்த் தடுப்பாற்றலையும் ஐயமின்றி மிகத் தெளிவாக உணரலாம்.

இது தொடர்பான சைவசித்தாந்தக் கோட்பாடுகளை இவண் சிந்திப்பது கடமையாகும்.

### மூவகை ஆற்றல்

இறைவனுடைய இச்சா சக்தி, ஞானா சக்தி, கிரியா சக்தியைப் போன்ற உயிருக்கும் இச்சை அறிவு, செயல் என்ற மூவியல்புகள் உண்டு. இறைவனது ஆற்றல் அளப்பரியது ஆன்மாக்களுடையவோ மிகமிகச் சிறு அளவினது அவற்றையும் விளங்க வொட்டாது தடுப்பது, ஆணவம் என்னும் கொடிய மலம். அவ்வாணவக் காரிருளில் அலமந்துவாடும் ஆன்மாவுக்குச் சிறுவிளக்காக மாயை என்னும் தனது வைப்புச் சக்தியினின்று, உடல் முதலியவற்றை அருளியவன் சிவபெருமான்.

அவற்றுள் உயிரது அறிவுக்கும் செயல்களுக்கும் எனத் தனித்தனிப் பொறி புலன்களை சிவபெருமான் படைத்துத் தருகிறான். ஆனால் இச்சை என்னும் உயரியல்புக்கு எனத் தனியாக ஒரு பொறிபுலனும்

இல்லை. மனம் என்னும் உட்கருவியே உயிர் தொழியா யிருந்தது. உயிரது இச்சையை இயக்கிறது.

### அறிவுப் பொறிகளும் செயற்பொறிகளும்

பெருமூளையும், சிறுமூளையும் அவற்றைச் சார்ந்துள்ள அறிவுக்கருவிகளும் செயல் கருவிகளும் இவ்வாறு உயிரத அறிவு செயலுக்கு அமைந்த பொறிபுலன்களாம். அனைத்து நிகழ்வு அலைகளையும் தன்பால் ஏற்று நிற்கும் பெருமூளை அவற்றின் தொடர்பான அணைகளைச் சிறு மூளைக்கு அனுப்புகிறது.

### ஆணவக்கட்டுள் உயிரது அறிவு மந்த நிலை

ஆணவ பந்தத்திலுள்ள உயிரது பெரு மூளை நான் எனது எனச் செருக்குற்று நிற்கிறது. நாலறிவும், தற்கிழமையும் மேலோங்கிய இந்நிலையைப் பாசஞானம் பசு ஞானம் என அருளாளர்கள் மதிப்பிடுவர். துரக்குற்ற பெருமூளை மனைப்பாகவே சிறுமூளைக்கு ஆணைகளைப் பிறப்பிக்கிறது. அவ் ஆணைப்படி சிறுமூளை உலகியலின் பல்வெறு செயல்களையும் செய்து உயிருக்கும் புதிய விலைகளை ஈட்டுகிறது. அவ்வினைகளினின்றும் புண்ணிய பாவங்களும், இன்ப துன்பங்களும் மாறி மாறித் தோன்றி பல்சக்கரம் போன்ற உயிரினைப் பிறப்பு இறப்பு சுழற்சியில் அழுத்துகின்றன.

### கட்டுநீங்கிய ஆன்மாவின் பக்குவ நிலை

பக்குவமுற்ற நிலையில் சிவ மந்திரத்தை ஆன்மா நாளும் தவறாது மனனம் செய்வதன் மூலம் பெருமூளை மந்தப் படுத்தியிருந்த அறியாமை எனும் ஆணவ இருள் விலகிச் சிவஞானத் தெளிவு பிறக்கிறது.

நல்வினை தீவினைக்கு இதுவரை நிமித்தமாயிருந்த சிறுமூளை சித் சத்தியினது அருளால் இருவினைகளையும் ஒப்புறுத்துச் சிவ புண்ணியத்திலே தலைப்படுகிறது. இடைப்பட்ட மயக்கத்தால் இதுகாறும் இடர்பட்ட நடுமூளை, இன்ப வாரிதியில் திளைக்கிறது.

இவ்வாறு ஆணவ, கன்ம மாயா மலங்களின் கோட்டை களாக இருந்த இந்தப் பெருமூளை சிறுமூளை நடுமூளை என்றும் சத், சித் ஆனந்தத்தின் நிலைக்களனாக சோமாஸ் கந்தமூர்த்தியின் இருப்பிடமாகி உலகியலிலேயே பேரின்பம் துய்க்கும் சீவன் முத்த நிலையை (Paradise on earth) ஆன்மாவுக்குக் கொண்டு வருகின்றான்.

அறிவு, செயல் இவற்றின் பரிணாம வளர்ச்சி இவ்வாறிருக்க இச்சையினை இயக்கம் மனமோ ஆன்மாவின் ஊழ்வினைக்கு ஏற்ற ஆண்டவனது ஆணை வழி நடக்கும் சிற்சத்தியால் அவனது மறைப்பு ஆற்றலால் இயக்கப் பெறுகிறது. மனத்தை இவ்வாறு இறைவன் தொழிற்படுத்துவதன் மூலமாக ஆன்மத் தலைவி சிவ பெருமானாகிய தலைவனைக் கூடி இன்புறுகிறாள்.

இனி ஆன்மா ஆணவ இருள் நீக்கிச் சிவஞானம் பெறுவது எங்ஙனம் எனச் சிந்திப்போம்.

### தலைவாயில்

வேதாரணியேசுவரைப் பூசித்தும், வேதங்கள் தலைவாயிலைத் திருக்காப்பிட்டன. பன்னெடுங் காலம் திறக்கப்படாது இருந்த ஆலயத் திருவாயில் தமிழ் மறையாகிய தேவாரம் ஓதத்திறந்து மூடுகின்ற இயக்கத்தைப் பெற்றது. இதனைப் போன்ற மனிதத் தலையிலும் ஒரு நுண்ணிய வாயில் உண்டு.

குழந்தை கருவுற்றதும் வலிய எலும்புச் சுவர்களாலான மண்டை ஓட்டில் தலைவாயிற் கதவும் உறுதியான தசை நார்களால் (ஜவ்வு) பிரமாவினால் அடைக்கப்படுகிறது. Fonta Nella என இதனை மருத்துவ நூல்களும் கூறும். ஒருசதுர அங்குலப் பரப்புள்ள இவ் உச்சித்தலைப் பகுதியே தலைவாயிலாகும். இதனைக் கருவினில் அடைத்தவன் வேதங்களின் தலைவனாகிய பிரமன். குழந்தை பிறந்த பதினெட்டு மாதங்களுக்குப் பிறகு இக்கதவு சிறிது சிறிதாக வலிமை பெறுகிறது.

ஏழு முதல் பதினான்கு ஆண்டுகளில் சிவகுருவினால் சிவமூல மந்திர உபதேசம் அருளப்பெறும் போது இத் தலைவாயிலின் நுண்கதவு திறக்கின்றது.

இதுகாறும்உடல் வளர்ச்சிக்கே பெரிதும் துணை நின்றது. மூளைப் பகுதியில் கூம்பித் தொங்கிய ஒரு தாமரை மொட்டு (Pitutuary gland) என்பது இதன் மருத்துவப்பெயர். இதனுடைய நலனையும் வளத்தையும் பொறுத்தே உடல் வளர்ச்சியும் உள்ளத்து எழுச்சியும் அமைகின்றன.

வண்டினது இனிய ஒலி போன்ற குருவினது மந்திரோபதேசத்தால் ஆயிரம் இதழ்த்தாமரையாக இது மலர்ந்து சிவபெருமானுக்கு இருப்பிடமாகிறது. இதுவே உள்ளத்து எழுச்சிக்கும் மனத்தின் வளர்ச்சிக்கும் இறைமையின் ஊற்றத்திற்கும் உறுதுணையாகிறது.

இவ்வாறு உபதேசவழி அறிவு விளக்கம் பெற்ற ஆன்மா விதிப்படி நாள்தோறும் சிவ மூல மந்திரத்தால் சிவனது திருவடியையே சிந்தித்து நிற்கிறது. சிவபெருமானது நுண்ணிய திரு நடனத்தைப் புருவ நடுவில் உள்ள நெற்றிக்கண்ணால் ஆன்மா கண்டு இன்புகிறது.

இதுகாறும் கூம்பி மறைந்து கிடந்த PPINEAL BODY என்ற நுண்செவி முத்தி தீக்கைக்குப் பிறகு சிறிது சிறிதாக வலுப்பெற்றுச் சிவபெருமானது மிக நுண்ணிய திருக்கூத்தொலியைக் கேட்கும் ஆற்றலைப் பெறுகிறது. சேரமான் பெருமான்நாயனார் போன்ற பேரருளாளர் இத்தகைய பேறு பெற்றோர் ஆவர். இவ்வாறு திரு அருளைப் பெற்ற ஆன்மா உச்சித்தலைவழியாக தான் இறுதியில் உடலைப் பிரிந்து சிவனடிசேர்கின்றது. ஆகவே தலைவாயிலே கடைவாயிலாகவும் ஆகிறது.

சிவநாதத்தைக் கேட்கும் ஆற்றலுள்ள நுண்ணிய காதினை உடைய ஆன்மாவே தலை உச்சியிலுள்ள கடைவழியை கடக்க முடியும்.

எனவே நாளும் உயர்வினையே நாடி திரியும் நாம் ஒவ்வொருவரும் சிவ மூலமாகச் சிவமூல மந்திரத்தை உபதேசிக்கப் பெற்ற நித்திய அநுட்டானத்தின் மூலம் படிப்படியாக வளர்ந்து சிற்றம்பலக்கூத்தானது திருநடன நுண்மைக்காணுதலும் நுண் ஒலியை கேட்டு இன்புறுதலும் முத்திப் பேற்றுக்காக உயர் நெறியைப் பேணுதல் தலையாய கடமையாகும்.

**(நன்றி சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் (நடராஜர்) கோயில் கும்பாபிஷேக மலர் 11.02.1987)**




# சிந்தனைக்கு ஒரு விடயம்

## ஒரு குருவும் மகனும்

மாசி மாதத்திலே வருகிற அமாவாசைக்கு முதல் நாள் மகாசிவராத்திரி என்று சொல்லப்படும். அந்த நாள் கடவுள் வழிபாட்டிற்கு மிகவும் தகுதியான நாள். சைவசமயிகள் அன்று பகல் ஒன்றும் உண்ணாமலிருந்து கடவுளைத் தியானிப்பதிலும், வேறு புண்ணியமான செய்கைகளிலும் பொழுது போக்குவார்கள். மற்றைய நாட்களில் பெருங்குற்றஞ் செய்பவர்களும் அன்றைக்கு நீதியாக நடக்க நினைப்பர். இரவு முழுவதும் கடவுள் வழிபாட்டிலே கழியும். அன்றைக்குக் கோயில்களிலே நான்கு ஜாமமும் பூசை நடக்கும். பகலிலே வேறு முயற்சியுள்ளவர்களும் இரவு முழுவதும் சிவபெருமானை வணங்குவார்கள். அதற்காக அன்றிரவு நித்திரை கொள்ளலாகாது என்று பெரியோர் சொல்லுவர். கோயில்களிலே அன்றிரவு பூசை நேரந் தவிர மற்றைய நேரங்களில் புராணம் படித்துப் பொருள் சொல்வது வழக்கம்.

சிவராத்திரி தினத்தில் ஒரு கோயிலிலே புராணம் படிக்கப்பட்டது. குருக்களுடைய மகன் பாட்டுக்களை வாசிக்கக் குருக்கள் கருத்துச் சொன்னார். சற்று நேரஞ் சென்ற பின் புராணங் கேட்டவர்கள் பலர் உறங்கினார்கள். கடைசியில் எல்லாரும் நித்திரையாய் விட்டார்கள். இதைக் குருக்களுடைய மகன் கண்டு தகப்பனாரைப் பார்த்து, "ஐயா இந்தச் சனங்களெல்லாம் உறங்குகிறார்களே, சிவராத்திரியில் நித்திரை செய்வதே குற்றம். கோயிலில் நித்திரை செய்வது அதிலுங் குற்றம், புராணங் கேட்க வந்தவர்கள் நித்திரை செய்வது இன்னும் அதிக குற்றம். இவர்கள் சிவராத்திரியில் கோயிலிலே புராணம் படிக்கும்பொழுது நித்திரை செய்தல் எவ்வளவு பெரிய குற்றம்" என்றான்.

அது கேட்ட குருக்கள், "மகனே, 'பழிப்பன பகரேல்' என்று ஔவையார் சொல்லியிருப்பது தெரியாதா? நீ இப்போது அவர்களிலே குற்றஞ் சொல்லியது அவர்கள் செய்த குற்றத்திற் பெரிய குற்றம். இந்தச் சிவராத்திரி தினத்திலே விழித்திருந்து புராணம் படித்த புண்ணியத்திலும் பார்க்க, இவர்களிலே குற்றஞ் சொல்லியதால் வந்த பாவம் அதிகமானது. பிறரிலே உள்ள குற்றத்தை மற்றையோர்க்கு ஒருபோதுஞ் சொல்லாதே. எங்கள் ஒவ்வொருவரிலும் நூற்றுக்கணக்கான குற்றங்கள் உள்ளன, அவைகள் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து அறிந்து அவைகளை விலக்குதல் எங்களுடைய கடனாம், எங்களுடைய குற்றங்களை அறிந்து அவைகளை நீக்குவதற்கே போதிய நேரம் எங்களுக்கில்லை. ஏனையோரிடத்திலுள்ள குற்றத்தை ஆராயத் தொடங்கினால் எங்களுக்குக் காலமும் வராது, ஆதலினாலே, பிறரிலே குற்றஞ் சொல்வது மிகப் பெரிய குற்றமாய் முடிகின்றது. இவர்களைக் குற்றஞ் சொன்னதினாலே, உன்னுடைய விரத பலன் போய்விட்டது. ஒருநாளும் பிறர்மேற் குற்றஞ் சொல்லாதே, உனக்குக் கீழ்ப்பட்டவர்கள் இருந்தால், அவர்களைத் திருத்துவதற்குப் பதிலாக, அவர்களுடைய குற்றத்தை மற்றொருவருக்குச் சொல்வதினால் என்ன பலன்?" என்றார். மகன் அவர் சொல்லியதைக் கேட்டு அப்படியே நடந்தான்.

(நன்றி: சைவபோதம்)

## நல்வழி காட்டும் ஔவையாரின் 'நல்வழி' வெண்பா

ஔவையார் தந்த அரும்பெரும் பொக்கிஷம் நல்வழி. நாற்பது வெண்பாக்கள் கொண்டதாக இந்நூல் அமைந்துள்ளது. சிறுவயது மாணவர்கள் அனைவரும் படித்துப் பயன்பெறவேண்டும் என்ற வகையில் 'நல்வழி' வெண்பாக்கள் சிலவற்றை உரைக் குறிப்புகளுடன் 'மாணவர் ஒளி' ஊடாக வழங்குவதில் இந்து ஒளி பெரு மகிழ்ச்சியடைகிறது.

*புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவை*
*மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள் - எண்ணுங்கால்*
*ஈதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லுந்*
*தீதொழிய நன்மை செயல்.*

**பதவுரை:**

புண்ணியமே செய்யத்தக்கது. பாவமே ஒழியத்தக்கது. முற் பிறப்பில் செய்த அந்தப் புண்ணிய பாவங்களே, பூமியில் பிறந்த மனிதர்களுக்கு (இப்பிறப்பில் இன்ப துன்பங்களை அனுபவிப்பதற்கு காரணமாக) வைத்த பொருளாகும். இதனை ஆராயுமிடத்து, எந்தச் சமயத்தாரும் சொல்வது இந்தப் பொருளேயல்லாமல் மற்றொன்றுமில்லை. ஆதலினாலே பாவம் நீங்கப் புண்ணிய நற்கருமங்களைச் செய்க. அதாவது இன்பத்துக்குக் காரணமாக புண்ணியமும், துன்பத்துக்குக் காரணமாக பாவமும் இருப்பதால், பாவத்தை ஒழித்துப் புண்ணியத்தைச் செய்ய வேண்டும் என்பது இதன் பொருளாகும்.

*ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும்*
*மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டா*
*நமக்கு மதுவழியே நாம்போ மளவும்*
*எமக்கென்னென் றிட்டுண் டிரும்.*

**பதவுரை:**

பெரிய பூமியிலுள்ள மனிதர்களே. வருடந்தோறும் அழுது புரண்டாலும் இறந்தவர் திரும்பி வருவரோ? வர மாட்டார். ஆதலினால் அழ வேண்டுவதில்லை. நமக்கும் அம்மரணமே வழியாகும். நாம் இறந்து போமளவும், எமக்கு யாது சம்பந்தம் என்று மற்றவர்களுக்கும் கொடுத்து நீங்களும் உண்டு கவலையற்று இருங்கள். அதாவது இறந்தவர் பொருட்டு அழுது புரள்வதால் உடம்பிற்குத் தளர்ச்சியும் உள்ளத்திற்கு வருத்தமும் உண்டாகுமே தவிர, சிறிதும் பயனில்லாமையால் கவலையை ஒழித்து பிறருக்கு உணவளித்து வாழ வேண்டும் என்பது இதன் பொருளாகும்.

*சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு*
*அபாய மொருநாளுமில்லை — உபாயம்*
*இதுவே மதியாகு மல்லாத வெல்லாம்*
*விதியே மதியாய் விடும்.*

**பதவுரை:**

சிவாயநம என்று தியானித்துக்கொண்டு இருப்பவருக்கு ஒருநாளாயினும் துன்பம் உண்டாகாது. விதியை வெல்லுவதற்கு இதுவே உபாயமாகும். ஆதலினால் உண்மையாகிய அறிவும் இதுவேயாகும். இந்த சிவத்தியானம் அல்லாத ஏனைய இடங்களிலெல்லாம் புத்தியானது விதியின் வசமாகிவிடும். அதாவது சிவத்தியானத்தில் ஈடுபட்டிருப்பவருக்கு விதி இல்லை, சிவத்தியானம் இல்லாதவருக்கு விதி உண்டு என்பது இதன் பொருளாகும்.

# சிந்தனைக் கதைகள்




## சிபிச் சக்கரவர்த்தியின் ஜீவகாருண்யம்

முன்னொரு காலத்தில் சிபி என்றொரு சக்கரவர்த்தி இருந்தார். ஒரு நாள் மாலை நேரம் அவர் தம்முடைய முதன் மந்திரியோடு அரண்மனை வாயிலில் நின்றார். அப்போது ஒரு வேடன் புறாவொன்றைக் கையிலே கொண்டுபோனான். சிபிச்சக்கரவர்த்தி அவனை அழைத்து, "இந்தப் புறா விற்கவா? வளர்க்கவா? கொன்று உண்ணவா?" என்று கேட்டார்.

"நாங்கள் பிடிக்கிற பறவைகளை, விற்பதுமில்லை, வளர்ப்பதுமில்லை" என்று அவன் சொன்னான். அப்போது சக்கரவர்த்தி வேடனைப் பார்த்து, "நீ அதைக் கொல்லலாமா? அதுவும் உன்னைப்போல ஒரு சீவன் தானே. உனக்கு ஒரு முள்ளுத் தைத்தால் நீ எவ்வளவு வருத்தப்படுகிறாய்? நீ அதைக் கொல்வது சரியா? கொல்லாமல் அதைப் பறக்கவிடு" என்றார்.

அப்போது வேடன் "மகாராசாவே, உங்களுடைய சொல்லை நான் தட்டத் தக்கவனல்லேன். எனக்கு இந்த நியாயங்கள் ஒன்றும் வேண்டாம். இப்போது இதைப் பறக்கவிட்டால், நான் இன்றைக்கு உண்ணாமற் பசி கிடக்க வேண்டி வருமே. அது தங்களுக்கு நீதியா?" என்றான்.

சக்கரவர்த்தி உனக்குச் சோறு தருவேன்" என்று சொன்னார். "சோறாவது காய்கறிகளாவது ஒரு போதும் உண்பதில்லை" என்றான் வேடன் சோற்றையே உண்ண வேண்டும் என்றும், பறவைகளை உண்பது பாவம் என்றும் சக்கரவர்த்தி சொன்னார். "எதுவாயிருந்தாலும் நான் ஒரு காலமும் உண்ணாத உணவை உண்ணப் போவதில்லை" என்று வேடன் பிடிவாதமாய் நின்றான். சக்கரவர்த்தி சற்று நேரம் யோசித்து விட்டு வேடனைப் பார்த்து, "உனக்கு நான் இறைச்சி தருவதானால், ஏதாயினும் ஒரு பிராணியைக் கொல்லல் வேண்டும். நான் ஒரு சீவனையும் கொல்லமாட்டேன். இந்தப் புறா அளவு கனமுள்ள தசையை எனது சரீரத்திலிருந்து வெட்டித் தருகிறேன்" என்று சொன்னார்.

அதற்குவேடன்சம்மதிக்கவே அவர்ஒருதராசுகொண்டுவரும்படி மந்திரியிடம் கட்டளையிட்டார். மந்திரி வேடனை மிகவும் கோபித்துப் பார்த்துவிட்டுப் போய் ஒரு தராசு கொண்டு வந்தான். சக்கரவர்த்தி அந்தப் புறாவைக் கட்டி ஒரு தட்டிலே வைத்துவிட்டு, தமது தொடையிலிருந்து ஒரு பெரிய துண்டுத் தசையை வெட்டி மற்றத் தட்டிலே இட்டார். வெட்டிய தசை போதவில்லை. அவர் மேலும் ஒரு துண்டுத் தசையை வெட்டித் தட்டிலே இட்டார். அதுவும் போதவில்லை. புறாவினுடைய பாரம் மிக அதிகமாய் இருந்தது. "இது என்ன ஆச்சரியம்!" என்று நினைத்துக் கொண்டு இன்னும் ஒரு துண்டு வெட்டித் தட்டிலே இட்டார். பின்னும் போதவில்லை. உடலிலிருந்து தசையை வெட்ட வெட்ட இரத்தம் அதிகமாகப் பாய்ந்தது. சக்கரவர்த்திக்கு களை உண்டானது. இன்னும் அவர் ஒரு துண்டு வெட்டுதற்குக் கையை எடுத்தார்.

அங்கு நின்ற வேடனைக் காணவில்லை. "சிபிச் சக்கரவர்த்தியே, பொறு! பொறு! இவ்வளவும் போதும். உனது சரீரம் முன்போலாகுக! நான் படைத்த உயிர்களிலே நீ அதிக அன்புள்ளவனாய் இருப்பதால், நான் உன்னை விரைவாக என்னோடு சேர்த்துக் கொள்ளுவேன். இன்னுஞ் சொற்ப காலத்தில் நீ என்னுடைய பாதத்தை அடைவாய்" என்று ஓர் அசரீரி வாக்குப் பிறந்தது. சிபியினுடைய சரீரம் முன்போலானது. "வேடனாக வந்தவர் சிவபெருமானே" என்று சிபிச்சக்கரவர்த்தி உணர்ந்து அவரைத் தோத்திரஞ் செய்தார்.

## கிரிசாம்பாளின் பொறுமை

பல வருஷங்களுக்கு முன்னே ஒரு தேசத்திலே பஞ்ச முண்டானது. பல ஏழைகள் உணவின்றி வருந்தினார்கள். அநேக சிறு பிள்ளைகள் பட்டினியால் வருந்தியதைப் பார்க்க மிக்க பரிதாபமாக இருந்தது.

அவ்வூரிலே இருந்த ஒரு பிரபு அச்சிறு பிள்ளைகளில் இரக்கம் கொண்டு அவர்களில் இருபது பேரைத் தமது வீட்டிற்கு அழைத்தார். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மோதகம் கொடுக்கும்படி அவர் கட்டளையிட்டார். மோதகமெல்லாம் ஒரு கூடையில் அவர்கள் முன் வைக்கப்பட்டன. அந்தப் பிரபு அவர்களைப் பார்த்து, "பிள்ளைகளே, நீங்கள் இந்த மோதகங்களில் ஒவ்வொன்று எடுத்து உண்ணுங்கள். இப்படியே பஞ்சம் முடியும் வரையும் இங்கே வாருங்கள், நான் உங்களுக்கு மோதகம் தருவேன்" என்றார்.

"மோதகத்தை எடுங்கள்" என்று பிரபு சொன்னவுடனே, பிள்ளைகள் பெரிய மோதகங்களை எடுப்பதற்காக முற்பட்டு நெருங்கிவந்து கூடைமேல் விழுந்து தள்ளுண்டு இடியுண்டு ஒவ்வொன்றை எடுத்துக்கொண்டு ஓடினார்கள். அந்தப் பிரபு அவர்களுக்குச் செய்த நன்மைக்காக அவர்கள் அவருக்கு நன்றி சொல்ல நினைக்கவுமில்லை.

கிரிசாம்பாள் என்னும் ஒரு சிறுமி மாத்திரம் தனியே நின்றாள். அவள் மற்றையோர்களைப்போல இடிபட, இழுபட, தள்ளுப்படப் போகவில்லை. அவள் கூடைக்குச் சிறிது தூரத்திலே பொறுமையாய் நின்றாள். அந்தக் கூடையில் ஒரு சிறு மோதகம் மாத்திரம் இருந்தது. அவள் பிரபுவைப் பார்த்து முகமலர்ச்சியோடுந் தாழ்மையோடும் அவருக்கு நன்றி சொல்லிவிட்டு, அந்தச் சிறிய மோதகத்தை எடுத்துக் கொண்டு போனாள்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த பிரபுவுக்கு அவளிலே பற்றுண்டானது. அடுத்த நாள் எல்லாப் பிள்ளைகளும் வந்தார்கள். கூடை நிறைய மோதகம் இருந்தது. முதல் நாட்போலவே பிள்ளைகள் தள்ளுப்பட்டு நெரிபட்டுப் பெரிய மோதகங்களை எடுத்துக்கொண்டு ஓடினார்கள். பொறுமையாய்த் தூரத்தில் நின்ற கிரிசாம்பாளுக்கு மற்றைய மோதகங்களின் பாதியளவு மில்லாத ஒரு சிறு மோதகங் கிடைத்தது. அவள் அதை எடுத்துக் கொண்டு பிரபுவுக்கு நன்றி சொல்லிவிட்டுப் போனாள்.

மோதகத்தைக் கொண்டுபோய் வழக்கப்படி தாயிடம் கொடுத்தாள். தாய் அதை பிரித்தபோது, அதற்குள் இருந்த ஆறு வெள்ளி ரூபாக்கள் கலீரென்று விழுந்தன. தாய் மகளை நோக்கி, "கிரிசா, இது என்ன மோசம்? ஏதோ தவறுதலினால் இந்தக் காசு இதற்குள் வந்துவிட்டது. மோதகம் எங்களுக்குரியது, பணம் எங்களுக்குரியதன்று, ஆதலால் இதை விரைவாய்க் கொண்டுபோய் பிரபுவிடம் கொடுத்துவிடு" என்று அனுப்பினாள்.

கிரிசா பணத்தைக் கொண்டுபோய்ப் பிரபுவிடம் கொடுக்க, பிரபு அவளைப் பார்த்து, "மகளே, நான் இப்பணத்தை மோதகத்துள் தவறாக வைக்கவில்லை. உன்னுடைய பொறுமையையும் சாந்த குணத்தையும் மெச்சி, அதற்கு வெகுமதியாக உனக்குக் கிடைக்கும் மோதகத்திற்குள் இப்பணத்தை வைப்பித்தேன், நீயே அதை எடுத்துக் கொள். பெரிய மோதகம் வேண்டுமென்று சண்டையிடாமல் தனக்குக் கிடைத்தது போதும் என்றெண்ணித் திருப்தியடையும் பிள்ளைக்கு மோதகத்திற்குள் கிடைத்த பணத்திலும் பார்க்க ஆயிரம் மடங்கு மேலான வெகுமதி கடவுளால் கிடைக்கும்" என்றார். கிரிசா பணத்தை ஏற்றுக்கொண்டு வீடு சென்றாள்.

***(சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் எழுதிய சைவபோதம் என்ற நூலிலிருந்து நன்றியுடன் பெறப்பட்டது.)***

## நம்பிக்கை

நம்பிக்கையே வெற்றிக்கும் நிம்மதிக்கும் அடிப்படையானது. ஒருவருக்கு, அவரது நம்பிக்கைக்குரிய மருத்துவர் மருந்துக்குப் பதிலாக வெறும் தண்ணீரையே ஊசி மூலம் ஏற்றினாலும், நோய் குறைந்துவிட்டது போல அவருக்குத் தோன்றுகிறது. இதற்கு நம்பிக்கைதான் பிரதான காரணம். மருந்து பாதி, மனநம்பிக்கை பாதி.

நம்பிக்கையோடு பிரார்த்தித்தால் விதியின் வேகம் குறைந்துவிட்டதாக தோன்றுகிறது. விரோதித்து நின்ற விதி ஒத்துழைப்பதாகவும் தோன்றுகிறது. 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்று ஒருவரியில் சொல்லிவைத்தார்கள் நம்முடைய மூதாதையர்கள்.

ஆதி மனிதன் கடலைக் கண்டு பயந்தான். அடுத்த மனிதன் கொஞ்சத் தூரம் கடலுக்குள் நடந்து பார்த்தான். அவனுக்கு அடுத்தவன் நீந்திப் பார்த்தான், இன்னொருவன் கட்டையைப் பிடித்துக்கொண்டு பயணம் போனான். கட்டை படகு ஆயிற்று, படகு கப்பலாயிற்று, பயணம் சுலபமாயிற்று. கடலும் கடக்கக் கூடியதே என்ற நம்பிக்கை வந்தது. உலகம் உருண்டை என்ற உண்மையும் தெரிந்தது.

இன்பமும் நிம்மதியும் நம்பிக்கையில்தான் தோன்று கின்றன. துன்பங்களைக் களைவதற்கு தெய்வ நம்பிக்கையே முக்கியம்.

***- கவிஞர் கண்ணதாசன்.***

## தண்டனை

ஒரு அரண்மனை. அதன் மேல்மாடத்திலே ராஜாவும் ராணியும் அமர்ந்திருந்து பழங்களை உரித்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். சுளைகளை சாப்பிட்டுவிட்டு அதன் தோல்களை வெளியே எறிகிறார்கள்.

ஒரு சந்நியாசி அவனுக்கோ மிகுந்த பசி. அரண்மனையின் வெளித் திண்ணையில் அவன் உட்கார்ந்திருக்கிறான். ராஜாவும் ராணியும் தூக்கிஎறிந்த தோல்களை எடுத்து சந்நியாசிசாப்பிடுகிறான். இதனை ராஜாவின் சேவகர்கள் பார்த்துவிட்டார்கள். சந்நியாசியை இழுத்துக்கொண்டுபோய் ராஜா முன்னால் நிறுத்துகிறார்கள்.

அவனை சவுக்கால் அடிக்கும்படி ராஜா கட்டளையிடுகிறான். அடிவிழ அடிவிழச் சந்நியாசி சிரிக்கிறான்.

"ஏன் சிரிக்கிறாய்?" என்று ராஜா கேட்கிறான். "அரசே! தோலைத் தின்றவனுக்கே இவ்வளவு அடி என்றால் சுளையைச் சாப்பிட்டவனுக்கு இறைவனால் எவ்வளவு அடி கிடைக்கப் போகிறது என்று எண்ணிப்பார்த்தேன். சிரிப்பு வந்துவிட்டது" என்றான் சந்நியாசி.

***-கவிஞர் கண்ணதாசன்***



மகா சிவராத்திரியன்று
எமது இந்து மக்கள் யாவரும்
எமது சமயாசார முறைகளைக்
கடைபிடிக்க வேண்டும்



## அகில இலங்கை இந்து மாமன்றம் வேண்டுகோள்

எதிர்வரும் 10.03.2013ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மகா சிவராத்திரி தினமாகும் இந்து மக்களின் முக்கிய தினமான மகா சிவராத்திரி தினத்தன்று சகல இந்து மக்களையும் சிவ வழிபாட்டில் ஈடுபட்டு பல்வேறு இன்னல்களையும் எதிர்நோக்கியுள்ள எமது சகோதர, சகோதரிகளுக்கு விமோசனம் கிடைக்கப்பிரார்த்தனை செய்யுமாறு அன்பாக வேண்டிக்கொள்கிறோம்.

மேலும் சிவராத்திரியை "வர்த்தக விடுமுறையாக" பிரகடனப்படுத்துமாறு நாம் ஒவ்வொரு வருடமும் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தும் அதனை இன்னமும் நடைமுறைப்படுத்தாமலிருப்பது எமக்கு மன வேதனையை தருகிறது.

எனினும் அன்றைய தினம் இந்து மக்கள் சகலரும் சமய வழிபாட்டில் ஈடுபட வழிசெய்யும் பொருட்டு அவர்களுக்கு விடுமுறை வழங்குமாறு தொழில் அமைச்சையும் சகல தொழில் நிறுவனங்களையும் வேண்டிக்கொள்கின்றோம்.

மேலும் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு மதுபான சாலைகள் மற்றும் இறைச்சிக் கடைகளை மூடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இந்து மாமன்றம் இத்தால் வேண்டுகோள் விடுக்கின்றது.

மகாசிவராத்திரி அன்று இந்து மக்கள் சுதந்திரமாக சமய வழிபாட்டில் ஈடுபட வழிசெய்து கொடுத்தல் வேண்டும். இதன்பொருட்டு அவர்கள் அன்றைய தினம் இரவிலும் ஆலயங்களுக்குச் சென்று வர பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதுடன் பொதுப்போக்குவரத்து வசதிகளையும் ஏற்படுத்தித்தர வேண்டுமென அகில இலங்கை இந்து மாமன்றம் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றது.

பாடல் பெற்ற புண்ணிய தலமாகிய திருக்கேதீச்சரத் தலத்தின் புனருத்தாரண வேலைகள் ரூபா 360 மில்லியனுக்கு மேலான மதிப்பீட்டில் இந்திய அரசின் உதவியுடன் ஆரம்பமாகி உள்ளது. மாமல்லபுரத்தில் இதற்கான சிற்பவேலைகள் நடைபெறுகின்றன. இன்னும் சில மாதங்களில் திருக்கேதீச்சரத்திலும் வேலைகள் ஆரம்பமாகவுள்ளது.

இப்புனித கைங்கரியத்திற்காக சகல இந்து மக்கள் சார்பிலும், அகில இலங்கை இந்து மாமன்றம் தனது மனமார்ந்த நன்றிகளை மீண்டும் இந்திய அரசாங்கத்திற்கு தெரிவித்துக்கொள்கிறது.

சிவராத்திரி தினத்தன்று திருக்கேதீச்சரத்தில் இந்து மாமன்றத்தின் காலாண்டு இதழாகிய "இந்து ஒளி" (தீபம்-17, சுடர்-02) வெளியிட்டு வைக்கப்படும்.

சிவராத்திரிதினமாகிய எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைசகல இந்து ஆலயங்களிலும் சமய முறைப்படி வழிபாடு நடக்க வேண்டுமென்றும், தேவையற்ற கழியாட்ட நிகழ்வுகள் தவிர்க்கப்பட வேண்டுமென்றும், அகில இலங்கை இந்து மாமன்றம் அன்புடன் கேட்டுக்கொள்வதுடன் ஊடகங்களும் அவ்விதமே ஒலி, ஒளிபரப்புகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் வேண்டிக்கொள்கின்றோம்.

சகல இந்து மக்களும் எமது சமயாசாரமுறைகளை மறவாது, எமது பண்பாடுதவறாது, எமது மரபுவழிவாழ வேண்டும். என்பதையும் வலியுறுத்திக் கூறவிரும்புகின்றோம்.

கந்தையா நீலகண்டன்
*தலைவர்*

முத்தையா கதிர்காமநாதன்
*பொதுச்செயலாளர்*

மங்கையர் ஒளி



# தாய்மையே இறைவனின் முதல் வடிவம்

தெய்வத்திருமகள் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

*"தாயினும் நல்ல தலைவர் என்றடியார்*
*தம்மடி போற்றிசைப் பார்கள்*
*வாயினும் மனத்தும் மருவிநின் றகலா*
*மாண்பினர் காண்பல வேடர்*
*நோயினும் பிணியும் தொழிலர்பால் நீக்கி*
*நுழைதரு நூலினர் ஞாலம்*
*கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த*
*கோண மாமலை யமர்ந்தாரே."*

உயிர்களைப் பக்குவப்படுத்தி முத்தியை வழங்கும் நிலையில் இறைவன் முதலில் எடுக்கும் வடிவம் தாய் வடிவமாகும். அதாவது குழந்தையைப் பெற்று பாலூட்டி தாலாட்டி தொட்டிலில் வளர்த்தி பின்பு சிறிது வளர்ந்த ஞான்று விளையாடவிட்டு பின் நின்று பார்த்து மகிழ்பவள் தாய். குழந்தை குறும்பு செய்யுமாயின் அச்சுறுத்தியும் அணைத்து பின்பு அறிவுரைகள் கூறியும் பேணுபவள் தாய். எவை எவை எப்பொழுது தேவை என அறிந்து கொடுத்து வளர்ப்பதுமன்றி அமைதியாக உறங்க வைப்பவளும் தாய். இதே நிலையிலேயே இறைவனும் தாயாக நின்று ஆன்ம கோடிகளைப் பேணி எடுத்துப் பிறப்பறுக் கின்றான் என்பது சைவசித்தாந்த முடிபு. இறை நிலையில் இது ஒரு உயர்ந்த தத்துவமாகும்.

உலக வாழ்க்கைக்கு ஜீவ ஒளியாகப் பெண்குலமே அமையவேண்டும். தர்மம், சத்தியம், தாய்மை, பொறுமை, கருணை, கற்பு, தன்னம்பிக்கை, தன்னடக்கம் ஆகியவை அனைத்தும் பெண்குலத்துப் பெருமை தருவன. பிறந்த இடத்துக்கும் புகுந்த இடத்துக்கும் பெருமையைத் தேடிக் கணவனைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றி விளங்க வேண்டிய கடமை பெண்களுக்கு உண்டு.

தாய்மைக்கே தனியுரிமை கொடுத்துப் பேணும் சமயம் இந்துமதம். இதையொட்டியே சாக்தம் என்ற ஒரு பிரிவு ஏற்பட்டது. சைவம் அம்மை அப்பனாகப் பேசி நிற்க, சாக்தம் எல்லாம் அம்மையின் உறவாகவே இணைந்து விடுகிறது.

தாய்மையருள் மீன் கண் பார்வைபோல் இரட்சிப்பது. அருளே உமையாகவும் அறிவே சிவமாகவும் இவ்வுலகை இயக்கி நிற்கும் நிலையை சைவத் திருமுறைகளில் பரக்கக் காணலாம்.

ஐந்தொழில் இயக்கத்தை ஏற்படுத்துவது திருக்கூத்து. இதனை ஆடுபவன் நடராசன். தாளம் போடுபவள் பராசக்தி. அம்மையின் தாள லயம் குன்றினால் அப்பனின் தாண்டவம் பிழைத்துவிடும். தாண்டவம் பிழைத்தால் உலக இயக்கமே தாறுமாறாகி விடும். இதனால் எம்பெருமான் அம்மையின் பக்கம் நோக்கி அமைதியாக ஆடுகிறான்.

*"மாதொரு பாகம் நோக்கி மன்னு சிற்றம்பலத்தே*
*ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக் கூத்தாடும் நாதனார்"*

என்று போற்றுகிறார் சேக்கிழார்.

சங்ககால மக்கள் இயற்கையைப் போற்றி வாழ்ந்த சிறப்புக்குரியவர்கள். தீயினில் தெறலாய், பூவினுள் நாற்றமாய், கல்லினுள் மணியாய், சொல்லினுள் வாய்மையாய் இறைப் பொருளை அனுபவித்தவர்கள்.

எனினும், பெண்மக்கள் திருவிளக்கேற்றியும், மலர் தூவியும், நெல் தூவியும், கோலமிட்டும் வழிபட்டமைக்குச் சான்றுகள் பலவுண்டு. வீட்டு முற்றத்து மல்லிகை, மலரும் மாலை நேரத்தில் விளக்கேற்றி வழிபாடு செய்வதில் அவர்கள் ஈடுபாடு கொண்டமையும், குரவைக் கூத்தாடி முருகனைப் பூசித்த முறைமையும் அக்காலப் பாடல்களில் காண முடிகிறது.

தை நீராடிப் பாவை நோன்பு அனுட்டித்த சிறப்புக்களையும் அகநானூறு என்ற நூலில் காண முடிகிறது.

சைவத்தின் பெருமையிலும் வளர்ச்சியிலும் பெண்கள் பெரும் பங்கு பெற்றுள்ளமையை எடுத்துக் காட்டும் முகமாகப் பூம்பாவையை எழுப்பிய இடத்தில் ஞானசம்பந்தர் வேண்டுதலைக் காண்கிறோம்.

*"மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்*
*அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்*
*கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்*
*உண்மையா மெனில் உலகர் முன்வருகென உரைப்பார்"*

அடியாரைப் போற்றலும் அமுது செய்வித்தலும் ஆண்டவன் பணிகளில் ஈடுபடுதலும் பெண்குலத்தின் கடமைகள் என்பதை இவ்வரலாறு காட்டுகிறது.

இன்னும் பக்தி நெறியில் பெண்மக்கள் கொண்டுள்ள பங்கைக் கவனிப்போம். திருவாசகத்திலே மணிவாசகர் கூற்றொன்றில் காணலாம்.

*"முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே*
*பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே*
*உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்*
*உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்.*
*அன்னவரே எங்கணவ ராவா ரவருகந்து*
*சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்*
*இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்*
*என்ன குறையுமிலோ மேலோ ரெம்பாவாய்.*

கன்னியர்கள் தமக்குக் கிடைக்கப் பெறும் கணவன்மார் சிவதொண்டர்களாகவே அமைய வேண்டுமென்று பிரார்த்தனை செய்கின்றனர்.

ஏனென்றால் பக்தியனுபவம் கணவனுக்கும் மனைவிக்கும் ஒன்றாய் அமையாவிடத்துத் திருப்தியாக இல்லற தர்மம் அமையாது.

# நிழல் ஒளி

## அங்கத்துவ சங்கங்களின் செய்திகள்...

**02.03.2013 இல் இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தின் "சரஸ்வதி மண்டபம்" மீண்டும் திறந்துவைக்கப்பட்டுள்ளது.**



பம்பலப்பிட்டி (கொழும்பு) இந்துக் கல்லூரி ஸ்ரீ வித்தக விநாயகர் ஆலயத்தில் பூசை வழிபாடு




கல்லூரியிலிருந்து சரஸ்வதி மண்டபத்திற்கு ஊர்வலம்



புதுப்பொலிவுடன் சரஸ்வதி மண்டபம்





வண. ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமி, பேராசிரியை முத்தமிழ் பேரரசி ஞானவித்தகி கலாநிதி சரஸ்வதி இராமநாதன், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் ஆகியோர் வரவேற்கப்படுகின்றனர்.




மண்டப வாசலின் மீது நிர்மாணிக்கப்பட்ட சரஸ்வதி சிலை ஆன்மீகச்சுடரினால் திறக்கப்படுகின்றது.




சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் சரஸ்வதிக்கு தீப ஆராதனை செய்கிறார்



புதுப் பொலிவுடன் புனருத்தாரணம் செய்யப்பட்ட சரஸ்வதி மண்டபத்தை ஆன்மீகச்சுடர் திறந்து வைக்கிறார்.



சபையோர்



ஆன்மீகச்சுடர், சங்க உபதலைவர் திரு வே. கந்தசாமி, வெள்ளவத்தை சம்மாங்கோடார் மாணிக்கவிநாயகர் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் திரு அ. மாணிக்கவாசகர் ஆகியோர் மங்கள விளக்கேற்ற சபைத் தலைவர் திரு. ச. இராமச்சந்திரன், சிவஸ்ரீ சற்சபேசக்குருக்கள், திருமதி சாந்தி நாவுக்கரசன், சிவஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்கள் ஆகியோர் நிற்கின்றனர்.



மேடையில் சங்கச்செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன், பேராசிரியை ஞானவித்தகி முத்தமிழ் பேரரசி சரஸ்வதி இராமநாதன், சங்கத் தலைவர் திரு. ச. இராமச்சந்திரன், அகில இலங்கை இந்து மாமன்ற அறங்காவலர் சபைத் தலைவர் இறை சிரோரத்தினம் வி. கயிலாசபிள்ளை, ஆன்மீகச்சுடர், செஞ்சொற்செல்வர், திரு. அ. மாணிக்கவாசகர், திருமதி சாந்தி நாவுக்கரசன் ஆகியோர்



சபையோர்

## சக்தி இல்லத்தில்...



மாமன்றத்தால்நடாத்தப்படும்இரத்மலானைகொழும்புஇந்துக்கல்லூரி விடுதியில் வளர்ந்த திருநிறைச்செல்வன் கே. முருகக்கனி திருமணம் செய்ததையொட்டி சக்தி இல்லத்தில் நடந்த வரவேற்புபசாரத்தில் புதுமணத் தம்பதிகளுடன் மணவிழாவில் பொன்விழா கண்ட திரு. திருமதி. கயிலாசபிள்ளை தம்பதியினர்



அன்று நடந்த விடுதிப் பிள்ளைகளின் மாதாந்த பிறந்த தினத்தில் கல்லூரி அதிபர் திரு. ஜெயக்குமார்

## யாழ்ப்பாணத்தில்....



கீரிமலை சிவபூமி மடத்தில் வண. ஓலாந்தோ ஆனந்ததேரருடன் செஞ்சொற்செல்வர், ஆன்மீகச்சுடர், திரு. ஜெயசிங்கம்




07.02.2013ல் கோண்டாவில் சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலையை மனிதநேய மாமணி வி.கயிலாசபிள்ளை தம்பதியினர் திறந்து வைக்கும் காட்சி



07.02.2013ல் கீரிமலை சிவபூமி மடத்தில் பூசை வழிபாட்டில் ஆன்மீகச்சுடர், செஞ்சொற்செல்வர், திருமதி அ. கயிலாசபிள்ளை

## கொழும்பில்...





12.02.2013 இல் அதிபர் திரு. ஐ. இராசரத்தினம் தலைமையில் நடந்த பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஸ்தாபகர் தினத்தில் ஸ்தாபகர் சார்பில் பங்குபற்றிய ஆளுநர் சபை உறுப்பினர்கள், சிட்னி பழைய மாணவர் சங்க புலமைப்பரிசிலை க. பொ. த. (உ/த) பரீட்சையில் சாதனை படைத்த மாணவனுக்கு வழங்குதலும், ஸ்தாபகர் சங்கச் செயலாளர் உரை நிகழ்த்தலும்

01.03.2013 இல் பம்பலப்பிட்டி இராமநாதன் மகளிர் கல்லூரியில் ஆன்மீகச்சுடரின் அருளுரை



பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர்களும் மாணவிகளும்



01.03.2013 இல் கொழும்பு 02 அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஆன்மீகச்சுடரின் அருளுரை




பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் 01.03.2013 அன்று ஆன்மீக உரை



பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவர்கள்

## திருகோணமலையில்.....






2012 மார்கழி மாதம் இடம்பெற்ற வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மாவட்ட மக்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையுடன் அதன் அங்கத்துவ சங்கமான திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையால் நிவாரணப் பொருட்கள் வழங்கப்படுகிறது.

## சமூக நலன் சேவைகள்...





மாமன்றத்தின் சமூக நலன்குழுவால் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக்கொப்பிகள் வழங்கப்பட்ட போது..






மாமன்றத்தின் சமூகநலன் குழுவால் சிறைக்கைதிகளுக்கு தைப் பொங்கலுக்கான பொருட்கள் வழங்க செய்யப்பட்ட ஒழுங்குகள்


## மலேசியாவில் மாமன்ற தூதுக்குழு



05-02-2013 அன்று மலேசிய இந்து சங்கத் தலைவர்களுடன் மாமன்றத் தூதுக்குழுவினர், ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் ஆகியோருடன் மாமன்ற தலைவர் திரு. நீலகண்டன்



மலேசிய இறைவன் இல்லத்தில் ஹவாய் ஆதீன குரு சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் பக்தர்களுடன் தூதுக்குழு





மலேசியா பத்துமலை முருகன் ஆலயத்தின் அருகே உள்ள இராமகிருஷ்ணமிஷனுக்கு மாமன்ற தூது குழுவினர் விஜயம்.

## வன்னியில்....





புதுக்குடியிருப்பு அரசினர் வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்ற அனுசரணையுடன் ஆன்மீகச்சுடர் பொருட்கள் அன்பளிப்பு

## 12.01.2013 அன்று மாமன்றத்தின் அனுசரணையுடன் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடந்த சுவாமி விவேகானந்தரின் 150 வது ஜனன நிகழ்வு விழா.



சுவாமி விவேகானந்தரின் சிலைக்கு மாலை அணிவித்த பின் மாண்புமிகு இந்திய தூதுவர் அசோக் கே. காந்தாவும் இராமகிருஷ்ண மிஷன் தலைவரும் ஏனைய பிரமுகர்களுடன்



மாண்புமிகு இந்திய தூதுவர் அசோக் கே. காந்தா மங்கள விளக்கேற்றுகிறார்.





விவேகானந்தரின் 150 வது ஜனன சிறப்பிதழாக வெளியிடப்பட்ட இந்து ஒளியினை திரு. வி. கைலாசபிள்ளை வெளியிட்டு வைக்கிறார்.



இராமகிருஷ்ண மிஷன் தலைவரும் இந்திய தூதுவரும் இந்து ஒளி சிறப்பிதழை பார்க்கும் காட்சி



இந்திய தூதுவர் உரையாற்றுகின்றார். திரு. தே. ம. சுவாமிநாதன், திரு. கந்தையா நீலகண்டன், திரு. வி. கயிலாசபிள்ளை, திரு. ஏ. ஆர். சுரேந்திரன், இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். (பக்கம் 49ஐ பார்க்கவும்)

இதற்கு எடுத்துக் காட்டாகக் காரைக்கால் அம்மையார் வாழ்வு அமைகிறது. விடையவர்பால் நல்கிய அன்புடன் அழகில் கொழுந்தெழுவதென வளர்ந்தவர் அம்மையார். ஆனால் திருமண வாழ்வு சிறப்பாக அமைய வில்லையெனினும் கணவனாலேயே "தெய்வம்" எனப் போற்றப்படும் பெருநிலையும் இவருக்கு ஏற்படுகிறது. அந்நிலையிலேயே சிவநெறியொன்றே கைவரப்பெற்றவராய் உற்பவித்தெழுந்த ஞானத் தொருமையிலே அற்புதத் திருவந்தாதியைப் பாடுகிறார். அதில் ஒரேயொரு பாடல் மாத்திரம் எடுத்துக் கொள்வோம்.

*"வானத்தா னென்பாரு மென்கமற் றும்பர்கோன்*
*தானத்தா னென்பாரும் தாமென்க - ஞானத்தான்*
*முன்னெஞ்சத் தாலிருண்ட மெய்யொளிசேர் கண்டத்தான்*
*என்னெஞ்சத் தானென்பன் யான்"*

இங்கே ஒரு பெருமிதம் தோன்றுகிறது. அதாவது ஆண்டவன் தன்னகத்திலே குடியிருக்கிறான் என்பதே அதற்குக் காரணமாகும்.

"ஒன்றே நினைத்திருந்தேன்", "ஒன்றே துணிந்தொழிந்தேன்", "ஒன்றே என்னுள்ளத்தினுள் அடைந்தேன்" என்று பாடிப் பேய் வடிவுடன் காற்றினும் கடிதாகச் செல்கிறார்.

"அண்டர் நாயகனார் என்னை அறிவாரேல் அறியா வாய்மை
எண்டிசை மாக்களுக்கு யான் எவ்வுருவாயென்"

என்பது அவர் கருத்து.

தலையினால் நடந்து திருக்கயிலையை அண்மித்த பொழுது "வருமிவள் நம்மைப் பேணும் அம்மை" என்று கூறி இறைவன் உமையம்மைக்கு அறிமுகம் செய்து வைக்கிறார். அதுவுமன்றி அம்மையே உனக்கு என்ன வேண்டுமென்று கேட்ட ஞான்று அதற்குப் பதிலாக வெளிப்பட்ட அருள் வாக்குகளை நாம் என்றென்றும் போற்றி ஓத வேண்டியவர்களாக இருக்கிறோம். இறைவனை நோக்கி அம்மையார் வேண்டி நின்ற இவ்வரம் எம்மையும் நெருட்டுகிறது.

*"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்*
*பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல்*
*உன்னை என்றும்*
*மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி*
*அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்"*

இறைவனால் "அம்மையே" என்று அழைக்கப்பட்ட பெருமையைச் சேக்கிழார் வியந்து போற்றி "மடுத்த புனல் வேணியினார் அம்மை என மதுர மொழி கொடுத்தருளப் பெற்றாரை, அடுத்த பெருஞ் சீர் பரவல் யாரளவாயினதம்மா!" எனப் பாடியருளினார்.

வீட்டிலே கணவன்மாருக்குப் பின்னணியாக நின்று பெருந் தொண்டும் தியாகமும் புரிந்த பல பெண்மணிகளைப் பெரிய புராணம் எடுத்துக் காட்டுகிறது. திருநீலகண்டம் என்ற சொல்லையே தனது மந்திர வாக்காகக் கொண்டு ஒழுகி அடியார்களுக்குத் திருவோடு செய்தளித்து வாழ்ந்தவர் திருநீலகண்டர். இவருடைய புற வொழுக்கங் காரணமாகக் கருத்து வேற்றுமை மனைவியாருக்கிருந்தது. சிவனடியார் ஒருவருக்கு இத்தகைய மாசு ஏற்படக்கூடாது என்பது அவருடைய மனைவியாரின் எண்ணம். ஒரு நாள் கணவனார் தீண்டப் போன சமயத்தில் "எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்" என்று சத்தியம் செய்தார். கணவனார் சிறந்த சிவ தொண்டராகையால் அன்று முதல் தமது மனைவியையோ பிற பெண்களையோ சாரவில்லை. எவருக்கும் இச்செய்தி தெரியா வண்ணம் வாழ்க்கை நடாத்தினார் அவர் மனைவியார்.

*"கற்புறு மனைவியாரும் கணவனார்க்கான எல்லாம்*
*பொற்புறு மெய்யுறாமல் பொருந்துவம் போற்றிச் செய்ய*
*இற்புறம் பொழியா தங்கள் இருவரும் வேறுவைகி*
*அற்புறு புணர்ச்சியின்மை அயலறியாமை வாழ்ந்தார்"*

கணவருடைய கடமைகளிலும் குடும்பக் கடமைகளிலும் தவறு நேராமலும் வேண்டியாங்கு செய்து வேறு வாழ்ந்தமையைத் தெரிவிப்பது இப்பாடலாகும். இயற்பகையார் மனைவியும் சிறுத்தொண்டர் மனைவியும் புரிந்த தியாகம் அனைவரும் அறிந்ததே. ஏன் பிற்காலத்தில் அன்னை சாரதாதேவியின் தியாகம் எம்மை மெய்சிலிர்க்கச் செய்கிறதே. தொண்டு நெறியில் தலைப்பட்டு தூண்டு தவ விளக்காக அமைந்து பிறந்த குடியையும் கூடிப்பிறந்த தம்பியையும் பெருமைப்படுத்திய பணி திலகவதியாருடையது. தம்பியார் உளராக வேண்டும் என வைத்த தயவு பெருகிச் சைவத்தையே வளர்த்த தொண்டரை ஆக்கித் தந்தது. திலகவதியாரின் தூய தொண்டுகளுக்கு இது ஒரு பெரும் எடுத்துக் காட்டாகும்.

இவ்வழியில் நின்று நாட்டை மேலோங்கச் செய்த பெருமை மங்கையர்க்கரசியாருக்கு உண்டு. நாட்டையும் குடிமக்களையும் நன்னெறியிற் செலுத்த வேண்டியது அரசியல் தர்மமாகும். அரசியற் பணியில் இது சிவதர்மமாகவே மாறிவிட்டது.

*"மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம்*
*வளவர் திருக்குலக் கொழுந்துவளை கைமானி*
*செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்*
*தென்னர் குலப்பழி தீர்த்த தெய்வப் பாவை*
*நங்கள் பிரான் சண்பையர் கோன் அருளினாலே*
*நம் தமிழ் நாடுற்ற இடர் நீக்கித் தங்கள்*
*பொங்கொளி வெண் திருநீறு பரப்பினாரைப்*
*போற்றுவார் கழல் எம்மாற் போற்றலாமே"*

தம்மைப் பேணி தன் கணவனைப் பேணி சைவத்தைப் பேணி, பாண்டி நாட்டையே பேணிய பெருமை மங்கையர்க்கரசியாருக்கு உண்டு. ஆன்மீகத்தோடு கலவாத அரசியல் அர்த்தமற்றது என்பதை மன்னனுக்கு எடுத்துக்காட்டியவர் இவர். இடர்ப்பாடு மலிந்த காலத்திலே நெருக்கடிக்குள்ளே சைவத்தைப் பேணி வளர்த்த அம்மையார் "தெய்வப் பாவை" என்று போற்றப்படுகிறார். பெண் பிறந்தார் யாவரும் இத்தகைய பணிகளிலும் முன்னின்று நாட்டை ஆன்மீக நெறியில் நலனடையச் செய்தல் வேண்டும்.

**நன்றி : அகில உலக இந்து மாநாடு - சிறப்பு மலர் (1982)**



*மைசூர் சாமுண்டேஸ்வரி நந்தி தேவர்*

# நலம் பல தந்தருளும் நந்தியெம்பெருமானும் நந்திக் கொடியும்



- சிவநெறிக் கலாநிதி
கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருள் சிவபெருமான். சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளான அவருடைய அருள்பெற்று அவருக்கு வாகனமாக இருப்பது இடபம். இந்த உலகில் சகலத்தையும் ஆட்டிவைப்பவர் சிவனே. அந்த வகையில் சிவபெருமானுக்கு வாகனமாக இருக்கக் கொடுத்துவைத்தது இடபமே!

சிவபெருமானுடைய கோயில்களில் கொடிமரத்துக்கு முன்பாக பலிபீடத்துக்கு அருகில் மூலஸ்தானத்தை நோக்கியவண்ணம் இருப்பவர் நந்தியெம்பெருமான். இவரிடம் அனுமதி பெற்றே ஆலயத்தினுள் செல்ல வேண்டும். பிரதோஷத்திலன்று இவருக்கு விசேட பூசை நடைபெறும். சிவசின்னமாகப் போற்றப்படும் நந்தியெம்பெருமானை தாங்கியதாகவே சைவசமயக் கொடியான நந்திக்கொடியும் அமைந்துள்ளது. எமது சைவசமய விழாக்களிலும் நந்திக்கொடி ஏற்றுகின்ற ஓர் ஒழுங்கும் தற்போது நடைமுறைக்கு வந்திருக்கின்றது. இதன் பெருமை சொல்லிடமுடியாது.

திருமூலர் தமது திருமந்திரத்திலே "நந்திமகன் தனை ஞானக்கொழுந்தினை" என்கிறார். சிவபெருமானையே நந்தியென்று கூறுமளவுக்கு இவர் சிறப்புப் பெற்றிருக்கின்றார். எனவே நாமும் நந்திதேவரை வணங்கி எம் வாழ்வை வளமாக்கிக் கொள்ளலாம். நந்திக்கொடி சிவபெருமானுக்குச் சமம். ஆகவே நந்திக் கொடியின் மேன்மையை உணர்ந்து நாம் அதற்குக் கௌரவம் கொடுப்பது நமது தலையாய கடமையாகும்.

முற்காலத்திலிருந்த நந்திவர்மன் என்ற ஓர் அரசன் தனது பல்லவ சாம்ராஜ்யத்தில் நந்திக் கொடியைப் பறக்க விட்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது. இவன் தனது நாட்டு மக்களிடம் நந்திக் கொடியைச் சிவசின்னமாகக் கருதி வணங்க வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தானாம். அது மாத்திரமன்றி சிற்பங்களிலும் ஓவியங்களிலும் நந்தியெம்பெருமானைக் குறிக்க வேண்டுமென்றும் பணித்திருந்ததாக வரலாறு பேசுகின்றது.

இந்தியாவிலே நந்திவழிபாடு மிகச் சிறப்புற்றிருந்தது. தஞ்சாவூரிலே மிகப்பெரிய நந்தியைக் கல்லிலே வடித்து வழிபாட்டுத் தலத்தில் அவருக்கு முன்னுரிமை கொடுத்து சிறப்புச் செய்திருக்கின்றார்கள். மனித வாழ்க்கையில் வரும் இடர்களைக் களைவதற்கு இந்த நந்திதேவரிடம் முறையிடும் முறை தொன்றுதொட்டு நிலவி வருகின்றது. திருவையாறு, திருவாவடுதுறை முதலிய திருக்கோயில்களிலும் பெரிய நந்தி இருப்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலும் பல கோயில்களில் நந்தியெம்பெருமான் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார். நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் முன்பாக ஒரு பெரிய நந்தி இருப்பதைக் காணக்கூடியதாகவிருக்கின்றது. நந்தியெம்பெருமானிடம் பிரதோஷகாலத்தில் விளக்கேற்றி வைத்துக் குறைகளைச் சொன்னால் மன நிறைவு கிடைக்கும் என்பது ஒரு நம்பிக்கை.


முன்பொரு சமயம் இந்திரன் இடபமாகத் தோன்றிச் சிவபெருமானைத் தாங்கிச் சென்றதாகச் சொல்லப்படுகிறது. அதனால் இந்த நந்தியைத் தெய்வ மாகப் போற்றினர் என்றும், அவரை வழிபட்டால் இந்திர யோகம் அனுபவிக்கலாம் என்றும் நம்பிக்கை நிலவுகிறது. நந்தியெம்பெருமானை வழிபட்டால் சிவபெருமானை வழிபட்டதற்குச் சமம், இது முற்றிலும் உண்மையே!

திரிபுர தகனத்தின்போது தேவர்கள் உருவாக்கிய தேரிலே சிவன் ஏறியபோது அதன் அச்சு முறிந்ததாம். உடனே மகாவிஷ்ணுவானவர் இடபரூபமெடுத்துச் சிவனைத் தாங்கியதாகப் புராணம் கூறுகிறது. சிவாலயங்களின் நுழைவாயிலில் "அதிகாரநந்தி" என்று ஒன்று அமைக்கப்பட்டிருப்பதும் நோக்கத்தக்கது. அத்துடன் சிவாலய மஹோற்சவத்தின்போது ஏற்றப்படும் கொடியில் நந்தி வரையப்பட்டுள்ளது. இதில் கொடிமரமானது பதி என்று போற்றப்படுகின்ற சிவனையும், கொடிக்கயிறு திருவருட்சக்தியையும், கொடிச்சீலை பசுவையும், தர்ப்பைக் கயிறு பாசத்தையும் குறிக்கின்றது.

ஆதலால் சிவ வழிபாட்டில் நந்திக்கொடி பிரதான இடத்திலிருக்கின்றது. சைவசமயிகளாகிய நாம் எமது விழாக்களிலும் மஹோற்சவங்களிலும் நந்திக் கொடி ஏற்றும் மரபைப் பேண வேண்டும். அவ்வாறு செய்துவரத் தமிழ்மக்களின் துன்பதுயரங்கள் சூரியனைக் கண்ட பனி போலாகிவிடும். யாழ்ப்பாணம் நல்லை ஆதீன முதல்வர் தாம் பங்குபற்றும் நிகழ்வுகளில் அருளாசியுரை வழங்கும்போது நந்திக்கொடியின் மகத்துவத்தை நல்லபடி எடுத்துக்கூறிவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

எனவே, சைவர்களாகிய நாம் நந்தியெம்பெருமானுடைய அருமை பெருமையை உணர்ந்து வணங்கி வாழ்த்தி மகிழ்வதோடு, மற்றவர்களுக்கும் மகத்துவத்தை எடுத்துரைத்து நல்வாழ்வுக்கு நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோமாக.

# உலகளாவிய ரீதியில் இந்து மதம்




*From idea to inauguration : (inset) In 1982, Gurudeva gifts a granite Ganesha to a Hindu community in Maryland. (above) Consecration of the completed structure in 1999, celebrated with Gurudeva as guest of honor.*

## அமெரிக்காவில் முருகன் ஆலயம்

அமெரிக்க நாட்டில் அதுவும் ஜனாதிபதியின் அலுவலகமான வெள்ளை மாளிகைக்கு சமீபமாக முருகன் ஆலயமொன்று அமைக்கப்பட்டிருப்பதன் மூலம் அங்கு இந்து மதம் எவ்வளவு தூரம் மதித்துப் போற்றப்படுகிறது என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது

இந்த முருகன் ஆலயம் சம்பந்தமாக அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் அவர்களிடமிருந்து பல தகவல்களை அறியக்கூடியதாக இருந்தது

யாழ் நகரைப் பிறப்பிடமாக கொண்டவர் அன்பர் சரவணபவன் அவர்கள்.அவர் அமெரிக்கா வாஷி ங்டனிலுள்ள உலக வங்கி அலுவலகமொன்றில் பணியாற்றி வந்தவர். இவர் 1982ஆம் ஆண்டில் ஒருநாள் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீனத்துக்கு சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் அவர்களை தரிசிப்பதற்காக சென்றிருந்தார். அவ்வேளையில் இவரிடம் சுவாமிகள் 3 அடி உயரமான விநாயகர் சிலையைக் கொடுத்து இதனை பரிவார மூர்த்தியாக கொண்டு அமெரிக்காவின் தலைநகரமான வாஷிங்டனில் முருகனுக்கு ஓர் ஆலயம் அமைக்கும்படி கேட்டுக் கொண்டார்

சற்குரு சுப்பிரமுனிய சுவாமிகளிடமிருந்து விநாயகர் சிலையைப் பெற்றுக் கொ்ண்ட சரவணபவன் அவர்கள் அதனை முதலில் தனது வீட்டில் வைத்து பூசை வழிபாடுகள் செய்து வந்ததுடன் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுப்பிரார்த்தனை பஜனைகளையும் நடத்தி வந்தார். சில ஆண்டுகள் கழிந்த பின்னர் இலங்கை இந்திய இந்து தமிழர்களைக் கொண்ட நிர்வாக சபையொன்றை ஆரம்பித்து அவர்களது உதவியுடன் சிறு வீடொன்றை கொள்வனவு செய்து அங்கு முருகன் சிலையை மூலமூர்த்தியாகவும் விநாயகர் சிலையை பரிவாரமூர்த்தியாகவும் பிரதிஸ்டை செய்ததுடன் குருக்கள் ஒருவரையும் நியமித்து பூசை வழிபாடுகளை நடத்தி வருவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டார்.

இலங்கை இந்திய நாடுகளிடமிருந்து புலம் பெயர்ந்து வந்து அமெரிக்காவில் தங்கியிருந்த இந்து

மக்கள் பலர் இந்த முருகன் ஆலயத்துக்கு வருகைதந்து வழிபாடுகளை செய்து வந்தனர். அந்த வேளையில் இந்த முருகன் ஆலயத்தை அதற்குரிய விதிமுறைகளுடன் சிறப்பான வகையில் அமைக்கவேண்டும் என்பதில் புலம் பெயர் இந்து மக்கள் விருப்பம் கொண்டனர். அனைவரும் ஒன்றிணைந்து மேற்கொண்ட முயற்சியின் பயனாக வாஷிங்டன் நகரிலேயே வெள்ளை மாளிகைக்கு செல்லும் பிரதான வீதியில் அதற்கு அண்மையில் இடமொன்றைத் தெரிவு செய்து வழிபாட்டியல் பாரம்பரியத்துக்கு அமைந்த வகையில் கருவறைஸ்தூபி விமானம் மற்றும் கோபுரத்துடனும் அதற்குரிய சிற்ப வேலைப்பாடுகளுடனும் கூடிய ஆலயமொன்றை புதிதாக அமைத்து 1999ஆம் ஆண்டு மே மாதம் (வைகாசி விசாகத் திருநாளன்று) மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

இந்தியாவிலிருந்து பல சிவாச்சாரியார்கள் வருகை தந்து மகா கும்பாபிஷேக கிரியைகளை நடத்தி வைத்தார்கள் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீனம் சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் அவர்கள், சுவாமி சச்சிதானந்தா அவர்கள், பேரூர் ஆதீனம் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஆகியோர் மகா கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இந்த முருகன் ஆலயத்திலே வருடந்தோறும் நல்லூர் கந்தனின் மகோற்சவ காலத்திலேயே உற்சவம் நடைபெறுவது வழக்கம்.இங்கு இரதோற்வசம் இடம்பெற்று வருகின்றது. புலம்பெயர் இந்து மக்கள் மட்டுமல்ல ஏராளமான அமெரிக்கர்களும் இந்த ஆலயத்துக்கு வருகை தந்து வழிபாடுகளில் கலந்து கொண்டு வருவதும் சிறப்பான நிகழ்வாகும்.

ஈழத்து சித்தர் பரம்பரையைச் சேர்ந்த யாழ் யோகர் சுவாமிகளின சீடராகிய சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் விருப்பத்தின்படி அன்பர் சரவணபவன் அவர்கள் மூலமாக தொடக்கிவைக்கப்பட்ட இந்த நல்ல கருமம் இந்து மக்களினது பெரும் பங்களிப்புடன் மிகவும் வெற்றிகரமாகவே அமைந்திருக்கிறது மட்டுமல்ல, மேலை நாடுகளில் இந்து மத வளர்ச்சிக்கும் மக்களது ஆன்மீகப் பங்களிப்புக்கும் ஒரு முன்மாதிரியான செயற்பாடாகவும் இருப்பதையும் சிறப்பாக குறிப்பிடவேண்டும்

## மலேசியாவில் இந்து மத விருத்தி

இந்துசமய வளர்ச்சியில் மலேசியா ஆற்றி வரும் பணி பெரிதும் போற்றத்தக்கது.அங்குள்ள இந்து சங்கம் சமய விருத்தியில் பெரிதும் பங்களிப்பு செய்து வருகிறது. சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட வேளையில் மலேசியா இந்து சங்கம் இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழும் மக்களுக்கு செய்த உதவிகள் என்றென்றும் மறக்க முடியாதவை.

மலேசியாவிலுள்ள இலங்கை மக்களும் இந்திய மக்களும் பூர்வீகமாக ஒன்றுபட்டு சமயத்தையும் மொழியையும் காப்பாற்றி வருவதுடன் சமய நிறுவனங்களின் ஊடாக சமய விருத்திக்கும் உதவி வருகிறார்கள்.

அண்மையில் மலேசியா இந்து சங்கம் இந்து மதம் தொடர்பான கருத்தரங்கொன்றை மலேசியாவிலுள்ள இந்து தேசிய சங்கத்தில் நடத்தியிருந்தது. 'டத்தோ மோகன்' தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வின்போது அமெரிக்க ஹவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள், இலங்கையில் இருந்து சென்ற அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு.கந்தையா நீலகண்டன், இந்து மாமன்றத்தின் யாழ் இந்து ஆராய்ச்சி நிலையத்தின் கௌரவ இயக்குநருமான சைவ ஞானபானு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு தொடங்குவதற்கு மூலகாரணமாக விளங்கியவர்கள் மலேசியா வாழ் தமிழ் மக்களாவர். இவர்கள் பரம்பரையாகவே இந்துப் பண்பாட்டை பாதுகாத்து வருகிறார்கள். மலேசியா நாட்டில் இந்து மதம் ஆழமாக வேரூன்றியிருப்பதுடன் இதனூடாக இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இந்துக் கோயில்களை உருவாக்கி அவற்றை நெறிமுறை தவறாது பாதுகாத்து வருவதும் பெருமைக்குரிய விடயமாகும். சகல கோயில்களும் அழகாகவும் நேர்த்தியாகவும் பேணப்பட்டு வருகின்றது.

மலேசியாவில் வாழ்ந்த இலங்கை தமிழர்கள் பல்வேறு தர்ம காரியங்களை அந்த மண்ணில் நிறைவேற்றியிருக்கிறார்கள். கோயில்கள் மட்டுமன்றி மடங்கள், பாடசாலைகள், மண்டபங்கள் வைத்தியசாலைக்கட்டிடங்கள் என பலவற்றை மலேசியாவில் வாழ்ந்த இந்து மக்கள் சென்ற நூற்றாண்டில் திட்டமிட்டு உருவாக்கினார்கள்.

திருக்கேதீச்சர திருப்பணிக்கும் இவர்கள் பங்களிப்புச் செய்தார்கள். தேவாரம் திருவாசகம் முதலான பன்னிரு திருமுறைகளும் அழியாமல் இருப்பதற்கு பல்வேறு அறக்கட்டளைகளை நிறுவி இந்தியாவிலுள்ள சைவ ஆதீனங்களோடு மிகவும் பக்க பலமாக செயற்பட்டவர்கள் மலேசியா வாழ் தமிழ் மக்கள். பெரிய புராணம் திருமுறைகள் போன்ற நூல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வித்திட்டவர்கள் அவர்கள்.

மதமாற்றத்தை தடுப்பதற்கு மலேசியா இந்து சங்கம் நல்ல பல முயற்சிகளை உருவாக்கியிருக்கிறது.அரசியல் கலப்பில்லாமல் உண்மையான ஆன்மீகத்தை மலேசியா நாட்டில் வளர்த்தெடுக்கும் சிறப்பு தனித்துவமானது யாழ்ப்பாணம் அளவெட்டியைச்சேர்ந்த பிரணானந்த சுவாமிகள் மலேசியா பத்து மலை முருகன் அடிவாரத்தில் ஆச்சிரமம் நிறுவி ஆன்மீகப்பணிகளை முன்னெடுத்துச் சென்றார். இவர் சமாதியடைந்த பின்னர் குகபத்தனந்தா சுவாமிகள் ஆச்சிரம பணியை மேற்கொண்டு வருகிறார். இவரது ஆன்மீக வழிநடத்தலில் மலேசியா முழுவதிலும் பதினாறு கிளை நிலையங்களை இயக்கி வருவதும் சிறப்பாக குறிப்பிடத்தக்கது.

**(தகவல் குறிப்புகளை வழங்கியவர்: கலாநிதி ஆறு. திருமுருகன்)**




# கீரிமலை புனித பூமியில் மடம்



அகில இலங்கை இந்து மாமன்றம் கீரிமலை சிவபூமி அறநிதியத்தின் காணியில் பத்து அறைகளுடன் அன்னதான மடமும் சேர்ந்ததாக கட்டிடமொன்றை நிர்மாணித்து வருகின்றது. ஏற்கனவே சிவபூமி அறநிதியம் ஆறு அறைகளுடன் கூடிய மடத்தை கட்டி, கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வர ஆலய மகாகும்பாபிஷேகம், கடந்த மகாசிவராத்திரி ஆகியவற்றிற்கு கீரிமலைக்கு திரண்டுவந்த மக்களின் பசிதீர அன்னதானம் வழங்கும் சேவையை ஆரம்பித்தது. புதிய கட்டிடம் அதனை அடுத்துக் கட்டப்பட்டுவருகின்றது. இரண்டு கட்டிடங்களும் இணைக்கப்பட்டு ஒரு மடமாக சிவபூமி அறநிதியம் நிர்வகிக்கும். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வரும் இந்து மக்கள் மட்டுமல்ல எல்லோரும் அந்தியேட்டியின்போதும், ஆடி அமாவாசையின்போதும் பிதிர்க்கடன்களைச் செய்வதற்கு கீரிமலைக்குச் சென்று தீர்த்தமாடி வழிபாடுசெய்து வந்தனர். ஆனால் கடந்த காலத்தில் இடம் பெற்ற போர்ச்சூழல் காரணமாக மூன்று தசாப்தகாலம் இப்பிரதேசம் அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப் படுத்தப்பட்டு பிதிர்க்கடன்களை இங்கு நிறைவேற்ற முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு இந்து மக்கள் தள்ளப்பட்டனர். இன்றைய சூழலில் மக்கள் மீண்டும் தமது பிதிர்க்கடன்களைச் செய்யவும், ஐந்து ஈஸ்வரங்களில் ஒன்றான ஸ்ரீ நகுலேஸ்வரப் பெருமானைத் தரிசிக்கவும் பாக்கியம் கிடைத்துள்ளது.

சோழதேசத்து இளவரசியான மாருதபுரவீகவல்லி, குஷ்டநோயால் பீடிக்கப்பட்டு குதிரைமுகம் கொண்டதால் அது நீங்க இத்தீர்த்தத்தில் நிராடி பெருமானை வணங்கியதால் விமோசனம் பெற்றதாக வரலாறு உண்டு. நகுலேஸ்வரப் பெருமானும், கீரிமலைத் தீர்த்தத்தினதும் அருமை, பெருமைகளை தொடர்ந்து இந்து மக்கள் பெறவும் அனுபவிக்கும் அகில இலங்கை இந்து மாமன்றம் இக் கட்டட நிர்மாணப் பணிகளை ஆரம்பித்துள்ளது. மாமன்றத்திற்கு சிவ பூமிக்காணியில் 10 அறைகளுடன் கூடிய மண்டபத்தினை அமைப்பதன் மூலம் அந்தியேட்டி, ஆடிஅமாவாசை விரதம், ஸ்ரீ நகுலேஸ்வரப் பெருமானின் திருவிழா மற்றும் ஏனைய விசேட தினங்களில் உள்ளூர், வெளிநாட்டு இந்து மக்கள் வந்து தங்கிச் செல்ல இது பேருதவியாகவிருக்கும் என மாமன்றம் நம்புகின்றது. இக்கட்டிட வேலைகளை கூடிய விரைவில் பூர்த்திசெய்து மக்களின் பாவனைக்கு விடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளன. இப் புனித பணிக்கு இந்துப் பெருமக்களிடமிருந்து உதவிகளை மாமன்றம் எதிர்பார்த்து நிற்கிறது. கட்டப்படவிருக்கின்ற பத்து அறைகளில் ஒவ்வொன்றினையும் கட்டி முடிக்க பதினைந்து இலட்சம் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பிடப்பட்டுள்ளது. இப்புனித பணிக்கு உதவ விரும்புவோர் மறைந்த தங்கள் குடும்பத்தலைவரின் பெயரால் அல்லது குடும்பத்தின் பெயரால் ஒரு அறைக்கு 15 இலட்சம் ரூபாவைச் செலுத்தி பதிவுசெய்துகொள்ளாலம். ஆவர்களின் செலவில் கட்டப்படும் அறையில் அவர்களின் மறைந்த குடும்பதத்தலைவரின் படம் வைக்கப்பட்டு அக் குடுமத்த்தின் உதவி உரிய முறையில் அங்கீகரிக்கப்படும். மேலும் அந்த அறையைப் பாவிக்க அக்குடும்பத்தினருக்கு முன்னுரிமை வழங்கவும் ஒழுங்குசெய்யப்படும். இந்த அரிய நல்ல பணிக்கு இலங்கையிலும், வெளிநாடுகளிலும் வாழும் இந்துப் பெருமக்களை ஆதரவு தருமாறு ஊடகங்கள் மூலமும் தனிப்பட்ட முறையிலும் வேண்டுகோள் விடுத்தோம். நடக்கும் வேலைகளை மேலே இருக்கும் படங்களை பார்க்கவும்.

மேல் மாடியில் ஒரு கேட்போர் கூடமும் அறைகளும் கட்டவும் திட்டம் தீட்டப்படுகிறது இதற்கு ஒரு குடும்பத்தினர் உதவி செய்வார்கள் என நம்புகிறோம்.



கீரிமலை சிவபூமி மடத்திற்கு ஜனாதிபதி சட்டத்தரணி கனகநாயகம் கனகஈஸ்வரன் தன் நன்கொடைக்கான காசோலையை மாமன்றப் பொருளாளரிடம் வழங்குகிறார்.



கீரிமலை சிவபூமி மடத்திற்கு நன்கொடைக்கான காசோலையை மாமன்றத் தலைவரிடம் திரு. சிவசுந்தரம் வழங்குகிறார். இ-வ: திரு. க. நீலகண்டன், திரு. வி. கயிலாசபிள்ளை, திரு. வே. சிவசுந்தரம், திரு. வே. கந்தசாமி, திருமதி. அ. கயிலாசபிள்ளை

**இதுவரை இதற்கான நிதியுதவியை வழங்க முன்வந்தவர்களின் விபரம்.**

| | | | |
|---|---|---|---|
| 01. | இந்து சிரோரத்தினம், மனிதநேயமாமணி வி. கயிலாசபிள்ளை குடும்பம் | | 1 500 000.00 |
| 02. | திரு. திருமதி. மா. தவயோகராஜா குடும்பம் | | 1 500 000.00 |
| 03. | திரு. கனகநாயகம் கனக ஈஸ்வரன் குடும்பம் | | 1 500 000.00 |
| 04. | திரு. திருமதி. கந்தையா நீலகண்டன் குடும்பம் | | 1 500 000.00 |
| 05. | ஆவரங்கால் V&T நம்பிக்கை நிதியம் ஆவரங்கால் | 1 000 000.00 | |
| 06. | திரு. திருமதி. வே. சிவசுந்தரம் குடும்பம் இலண்டன் | 500 000.00 | 1 500 000.00 |
| | | | 7 500 000.00 |

# சைவப் பெரியார்கள் மூவரின் நினைவாக முத்திரை வெளியிட இந்து மாமன்றம் வேண்டுகோள்



**சைவப் பெரியார்**
**நமசிவாயம்**



**சைவப் பெரியார்**
**குமாரசுவாமி குருக்கள்**



**இந்துபோர்ட்**
**ராஜரட்ணம்**

சமயப் பணி, சமூகப் பணி, கல்விப் பணி, தமிழ்ப் பணியென இந்து மக்களின் வாழ்வில் ஒளியேற்றிய பெரியார்கள் மூவரை நினைவு கூர்ந்து தபால் முத்திரை வெளியிடச் செய்ய அகில இலங்கை இந்து மாமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பெரியார் இந்துபோட் எஸ். ராஜரட்ணம், சைவப் பெரியார் இ. நமசிவாயம், சிவஸ்ரீ குமாரசுவாமிக்குருக்கள் ஆகியோரின் பணிகளை கௌரவிக்கும் முகமாக இந்த நற்காரியம் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்துபோர்ட் எஸ். ராஜரட்ணம் அவர்கள் இந்துப் பிள்ளைகள், சமய, ஒழுக்க நெறிபிறழாமல் வளர வேண்டும் என்ற வேட்கை கொண்டு இந்துப் பாடசாலைகளைத் தோற்றுவித்து கல்விப் பணியாற்றினார். நல்ல சமய நெறியோடு மாணவர்கள் வளரவேண்டும் என்ற நோக்கில் ஆசிரிய கலாசாலையைத் தோற்றுவித்து நல்ல ஆசான்களை உருவாக்கியவர். அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றபோது வறிய இந்து மாணவர்கள் இந்துப் பாரம்பரியத்தோடு வளர உணவு, உடை, இருப்பிட வசதி, கல்வி என அனைத்தையும் வழங்கி நிர்வகித்து வந்த அந்தப் பணி இன்றுவரை தொடரவும் உரமிட்டவர்.

சைவப் பெரியார் இ. நமசிவாயம் சிவநெறி வாழ்வு வாழ்ந்தவர். சட்டத்தரணியான இவர் தமிழ், ஆங்கிலம், லத்தின் மொழிகளில் புலமை பெற்று விளங்கியவர். ஆலயங்களில் இடம்பெறும் கிரியைகள் ஆலய விதிமுறைப்படி நடக்க வேண்டும் என்பதில் கண்டிப்பாக இருந்தவர். பல்வேறு சமய, சித்தாந்த நூல்களை எழுதி வெளியிட்டவர். திருக்கேதீச்சரத்தின் அருள்பாலிப்பிலே பற்றுறுதியாக இருந்து அவ்வாலயத்தின் புனர்நிமாணத்தில் அல்லும் பகலும் அயராது நின்றுழைத்த சிவனடியார்.


அச்சுவலி சிவஸ்ரீ குமாரசுவாமிக்குருக்கள் சிவாச்சாரி யார்களில் தலைசிறந்து விளங்கியவர். வட மொழியிலும் தமிழிலும் உள்ள இலக்கிய இலக்கண நூல்களிலும் சமய சாஸ்திரங்களிலும் புலமை பெற்ற பெரியார். இவர் எழுதிய நூல்கள் சமய பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டன. சிவாகம சேகரம், சிவலிங்க பிரதிஷ்டா விதி, சிவபூஜை விளக்கம், விநாயக பரத்துவம், சைவகாலப்பகுப்பு என பல நூல்களை எழுதியவர். சிவாச்சாரியார்களுக்கான பயிற்சிக் கல்லூரியிலும் இவரது நூல்கள் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. சைவ உலகிற்கு வழி காட்டியாக விளங்கிய கல்விமான்.

இப் பெரியார்களின் நினைவாக நினைவு முத்திரை வெளியிடச் செய்ய தபால் தொடர்புகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவிடம் அனுமதி கோரி இதற்கான விதந்துரையுடன் தபால் திணைக் களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இது சம்பந்தமான தொடர் நடவடிக்கைகளை இந்து மாமன்றம் எடுத்துவருகின்றது.

# ஆறுமுகநாவலரும் சிதம்பரமும்



ச. அம்பிகைபாகன்



''சிதம்பரம் போகாமல் இருப்பேனோ
சென்மத்தை வீணாக்கிக் கெடுப்பேனோ''

என்று கோபாலகிருஷ்ண பாரதியார் பாடி இருப்பது, நந்தனாருக்குச் சிதம்பர தரிசனத்தில் இருந்த ஆர்வத்தை மாத்திரமல்லாமல், சைவர்களாயுள்ளோர் எல்லோரினதும் ஆர்வத்தையும் பிரதிபலிக்கிறது. சைவர்களாய் உள்ளவர்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது சிதம்பரத்தைத் தரிசிக்காவிட்டாற் பிறவிப் பயனை அடையாதவர்களாகத் தம்மைக் கருதுவர். இப்படி இவர்கள் கருதுவதற்குக் காரணம் சிதம்பரத்தின் ஒப்பற்ற மகிமையே. நாவலர் அவர்கள் சிதம்பரத்தின் மகிமையைப் பெரியபுராணம் தில்லைவாழந்தணர் புராணத்துக்கு எழுதிய சூசனத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

### சிதம்பரத்தின் மகிமை

''சாந்தோக்கிய உபநிடதத்திலே பிரமபுரத்திலுள்ள நகரமாகிய புண்டரிக வீட்டினுள்ளே இருக்கும் ஆகாச மத்தியில் விளங்கும் அதிசூக்கும சித்தை அறிதல் வேண்டுமென்று தகரவித்தை சொல்லப்பட்டது. இங்கே பிரமபுரமென்றது இச்சரீரத்தையும், புண்டரிக வீடென்பது இருதயகமலத்தையும், ஆகாசமென்றது பராசக்தியையும், அதிசூக்குமத்தென்றது பரப்பிரமமாகிய சிவத்தையும் என்றறிக. புறத்தும் இப்படியே இப்பிரமாண்டம் பிரமபுரமெனவும், இப்பிரமாண்டத்தினுள்ளே இருக்குந் தில்லைவனம் புண்டரிக வீடெனவும், தில்லை வனத்திலிருக்கும் ஆகாசம் பராசக்தியாகிய திருச்சிற்றம்பலமெனவும், அத்திருச்சிற்றம்பலத்திலே நிருத்தஞ் செய்யும் பரப்பிரம்மசிவம் அதிசூக்குமசித்தெனவும் சொல்லப்படும். இவ்வாகாசம் பூதாகாசம் போற் சடமாகாது சித்தேயாம்; ஆதலால் சிதம்பரமெனப்படும். இச்சிதம்பரம் எந்நாளும் நீக்கமின்றி விளங்குந்தானமாதலால், தில்லைவனமும் சிதம்பரம் எனப் பெயர்பெறும்.''

### தில்லைவாழ் அந்தணர் பெருமை:

மேலே குறிப்பிடப்பட்ட அதே சூசனத்திலே கூத்தப் பெருமானைப் பூசிக்கும் அந்தணர் பெருமையையும் விளக்கியுள்ளார். அதன் சாரம் பின்வருமாறு : ஒருமுறை பிரமா, தாம் புரியும் யாகத்துக்கு உதவிசெய்யும் பொருட்டு வியாக்கிரபாத முனிவரின் அனுமதியோடு தில்லை மூவாயிரவரைக் கங்கை நதி தீர்த்தத்துக்கு அழைத்துச் சென்றார். உரியகாலத்தில் அவர்கள் திரும்பிவராதபடியால், வியாக்கிரபாத முனிவர் இரணியவன்ம சக்கரவர்த்தியை அழைத்துவரும்படி அனுப்பினார். அப்படி அழைத்து வந்து தில்லை மூவாயிரவரை எண்ணியபொழுது ஒருவர் குறைவதைக் கண்டு சக்கரவர்த்தி திகைத்தார். அப்பொழுது சிவபெருமான் தேவர் முதலிய யாவரும் கேட்கப் பின்வருமாறு கூறினார்: ''இவ்விருடிகள் எல்லோரும் எமக்கு ஒப்பாவார்கள்; நாமும் இவ்விருடிகளுக்கு ஒப்பாவோம்; ஆதலால் நம்மை இவர்களுள் ஒருவராகக் கைக்கொள்.''

மேற்கூறியவாறு சிதம்பரத்தின் மகிமையை உணர்ந்தே நாவலரவர்கள் அதையே கேந்திரமாக வைத்து சைவத்தை வளர்க்க ஒரு மாபெருந் திட்டம் வகுத்தார்.

### நாவலர் கல்விப்பணி

சிதம்பரத்திற்குச் செல்லுமுன் நாவலர் அவர்கள் யாழ்ப்பாணத்தில் வண்ணார் பண்ணை, கந்தர்மடம், கோப்பாய், பருத்தித்துறை முதலிய இடங்களில் சைவப் பிரகாச வித்தியாசாலைகளைத் தாபித்தார். ஆனால் சிதம்பரத்தில் நாவலர் அவர்கள் ஒரு சாதாரண வித்தியாசாலையைத் தாபிக்கத் திட்டம் போடவில்லை. அவர்கள்

போட்டதிட்டம் சைவப்பிரசாரர்களைப் பயிற்றும் ஒரு தாபனத்துக்கே. இத்தாபனம் கத்தோலிக்கரின் செமினறிகளையும் புரட்டஸ்தாந்தரின் மதச்சாத்திரக் கல்லூரிகளையும் போன்றதாகும்.

நாவலர் அவர்கள் சிதம்பரத்தில் தாபிக்க இருந்த நிறுவனத்துக்கு ஒரு பதினான்கு அம்சத் திட்டம் போட்டார். இத்திட்டத்துக்கு முன்னுரையாக பின்வருமாறு கூறியுள்ளார்: "கிறிஸ்து சமயிகள் பெரும்பாலும் தங்கள் சமயநூலைத் தாங்கள் கற்றும் வெகு திரவியங்களைச் செலவழித்துப் பாடசாலைகளைத் தாபித்துப் பிறருக்குக் கற்பித்தும், தங்கள் ஆலயங்களிலும் பிற இடங்களிலும் யாவருக்கும் போதித்தும் வருகிறபடியினாலே அவர்கள் சமயம் எத்தேசங்களிலும் வளர்ந்தோங்கிவருகிறது." நாவலரவர்கள் மேற்காட்டப்பெறுவற்றைக் கூறியதற்குக் காரணம் சைவர்களும் கிறிஸ்தவர்களின் முன் மாதிரியைப் பின்பற்றித் தமது சமயத்தை வளர்க்க வேண்டுமென்பதே.

அவர்கள் வகுத்த பதினான்கு அம்சத் திட்டத்தில் மிக முக்கியமானவை பின்வருமாறு:

1. சிதம்பரத்திலே திருவீதியில் விசாலமாகிய ஒரு நிலம் வாங்க வேண்டும்.
2. இந்த நிலத்திலே ஒரு பாடசாலையும், பூசைக்கட்டு, சாத்திரக்கட்டு, சமையல் கட்டு என மூன்று கட்டுள்ள ஒரு திருமடமும் கட்டுவிக்கவும் சிவபூசைக்கு உபயோகமாகும் பொருட்டு ஒரு சிறு நந்தனவனம் வைக்கவும் வேண்டும்.
3. இந்தப் பாடசாலையிலே கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த உபாத்தியாயர்களை நியோகித்து, பிள்ளைகளுக்குப் பால பாடங்கள், நிகண்டு, திருக்குறள் முதலிய நீதிநூல்கள், சிவபுராணங்கள், இலக்கணம், கணிதம், தருக்கம் வெளிப்படையாகிய வசனநடையில் செய்யப்பட்ட சைவசமய நூல்கள், பூகோள நூல், ககோள நூல், வைத்தியம், சோதிடம், வேளாண்மை நூல், வாணிக நூல், அரச நீதி, சிற்பநூல் முதலானவைகளைப் படிப்பிக்க வேண்டும்.
4. சாமர்த்தியர்களாகிய ஒதுவார்களை நியோகித்து, சில பிள்ளைகளுக்கு தேவாரமும் திருவாசகமுமாகிய தமிழ் வேதத்தைப் பண்ணுடன் ஓதவும் சுத்தாங்கமாய் ஓதவும் பழக்குவிக்கவேண்டும்.

## பொருள் திரட்டல் :

இப்படித் திட்டத்தை வகுத்துவிட்டு இதற்கு வேண்டிய பணத்தைக் கணக்கிட்டு எண்பதினாயிரம் ரூபா தேவைப்படுமெனக் கண்டனர். இப்பணத்தைச் சேர்ப்பதற்கு தமிழ்நாட்டிற் பெருமுயற்சி எடுத்தனர். அங்கே போதிய பணஞ் சேராதபடியால் ஆயிரத்து எண்ணூற்று அறுபத்திரண்டாமாண்டில் யாழ்ப்பாணம் வந்து தமது வண்ணார் பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் பருத்தித்துறைச் சித்திவித்தி நாயகர் கோயிலிலும் தமது திட்டத்தை விளக்கிப் பிரசாரஞ் செய்தனர். இப்பிரசாரத்தின் பயனாக யாழ்ப்பாணத்திலும் பருத்தித்துறையிலுமுள்ள பிரபுக்களும் வர்த்தகர்களும் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி செய்தனர். மேலும் சில வர்த்தகர்கள் தங்கள் வியாபாரத்திலே மகமை ஏற்படுத்திச் சிதம்பர வித்தியாசாலை நடத்துவதற்குக் கொடுத்தனர்.

தமக்குக் கிடைத்த பொருளைக் கொண்டு தாம் வகுத்த பெரிய திட்டத்தை நிறைவேற்ற முடியாதெனக் கண்ட நாவலர் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலை போன்ற ஒரு வித்தியாசாலையைச் சிதம்பரத்தில் நிறுவினர். இவ்வித்தியாசாலையைக் கட்டுவதற்கு வேண்டிய பனைமரம் முதலிய பொருள்களை யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு சென்றார் எனக் கூறப்படுகிறது. இவ்வித்தியாசாலை தமிழ்நாட்டில் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கு பேருதவிபுரிந்தது. இதற்குத் தலைமையாசிரியர்களாக நாவலர் மாணாக்கர்களான சதாசிவம்பிள்ளை, மட்டுவில் உரையாசிரியர் வேலுப்பிள்ளை முதலியோர் இருந்தனர். உரையாசிரியர் வேலுப்பிள்ளை அவர்களிடம், சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கற்றவர்களுள் இப்பொழுது திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவானாக விளங்கும் ச. தண்டபாணி தேசிகர் ஒருவராவர்.

## பிற தொண்டுகள் :

நாவலர் அவர்களையும் சிதம்பரத்தையும் பற்றி நினைக்கும் பொழுது அவர்கள் செய்துள்ள மேலும் இரு தொண்டுகள் ஞாபகத்துக்கு வருகின்றன. ஒன்று கோயிற்புராணத்துக்கு உரை எழுதி வெளியிட்டது. மற்றையது சிதம்பரத்தில் தாபிக்கப்பட்ட நால்வர் கோயில். இக்கோயிலில் நால்வர் சிலா விக்கிரகங்களும் சேக்கிழார் விக்கிரகமும் தாபிக்கப்பட்டுள்ளன. இதனால் நால்வர் மீதும் சேக்கிழார் மீதும் நாவலர் அவர்கட்கு இருந்த ஆர்வம் நன்கு விளங்குகிறது.

### பதிப்பாசிரியர் குறிப்பு :

ஸ்ரீ மூலட்டான ஈசுவரருக்கு முதல்முதல் பாற்காவடித் தர்மம் நியமித்தவர் ஆறுமுகநாவலரே.

**(ஆதாரம் : யாழ்ப்பாணத்து நல்லூர் த. கைலாசபிள்ளை எழுதிய ஆறுமுகநாவலர் சரித்திரம்)**

***குறிப்பு : இது 1979 இல் சென்னையில் வெளியிடப்பட்ட "கோயில்" வெளியீட்டுக்கு அமரர் ச. அம்பிகைபாகன் எழுதிய கட்டுரை***

## சண்டேசுவரர் வழிபாடு

சிவதரிசனப் பலன் சண்டேஸ்வரரைத் தரிசித்தால்தான் பூர்த்தியாகும். எப்போதும் தியானத்தில் இருக்கும் அவரை வழிபடும் போது மூன்று முறை கையால் மெதுவாகத் தட்டி வழிபட வேண்டும். சண்டேசுவரரை முழுவலமாக சுற்றக்கூடாது. மூன்று முறை கைதட்டுவது ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம் ஆதிதைவிகம் எனும் முக்குற்றங்களால் வரும் தீங்கு விலகும். அதாவது தன்னால் வரும் துன்பம், சூழலால் வரும் துன்பம், இயற்கையால் வரும் துன்பம் எனும் முத்துன்பங்கள் விலகும் பொருட்டு கைதட்டப்படும். சண்டேஸ்வரர் சந்நிதியில் வேட்டி நூலையோ, சேலை நூலையோ எடுத்துப் போடக்கூடாது.

# இறை அனுபவம்



**திருமதி ஹேமா சண்முகசர்மா**
B.A. (Cey) Dip.in. Education
**ஆசிரிய ஆலோசகர் – கொழும்பு கல்வி வலயம்**

**சைவ** சமயத்திலே ஆன்மாக்களின் வரலாற்றின்படி அனுபவத்தை ஆன்மாக்கள் பெறுவதற்கும் அவற்றை எய்துவதற்கும் இருபடி நிலைகள் இருக்கின்றன. முதற்படிநிலை, ஆன்மாக்களை இறைவன் ஆட்கொள்ளுதல். அடுத்த படிநிலை இந்த ஆட்கொள்ளப்பட்ட ஆன்மாக்களுக்கு முத்தி என்று சொல்லப்படும் வீடு பேற்றினைக் கொடுத்தல். இவை இரண்டு நிலைகளுக்கும் இறைவனே (சிவன்) முதல்வனாகிறான்.

முதலிலே இறைவன் ஆன்மாக்களின் தகுதிப்பாட்டினை அறிந்து கொள்கின்றான். சாதாரணமாக நாம் நமது நடைமுறை வழக்கிலே கூறுவதாக இருந்தால் தொழிலுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரி ஒருவருக்கு நேர்முகப்பரீட்சை வைத்து அவருடைய தகுதிப்பாட்டினை சான்றிதழ் ரீதியாகவும், தனிப்பட்ட ஆளுமைப் பண்பு ரீதியாகவும் சோதனையிட்டுத் தேர்ந்தெடுத்தற் செயற்பாடு என்று கூறலாம். தகுதி கண்டு தேர்ந்தெடுத்தல் என்று இந்த நிலையைக் கூறுவர். இதுவே இறைவன் நம்மை ஆட்கொள்ளும் நிலை. முதலிலே இந்த ஆட்கொள்ளல் செயற்பாடு நடந்த பிற்பாடுதான் இறையனுபவப் பயிற்சியை ஆன்மாக்கள் பெறுகின்றன. முதலிலே ஒரு தொழிலைச் செய்வதற்கான பயிற்சியைப் பெறுவதற்கு இவர் தகுதியுடையவர் என இனம் காண வேண்டும். பின்பு அத் தொழிலுக்கான ஆரம்பப் பயிற்சியைக் கொடுத்தல் வேண்டும். பின்புதான் அவரை அந்தத் தொழிலுக்குரிய இடத்திலே பதவியை வழங்கி அனுப்புதல் வேண்டும். இது உலகியல் நிர்வாகத்திலேயே சாதாரணமாக காணப்படுகின்றது. இதனை தொழில் நிர்வாக முறைமை என்பதை நாம் அறிவோம்.

அதேபோல ஆன்மாவானது வீடுபேறு அடைவதற்கான தகுதி பெறுவதற்காக, முத்திப் பேற்றிலே கலப்பதற்கான தகுதியை வழங்குவதற்காக இறைவன் ஆன்மாக்களை ஆட்கொண்ட பின்பு, சில காலமோ பல காலமோ அந்த ஆன்மாவை இறையனுபவப் பயிற்சி பெறுவதற்காக உலகிலே செயலாற்ற வைக்கிறான். இந்த ஆன்மிகப் பயிற்சியிலே முழுமைத் தன்மை பெற்ற பின்பு அந்த இறைவனே ஆன்மாவுக்கு முத்தி பேறான உயர்ந்த பதவியை வழங்குகின்றான். அதாவது வீடுபேறு கொடுக்கிறான். இது இறையியல் நிர்வாக முறைமை என்று நாம் சிந்திக்கலாம். எமது இந்து சமய நம்பிக்கையின் அடிப்படையில் ஆன்மா, இந்த இரு நிலைகளையும் அடைந்து முழுமையடைவதுதான் இந்தப் பிறவியின் நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது.

இந்த தகுதிப்பாடு அதாவது இறைவனால் ஆட்கொள்ளப் படுவதற்கான தகுதிப்பாட்டினை இறைவனே குருவடிவாக வந்து மெய்ஞான போதனைகளை வழங்கி, அதன் பின்பு அந்த ஆன்மாவை ஏற்றுக் கொள்கிறான் என்றுதான் எமது சைவ சித்தாந்தம் கூறுகிறது. இந்த சைவ சித்தாந்தம் கூறுகின்ற குருநிலைப் போதனை முறையினால் ஆட்கொள்ளப்பட்ட பெருமையை உடையவராக முழுமை பெற்றவராக சீவன்முத்தி பெற்றவராக கொள்ளப்படுவர் மணிவாசகப் பெருமான் என்பது எல்லோரும் அறிந்த விடயம். சிவபெருமான் குருந்த மரநிழலிலே திருப்பெருந்துறையிலே தேவர்களுக்குக் குருவாக வந்திருந்து சிவஞான போதனை செய்தபோது, இந்தப் போதனையாற் கவரப்பட்டு தானும் ஒரு சீடனாக அமர்ந்திருந்தவர் திருவாதவூரர். அதுமட்டுமல்ல குதிரை வாங்கக் கொண்டு வந்த பணத்தை அங்கேயே பல அறப்பணிகளுக்குச் செலவழித்துச் சென்றவர் என்பது கூட நமக்குத் தெரிந்ததே.

இந்த இடத்திலேதான் திருவாதவூரருக்கு பக்திநெறி அறிவித்து பழவினைகள் பாறும் வண்ணம் சித்தமலம் அறுவித்து சிவமாக்கி அவரை ஆட்கொண்டவர் அத்தனாகிய சிவப் பரம் பொருள் என்று திருவாதவூரடிகள் புராணம் கூறுகின்றது.

இங்கே ஆட்கொள்ளுகின்ற நிலைமை என்பது ஆன்மாவின் இறையனுபவ வரலாற்றின் முதற்படி நிலை. இதனை நுழைவாயில் என்றும் கூறலாம்.

இது போலத்தான் சம்பந்தர் பெருமானும் அப்பன் அம்மையின் ஞானப்பாலூடாக இறையனுபவத்தைப் பெற்று இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார். அப்பரோவெனில் சூலை நோயால் அவதிப்பட்டு பின் தமக்கையாரின் திருநீற்றினூடாக திருவதிகை வீரட்டானேஸ்வரரால் ஆட்கொள்ளப்பட்டார். சுந்தரர் பெருமானும் அவரது திருமணச்சடங்கிலே கிழப்பிராமண வடிவம் கொண்டு தோன்றிய இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்டார் என்பது நாமறிந்த கதை. இதைப் போன்றுதான் மணிவாசகரும் குருவடிவம் கொண்டு வந்திருந்த இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார். இந்த வகையிலே பார்த்தால் இறைவனின் திருவடிகளைச் சென்றடைந்த சிவனடியார்கள் அனைவரும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர்களேதான்.

இவ்வாறு ஆட்கொள்ளப்பட்ட பின்பு பலகாலம் இறைவனுடைய தொண்டிலே, ஆன்மிகப் பயிற்சிகள் பல பெற்று அந்தப் பயிற்சியிலும் முழுமையடைந்த பின்புதான் முத்திப்பேற்றை இறைவன் அவர் களுக்கு அளித்திருக்கிறான். (நியமனம் பெற்று பயிற்சி பெற்ற பின்புதான் தொழிலுக்கான பயிற்சி பெறுவது போல)

இவ்வாறு முத்திப் பேறு கொடுக்கும் வேளையிலே சில சமயம் ஆட்கொள்ளப்பட்ட இடத்திலேயே வீடு பேறும் கொடுபடலாம். அல்லது ஆட்கொள்ளப்பட்ட இடத்தை விடுத்து வேறு இடங்களிலும் முத்திப் பேற்றினை வழங்கலாம். இந்த முத்திப் பேறு அளிப்பதற்கான அதிகாரம் முழுவதும் இறைவனுக்கே இருப்பதால் அவன் விரும்புகின்ற இடத்திலேயே முத்திக்கு அழைக்கப்படுகின்றனர் அடியார்கள்.

இங்கே மணிவாசகப் பெருமானுடைய இந்த ஆட்கொள்ளல், முத்தியளித்தல் என்ற இரு நிலைகளையும் எடுத்து நோக்கினால் திருவாதவூரடிகள் புராணத்திலே கடவுள் மாமுனிவர் கூறும் கருத்து மனதிற் கொள்ள வேண்டிய முக்கிய செய்தியாக அமைகிறது. மணிவாசகரை திருப்பெருந்துறையிலே ஆட்கொண்ட இறைவன் பின்பு முத்திப் பேறு அளிப்பதற்காக சிதம்பரத்துக்கு அழைத்திருக்கிறான் என்கிறார் கடவுள் மாமுனிவர்.

இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட மணிவாசகர் குதிரை வாங்கக் கொண்டு வந்த பணத்தைச் செலவழித்தமையும் பாண்டிய மன்னனால் வெவ்வேறுபட்ட சித்திரவதைக்கு உள்ளான தன்மையும், பின்னர் வைகை ஆறு பெருக்கெடுத்தமையும் இறைவன் கூலியாளாக வந்தமையும், பிரம்படி வாங்கியமையும் வரலாறாக நாம் கற்றிருக்கிறோம். இப்படிப் பிரம்படிபட்ட நிகழ்வுக்குப் பின்புதான் பாண்டிய மன்னனுக்கு அறிவு தெளிந்து, மணிவாசகரை யார் என அறிந்து கொண்டு, அவரது உண்மை நிலையை உணர்ந்து, அவரிடம் மன்னிப்புக்கோரி தன்னுடைய பாண்டி நாட்டையே நிர்வகிக்கும் பொறுப்பையும் மணி முடியையும் வாதவூரருக்கு வழங்க நினைத்த போது மணிவாசகர் அந்த அரச பதவியையோ உலகியல் வாழ்வையோ அனுபவிக்க விரும்பாது இறை வாழ்வை அனுபவிக்க விரும்பினார். அதனால் முன்பு இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட திருப்பெருந்துறைக்குச் செல்கின்றார்.

''அப்பனே பரம் பொருளே! உனது சிவஞானத் தேனை எனக்குத் தந்து, எனது உள்ளத்திலே இறை உணர்வை ஊட்டிய பரம்பொருளே, என்னை உடனே உன்னிடம் எடுத்து இந்த இடத்திலேயே முத்திப் பேறு தந்து உன்னோடு சேர்த்துக் கொள்'' என்று பணிந்து விழைகின்றார்; கெஞ்சிக் கேட்கின்றார்.

''அருளாது ஒழிந்தால் அடியேனை அஞ்சேல் என்பார் யாரிங்கு, பொருளாய் என்னைப் புகுந்தாண்ட பொன்னே பொன்னம் பலக் கூத்தா, மருளார் மனத்தோடு உனைப் பிரிந்து வருந்துவேனை வா என்று, தெருளார் கூட்டம் காட்டாயேல் செத்தே போனாற் சிரியாரோ?''

*(கோயில் மூத்த திருப்பதிகம்)*

இப்பதிகம் முழுவதிலும் மணிவாசகரின் இரங்கல் உணர்வின் வெளிப்படுதன்மையையே உணரமுடியும்.

இந்த இடத்திலே இறைவன் மணிவாசகருக்கு முத்திப் பேறு அளிக்கவில்லை. தான் ஆனந்தக் கூத்து ஆடுகின்ற சிதம்பரத் திருத்தலத்துக்கு வருமாறு கூறுகின்றார். அங்கே தான் உனக்கு முத்திப் பேறான வீட்டின்பத்தை தரமுடியும் என்கின்றார். .இந்த இடத்திலேயே மணிவாசகர் இறைவனை இவ்வாறு கேட்கிறார். ''என்னை இங்கேதானே ஆட்கொண்டாய். பின்பு சிதம்பரத்துக்கு ஏன் வீடு பேற்றிற்காக அழைக்கிறாய். இந்த ரகசியம்தான் என்ன?'' என்று கேட்கிறார். ''என்னை ஆட்கொண்ட இடத்திலேயே உன்னோடு சேர்த்துக் கொள்ளப்படாதா?'' என்கிறார்.

இந்தச் சந்தர்ப்பத்திலேதான் கடவுள் மாமுனிவர் திருவாதவூரடிகள் புராணத்திலே சிறந்த ஒரு உதாரணம் காட்டி விளக்கம் தருகிறார்.

''இத்தலத்திலே கீடம் எடுத்துள இடத்திலன்றி வைத்துள இடத்திலேதான் அவ்வேட்டுவன் வடிவம் கொள்ளும்...''

இங்கே கீடம் என்பது புளுவைக் குறிக்கிறது.

''அன்பனே! குளவியானது புழுக்களை வேட்டையாடுகிறது. அப்படி வேட்டையாடிய புழுவை அந்த இடத்திலேயே வைத்து அதனைப் பயன்படுத்துகிறதா? இல்லையே. குளவி தனக்கு ஏற்றதான ஒரு இடத்தைத் தெரிவு செய்து அங்கே சென்று வேட்டவாளிக் கூடு ஒன்றைக்கட்டி முடித்து அதன் பின்புதான் வேட்டையாடிய இப்புழுவைக் கொண்டு சென்று அதனுள் வைக்கிறது. இது சாதாரண குளவியின் வாழ்க்கைச் செயற்பாடாகிறது. அதேபோல பக்தனே உன்னையும் இங்கே திருப்பெருந்துறையிலே ஆட்கொண்டேன். பின்பு எனக்கு விரும்பிய இடமாகிய தில்லையம்பல திருத்தலத்திலேதான் உன்னை என்னுடன் இணைத்து முத்திப்பேறு அளிப்பேன். இப்பொழுது நான் கைலைக்குச் செல்லப்போகிறேன். மேலும் சில நாட்களின் பின் என்னுடன் வந்த தேவர்களும் குருந்த மரநிழலிலே சிவஞானபோத அறிவுரைகளைக் கேட்பதற்கு இறங்கி வந்த தேவர்கள் என்னிடம் வந்து சேருவார்கள். நீ சிதம்பரத்திற்குச் செல், அங்கே உன்னைச் சேர்த்துக் கொள்கின்றேன்.'' எனக் கூறுகிறார் இறைவன்.

இந்த வேளையிலும் திருவாதவூரடிகள் ''பரம்பொருளே தாங்கள் தானே கைலையிலிருந்து வரும் பொழுது அடியார்களாகிய தேவர்களையும் அழைத்து வந்தீர்களே. இப்போது தாங்கள் மட்டும் தனியே செல்கிறீர்களே. எதற்காக அவர்களை அழைத்துச் செல்லவில்லை?'' என்று கேட்கிறார். இதற்கு இறைவன் கூறுகின்ற விளக்கம் இதுதான்.

''மலம் அகல்பவரும் புவிமீதில் மானிட வடிவம் தனை எய்தி
சில பகலேனும் பயில்காலை, சில பகல் சேர்தரும் மலவாசனை
என்றே இலது என நீடும் சடம் வேவித்து.''

*(திருவாதவூரடிகள் புராணம்)*

''மலங்களிலிருந்து விடுபட்டு நிரந்தர சுக அனுபவத்திற் திளைக்கின்ற தேவர்களும் கூட இந்தப் புவிதனிற் சில நாட்கள் வந்து தங்கி விட்டாலும் அந்தச் சில பகலில் மல பரியந்தங்கள் இவர்களைச் சிறிதளவாவது பீடித்து இருக்கும் அல்லவா? எனவே இந்த உடலைத் தீயிலே வேக வைத்து தூய்தாக்கிய பின்புதான் என்னோடு சேர்த்துக் கொள்வேன். தேவர்களும் தீயிலே வேக வேண்டியவர்கள்தான்'' என்கிறான் இறைவன்.

எனவே இறையுலகில் இன்பம் பெறுவதாயின் தேவர்களுக்குக் கூட எத்தனை விதிமுறைகள் இருக்கின்றன என்பதைத் திருவாதவூரடிகள் புராணத்தில் இருந்து விளங்கிக் கொள்ள முடிகிறது.

ஆக மணிவாசகரை ஆட்கொண்ட தன்மை, அதன் பின்பு வீடு பேற்றுக்காக சிதம்பரத்துக்கு அவரை அழைத்த தன்மை என்பன ஆன்மாக்களின் இறையனுபவ வரலாற்றைப் பற்றிய பூரண விளக்கத்தை எமக்குத் தருகிறதல்லவா? இறையனுபவப் பயிற்சி என்பது உயிர்கள் மீது அன்பு, கருணை, இரக்கம், மன அடக்கம், புலனடக்கம், எப்பொழுதும் இறை பக்தியில் ஈடுபடும் தன்மை தியாகம் போன்ற வற்றின் பக்கம் எமது சிந்தனைகளைத் திருப்பி பூரண தார்மிக மனப்பாங்கில் முது நிலை காண்பதேயாகும் என்பதே சைவ சித்தாந்தத்தின் முடிவாகவும் அமைகிறது.

# திருமூலர் காட்டிய பெருநெறி

**சைவவித்தகர் வெற்றிவேல் - சசிகரன்**
வந்தாறுமூலை, மட்டக்களப்பு



சைவ சமயத்தின் சாரமாக விளங்குகின்ற சாத்திரம், தோத்திரம் என்பன பல்வேறு தத்துவ, வாழ்வியல் கருத்துக்களைக் கொண்டமைந்துள்ளன. அவற்றில் சாத்திர நூல் வரிசையிலே பதின்நான்கு மெய்கண்ட சாத்திரங்கள் அடங்கும். தோத்திர நூல்கள் நிரலிலே பன்னிரு திருமுறைகள் அமையும். இத்திரு முறையாக விளங்குவதே திருமூலர் பெருமான் அருளிய திருமந்திரம் என்னும் பெருநெறியாகும். இதில் சாத்திரக் கருத்துக்களும், தோத்திரக் கருத்துக்களும் விரவிக் காணப் படுகின்றன. இதன் பெருமை கருதியே "திருமந்திரத்தில் இல்லாதது ஒரு மந்திரத்திலுமில்லை" என்று நமது முன்னோர் கூறிவைத்துள்ளனர்.

இத்துணை பெருமைவாய்ந்த திருமந்திரம் திருமூலர் என்ற சித்தரால் கி.பி. 9ஆம் நூற்றாண்டளவில் அருளிச் செய்ததாகக் கூறப்படுகின்றது. சிலர் 3ஆம் நூற்றாண்டளவில் தோன்றியது என்றும் கூறுவர். எவ்வாறாயினும் எக்காலத்தில் எச்சந்தர்ப்பத்தில் தோன்றியதாயினும் அந்நூலில் கூறப்படும் கருத்துக்கள் மனித வாழ்வுக்கு அதாவது, மனித முன்னேற்றத்திற்கு சாத்தியமான வகையில் உள்ளன. சிந்தனைக்கு விருந்தளிக்கக் கூடியதும் நுண்ணுணர்வைத் தூண்டிவிடக் கூடியதுமான பல எண்ணக்கோலங்களால் விளங்குகின்றன. "மூலன் உரைசெய்த மூவாயிரத்தமிழ்" என்று போற்றத்தக்கதாகவும் அமைந்துள்ளன.

மானிட உடம்பின் மகிமை, அன்பின் பெருமை, உடம்பைப் பேணும் முறைமை, வாழ்வின் அநித்தியம், நல்லொழுக்கங்கள், நீதிவழுவா நெறிமுறைகள் எல்லாம் எடுத்துக் கூறப்படுவனவாய் உள்ளன. அத்துடன் உலகியல் வாழ்வுக்கான வழிகாட்டி நூலாக விளங்குவதுடன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கான பெரு நெறிமுறைகளை தெளிவாக எடுத்துக் கூறும் நூலாகவும் அமைந்து காணப்படுகின்றது.

நமது உடம்பினை "மலம் சோரும் ஒன்பது வாயிற் குடில்" என்றும், வெறும் 'காற்றடைத்த பை' என்றும் 'ஒன்பது வாயிற் கோட்டையடா உற்றுப்பார்த்தால் ஓட்டையடா' என்றும் 'பொல்லாப் புழுமலி நோய்ப் புன்குரம்பை' என்றும் சித்தர்களும் ஞானிகளும் எள்ளிநகையாடிய வேளையில் உடம்பின் பெருமையை எடுத்துரைத்து உடம்பைப் பேணினால் மட்டுமே உயிரைப் பேணலாம் என்ற கருத்தினைத் திருமூலர் வலியுறுத்தி உள்ளார்.

*"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்*
*திறம்பட ஞானமும் சேர்ந்திடல் ஒட்டார்"*

எனக் கூறி உடம்பை நீண்ட காலம் நிலையாய் வைத்திருக்க வழிவகையையும் கூறிய பெருமையால் திருமந்திரம் ஒரு தனித்தன்மை வாய்ந்ததாக விளங்குகின்றது.

*'அன்பே சிவம், சிவமே அன்பு, அன்பும் சிவமும் வேறல்ல'*
என்பது திருமூலர் கண்ட முடிவு.

*"என்பிலதனை வெயில் போலக் காயுமே*
*அன்பி லதனை அறம்"*

என்பது வள்ளுவர் கூற்று. இவை இரண்டிற்கும் உள்ள தொடர்பினை உற்று நோக்கும் பொழுது இருவர் நோக்கும் ஒரே நோக்காகக் காணப்படுவதை நாம் உணரலாம். திருமூலர் தனது திருமந்திரத்தில்,

*"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்*
*அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"*

என்று அன்பின் பெருமையை எடுத்துக் கூறுகின்றார். மேலும் வாழ்வின் அநித்தியத்தன்மை, பேரும் புகழும் நிலையற்றவை என்பதனை வலியுறுத்த முன்வந்த திருமூலர் நேரடி அனுபவங்கள் வாயிலாகப் பல்வகைப்பட்ட எடுத்துக் காட்டுகள் மூலமாக நம்மை நல்வழிப்படுத்த முயலுகின்றார்.

இல்லத்துத் தலைவன் ஒருவன் அறுசுவை உணவுப் பொருட்களை ஆங்காங்கு தேடித் தனது அகமுடையாளிடத்து கொடுத்துச் சமைக்கச் செய்கின்றான். பின் அதனைச் சுவைத்துச் சாப்பிடுகின்றான். சுவைத்த உணர்வோடு மனைவியுடன் துயில் கொள்கின்றான். திடீர் என்று அவனது உடலின் இடது பக்கத்தில் ஒரு வலி ஏற்படுகின்றது. நின்றது மூச்சு. பிரிந்தது உயிர். அவ்வளவுதான் நமது வாழ்வு என்று அநித்தியமான நமது வாழ்வைப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

*"அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்*
*மடக்கொடியாரொடு மந்தணங் கொண்டார்*
*இடப்பக்கமே இறை நொந்தது என்றார்*
*கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந்தாரே."*

என்பதுவே அப்பாடலாகும். அத்தோடு அவர் நின்று விடாமல் மேலும் தொடர்ந்து செல்கின்றார். மரணச் செய்தி கேட்டு

ஊரெல்லாம் ஒரே அழுகை. பட்டம், பதவி, புகழ் இணைந்த பெய ரெல்லாம் மறைகின்றது. சிவம் சவம் என்று அழைக்கப்படுகின்றது என எடுத்துக் காட்டுகின்றார். அத்தோடு நாட்கள் நகர நகரப் பற்றுப் பாசமும் மறைந்து நினைவகன்று போவதை நினைவுபடுத்து கின்றார்.

*"ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்*
*பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்*
*சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு*
*நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தனரே"*

என்றும்,

*"நாட்டுக்கு நாயகன் நம்மூர்த் தலைமகன்*
*காட்டுச் சிவிகை ஒன்றேறிக் கடைமுறை*
*நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறை கொட்ட*
*நாட்டுக்கு நம்பி நடக்கின்றவாறே"*

என்றும் கூறுகின்றார்.

அத்தோடு நில்லாமல் நல்லொழுக்கங்களைக் கடைப்பிடித்து வாழவேண்டும் எனவும் அறிவுறுத்துகின்றார். பயனற்ற வழிகளிலே செல்லும் நமது போக்கைச் சாடி நல்வழிகளினாலே நெறிப்படுத்த முனைகின்றார். மனம் போன போக்கெல்லாம் போகாது புலன்களைத் தீய வழிகளில் செல்லவிடாது பொறிகளைக் கட்டுப்படுத்தி வாழ வழிகாட்டுகின்றார். அவரது வழிகாட்டல்கள் நல்லொழுக்க வாழ்வுக்கு வித்திடுகின்றது.

*"காடுவெட்டி நிலந்திருத்திக் காட்டெருவும் போட்டு*
*கரும்பை விட்டுக் கடுவிரைத்துக் களிக்கின்ற உலகீர்*
*கூடுவிட்டுப் போயினபின் எது புரிவீர்? எங்கே?*
*குடியிருப்பீர் ஐயோ நீ குறித்தறி யீரிங்கே"*

என்றும், இவற்றை விடப் பின்வரும் திருமந்திரப்பாடல்கள் பேரின்பத்தை நாடாமல் சிற்றின்பத்தையே நாடி மகிழும் மக்களைப் பற்றி எடுத்துக் கூறி நல்வழிப்படுத்த முயல்வதைக் காட்டுகின்றது. இது போதாமல் மேலும் மேற்படி கருத்தினை நிலைநாட்ட நல்ல உதாரணங்களும் முன்வைக்கப்படுகின்றது. அவையாவன.

*"வாழை பழுத்துக் கிடக்குது வையகம்*
*வாழையைச் சூழத் தாழ்கோத்து நிற்குது*
*தாழைத் திறந்து கனியுண்ண மாட்டாதார்*
*தாழம் பழத்துக்குத் தன்னாண்டவாறே."*

இவ்வாறான மேற்போந்த திருமந்திரப் பாடல்கள் வாயிலாக நாம் அறியக்கூடியவை யாதெனில் சைவ சித்தாந்த அடிப்படைக் கருத்துக்களோடு மட்டும் நின்றுவிடாது வாழ்க்கையை நல்வழிப்படுத்தக் கூடிய உயர்ந்த கருத்துக்களையும் பெரு நெறிகளையும் எடுத்துக்கூறி உலகில் வாழும் மக்கள் யாவரும் இன்புற்று வாழ வழியமைத்துக் கொடுத்துள்ளார்.

சுவாமி விபுலானந்தர் பக்கம்

# ஈசன் உவக்கும் இன்மலர்கள்



சுவாமி விபுலானந்தர் தொடுத்த இம் மலர்களை ஓர் அன்பர் அனுப்பி வைத்திருக்கிறார். அவற்றை இங்கே தருகிறோம்.

***வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ***
***வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ***
***வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல***
***உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது***

வள்ளலாம் இறைவன் திருவடிக்கு ஏற்ற மலரெது? வெள்ளை நிற மல்லிகையா? வேறெந்த பெரிய மலரா?

உத்தமனாம் இறைவன் திருவடிக்கு வேண்டிய மரை வெள்ளை நிறப் பூவுமில்லை வேறெந்த மலருமில்லை. உள்ளமாம் தாமரையே அவன் வேண்டுவது.

***காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர் மலர்த்தொடையோ***
***மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ***
***காபவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல***
***கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது.***

மலர்ந்த தாமரையா? கழுநீர்ப்பூ மாலையா? பெரியவனாம் இறைவனுக்கு ஏற்ற மலரெது?

மலர்ந்தமலருமில்லை. கழுநீர்ப்பூ மாலையும் இல்லை. அன்பினால் வணங்கும் கூப்பிய கைகளாம் காந்தள் மலரே அரசனாம் இறைவன் வேண்டுவது.

***பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிலில்லாக் கற்பகமோ***
***வாட்ட முறாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ***
***பாட்டளிசேர் கொன்றையல்ல பாரிலில்லாப் பூவுமல்ல***
***நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது.***

பாடிக் கொண்டு வரும் வண்டுகள் விரும்பும் பொன்னிறக் கொன்றை மலரா? உலகத்தில் இல்லாமல் தேவர் உலகில் இருக்கும் கற்பக மலரா? வேண்டுதல் வேண்டாமை இல்லாததால் எந்த வித வருத்தமும் இல்லாத இறைவனுக்கு ஏற்ற மலரெது?

பாடும் வண்டுகள் விரும்பும் கொன்றையில்லை. பாரில் இல்லாத பூவுமில்லை. அவன் அருளை எண்ணிக் கண்ணீர் விடும் விழியெனும் நெய்தல் பூ தான் தலைவனாம் இறைவன் வேண்டுவது.



# இந்தியக் கலைகளின் நோக்கங்களும் நடராஜ வடிவத்தின் பெருமையும்

## கலாயோகி ஆனந்த குமாரசுவாமி தரும் விளக்கம்

*ச. அம்பிகைபாகன்*

கலாயோகி அவர்கள் பல்வேறு துறைகளில் உழைத்த போதிலும் அவர்கள் இந்தியக் கலைக்காற்றிய சேவையே அவர்களுக்கு அழியாப்புகழைத் தேடிக் கொடுத்துள்ளது. இந்தியக்கலை தெய்வ அம்சம் பொருந்தியது. யோகநிலை கைவரப்பெற்ற கலைஞர்களால் படைக்கப்பட்டது. அதனை விளக்கி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் பெரியதும் சிறியதுமான பல நூல்களைத் திறம்பட எழுதியுள்ளார். ஒரு செயலைத் திறம்படச் செய்பவரை யோகி என்கிறது கீதை. இவர்கள் திறம்படவும் உள்ளுணர்வோடும் இந்தியக்கலையை விளக்கியுள்ளபடியால் இவர்களைக் கலாயோகி என்று அழைப்பது மிகவும் பொருத்தமானதே.

கலாயோகி அவர்கள் இந்தியக்கலைகளை விளக்கி பல நூல்களும் கட்டுரைகளும் எழுதியிருந்த போதிலும் சிவ நடனத்தைப்பற்றி எழுதியிருப்பதே அவர்கள் படைப்புக்களுக்குச் சிகரமாக விளங்குகிறது. கலாயோகி அவர்கள் பிறந்த நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட முத்திரையில் அவர்கள் படமும் நடராஜ வடிவத்தின் படமும் காணப்படுகின்றன. மேலும் அமெரிக்க அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் சேர்ந்து அவர்கள் வாழ்க்கையைச் சித்தரிக்கும் படம் ஒன்று எடுத்துள்ளனர். அதற்கு சிவநடனம் (DANCE OF SIVA) என்னும் பெயரே கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தியக்கலையைப் பற்றிக் கலாயோகி ஆங்கிலத்தில் எழுதியவற்றைத் தமிழிலே கூறுவது மிகக் கடினமான காரியம். எனினும் அவர்களுடைய கருத்துக்களில் முக்கியமானவற்றை இங்கு தர முயல்கின்றேன்.

இந்திய தத்துவக் கொள்கைகள் எல்லாவற்றிலும் உபநிடதத்தில் கூறப்படும் கோட்பாடு எப்படி ஊடுருவி இருக்கிறதோ அப்படியே இந்தியக் கலைகள் எல்லாவற்றிற்கும் இடையிலும் ஒரு ஒற்றுமையைக் காணலாம். இந்த ஒருமைப்பாடும் தெய்வீகத் தன்மை வாய்ந்த ஒரு கோட்பாட்டை ஆதாரமாகக் கொண்டது.

இந்தியாவின் பெருமைக்குக் காரணமென்ன? அது நூல்களிலும் தத்துவக் கொள்கைகளிலும் தங்கியிருக்கவில்லை. அதன் பெருமை ஞானத்தைப்பற்றிக் கூறியிருப்பதிலும் அதனை அடைவதற்குக் காட்டிய வழிகளிலும் தங்கியிருக்கிறது. எல்லா ஞானமும் உண்மைகளும் சாசுவதமானவை. இவற்றை புத்தியைக் கொண்டு அறிய முடியாது அனுபூதி மூலமே இவற்றை உணர்ந்து கொள்ளலாம். இதற்கு உள்ளுணர்வு உதவி செய்யும். இந்த உள்ளுணர்வு கற்பனா வளமும் அதி அற்புத சக்தி வாய்ந்த மேதைகளுக்கு கைவரும். ஓர் ஆப்பிள் விழக்கண்ட சேர். ஐசாக் நியூட்டனுக்கு இப்படி ஒரு உள்ளுணர்வு ஏற்பட்டே ஒரு விஞ்ஞான உண்மையைக் கண்டுபிடித்தார். போதிமர நிழலில் இருந்த புத்தருக்கு இப்படி ஒரு உள்ளுணர்வினாலேயே பெரும் உண்மைகள் எல்லாம் கைவரப்பெற்றன. வேதங்கள் எல்லாம் ரிஷிகளால் கேட்கப்பட்டவை, காணப்பட்டவை மனிதரால் எழுதப்பட்டவையல்ல.

ஒரு சிறந்த கவிதையோ ஓவியமோ பாடலோ முதலில் கலைஞனுக்கு முழுமையாக மனக்கண்முன் தோன்றுகிறது. ஒரு திறமையான கலைஞன் இப்படி மனக்கண்முன் கண்டவற்றிற்கு முழுமையான உருவத்தைக் கொடுக்கிறான். அரை குறையான ஆற்றல் வாய்ந்தவன் அரை குறையாக உருவம் கொடுக்கிறான். ஒரு கலைஞன் தான் கண்ட காட்சிக்கு உருவம் கொடுக்கும் வரைக்கும் அது நிற்குமோ என்று அஞ்சிக் கொண்டே இருப்பான்.

ஒரு கலைஞனைப்பற்றி பின்வருமாறு கூறப்படுகிறது. அவன் ஒரு அலங்கார சித்திரத்தை வரையும் பொழுது அதைப் புதிதாக வரைவதாக கருதுவதில்லை. அவனுக்கு முன்னிருக்கும் கடுதாசியில் தோன்றும் சித்திரத்தை வரைவதாகக் காணப்பட்டது. ஏனெனில் அவன் முதலில் மனக்கண்ணில் கண்டதற்கே உருவம் கொடுக்கிறான். சிறந்த கலைஞனுக்கு இப்படிக்காட்சிகள் வந்து கொண்டிருக்கும் சில வேளைகளில் தெளிவில்லாமல் இருக்கக்கூடும். இவன் மனதைக் கட்டுப்படுத்தி தான் கண்ட காட்சிக்கு உருவம் கொடுக்கும் வரைக்கும் அதனை மனதில் வைத்திருக்க வேண்டும். இங்குதான் கலைஞனுக்கும் பக்தனுக்குமுள்ள உறவு நன்கு புலப்படுகிறது. மனத்தைப்பற்றி பின்வருமாறு கீதை கூறுகிறது. "மனஞ்சஞ்சலமுடையது கலகத்தை செய்வது அடக்க முடியாதது அதனை அடக்குவது காற்றை அடக்குவது போன்றது. ஆனால் பழக்கத்தினாலும் வைராக்கியத்தாலும் அடக்க முடியும். மனத்தில் ஏற்படும் தோற்றத்தை இடைவிடாது சிந்தித்தலும் சிந்தையை அடக்குவதும் இந்திய வழிபாட்டின் சிறந்த அம்சங்களாகும். இங்குதான் இஷ்ட தேவதையின் வழிபாடு முக்கிய இடம் பெறுகிறது. சாதாரண மக்கள் எங்கும் காணப்படுவதும் வழிபாட்டுக்கு இலகுவானதுமான கணேச மூர்த்தத்தை வழிபடுகின்றனர். இதனிலும் பார்க்கப் பக்குவமுடையவர்கள் நடராஜரை வழிபடுகின்றனர் நிற்குண உபாசனையில் ஈடுபடுபவர்களுக்கு மாத்திரம் விக்கிரகங்கள் தேவையில்லை. இக்கடினமான முறையில் ஈடுபடுபவர் மிகச் சிலரே. இஷ்ட தேவதையை வழிபடுவோர் முதலில் அத்தெய்வத்தின் தோற்றத்தை வர்ணிக்கும் தியான சுலோகத்தை ஓதுவர். பின்னர் அச்சுலோகத்தில் வர்ணிக்கப்பட்ட தோற்றத்தை மனதில் அமைதியாகச் சிந்திப்பர். இதே போலத்தான் கலைஞனும்

தாம் செய்யப் போகும் உருவங்களை மனதிற் தோன்றச் செய்கிறான். இதுபற்றி சுக்கிரநீதி பின்வருமாறு கூறுகிறது "வழிபடுவோருக்கு தியானம் சித்தித்தற் பொருட்டு தெய்வத்திருவுருவ இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன. ஆதலின் அத்திருவுருவங்களை இயற்றும் சிற்பிகள் அத்திருவுருவ இலக்கணங்களை தியானிப்பதில் மிகவும் பற்றுடையவர்களாக இருத்தல் வேண்டும். அத்தியான நெறியாலன்றி காட்சி முதலிய வேறு எவ்வழியாலும் அத்திருவுரு இலக்கணங்கள் அமையா"

இனி, இந்திய சிற்பக்கலைக்கு பாரம்பரியம் எவ்வாறு உதவிய தென்பதைக் கவனிப்பாம். ஆதியில் சிற்பக்கலை சம்பந்தமான சாத்திரங்கள் வாய்மொழி மூலமே கற்பிக்கப்பட்டன. பின்னர் ஞாபகத்தில் எளிதில் வைத்துக் கொள்ள உதவும் முறையில் இவை சிறு சிறு செய்யுள்களாக எழுதப்பட்டன. சில வேளைகளில் இந்தச் செய்யுள்களோடு சிற்பம் சம்பந்தமான வரை படங்களும் வழக்கில் இருந்தன. செய்யுள்களில் சுருக்கமாகக் கூறப்பட்ட விஷயங்களின் விவரங்களை மாணவன் ஆசிரியரிடமிருந்து கற்றுக் கொள்வான். சிற்பம் குலத்தொழிலாக இருந்தபடியால் பெரும்பாலும் தந்தையே மகனுக்கு ஆசிரியனாக இருந்தான். வேலைத்தலமே பாடசாலையாக அமைத்திருந்தது. மாணவன் ஆசிரியருக்கும் பணி செய்வதன் மூலமும் தொண்டாற்றுவதன் மூலமும் அவனைத் திருப்திப்படுத்தி தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டும். வேலைத்தலத்தில் சிற்பிக்கு வேண்டிய நல்லொழுக்கம் கடவுட்பக்தி முதலியனவும் போதிக்கப்படும். ஆசிரியனே இவற்றிற்கு முன் மாதிரியாக விளங்குவான்.

ஒரு சிற்பத்தைச் செய்யப்போகும் சிற்பிக்கு முன்கூறிய செய்யுள்களோடு அது சம்மந்தமான பரம்பரையான கதைகள், புராணக்கதைகள், முதலியவற்றின் அறிவும் அவசியம். உதாரணமாக நடராஜ வடிவத்தைச் செய்யப்போகும் சிற்பிக்கும் அவ்வடிவம் சம்பந்தமான புராணக்கதையை அறிந்திருப்பது அவசியம். சிவபெருமான் எப்பொழுது ஏன் நடனமாடினார் என்பது கோயிற் புராணத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. தாருகாவனத்து முனிவரின் அகந்தையை அடக்கி அருளும் பொருட்டு சிவபெருமான் நாம் பிக்ஷாடன வடிவங் கொண்டதோடு விஷ்ணுவை மோகினி வடிவம் கொள்ளச் செய்தார். இவ்விருவர்களாலும் மானபங்கமடைந்த முனிவர்கள் சிவபெருமானைக் கொல்லும் பொருட்டு ஒரு யாகத்தைச் செய்தனர். அந்த யாகத்திலிருந்து வெளிவந்த புலியையும், பாம்பையும் அக்கினியையும் துடியையும் சிவபெருமானைக் கொல்லும்படி ஏவினர். சிவபெருமான் புலியைப் பிடித்து அதன் தோலை தனது சிறுவிரல் நகத்தால் கிழித்துப் போர்வையாகப் போர்த்துக் கொண்டார். பாம்பை மாலையாக அணிந்து கொண்டார். அக்கினியையும், துடியையும் தனது கைகளில் ஏந்திக் கொண்டார். கடைசியாக முயலகனை சிவபெருமான் மீது ஏவினார். சிவபெருமான் அதனைக் காலால் மிதித்து நடனம் செய்யத் தொடங்கினார். இந்நடனம் சிவபெருமான் செய்யும் பஞ்ச கிருத்தியங்களைப் பிரதி பலிக்கின்றது.

நடராஜ வடிவம் இறைவன் ஆன்மாக்களின் நன்மை கருதி செய்யும் பஞ்ச கிருத்தியங்களை எவ்வாறு பிரதிபலிக்கின்றது என்பது உண்மை விளக்கம் என்னும் நூலில் நன்கு விளக்கப் பட்டிருக்கின்றது. அதில் ஒரு பாட்டுப் பின்வருமாறு:

*தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்*
*சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா*
*ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி*
*நான்ற மலர்ப்பதத்தே நாடு.*

உடுக்கேந்திய கையில் படைத்தலையும், அபயகரத்தில் காத்தலையும், அக்கினி யேந்திய கையில் அழித்தலையும், ஊன்றிய பாதத்தில் மறைத்தலையும் தூக்கிய திருவடியில் அருளலையும் காண்பாயாகவென ஆசிரியர் கூறுகிறார்.

இறைவன் பஞ்சகிருத்தியங்கள் மூலம் ஆன்மாக்களுக்கு ஒவ்வாது அருள் செய்கிறான் என்பதைப் பின்வரும் பாட்டு நன்கு விளக்குகிறது.

*மாயை தனை உதறி வல்வினையைச் சுட்டுமலம்*
*சாய அமுக்கி அருள் தானெடுத்து-நேயத்தால்*
*ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்*
*தானெந்தையார் பாதம்தான்.*

உடுக்கேந்திய கையினால் மாயையை நீக்கி அக்கினி ஏந்திய கையினால் மன்மமலத்தைச் சுட்டு ஊன்றிய பாதத்தினால் விடாமல் அழுத்தி தூக்கிய திருவடியினால் அருளில் நிறுத்தி ஆன்மாவை ஆனந்த வெள்ளத்தில் அழுத்துவதே இறைவன் திருக்கூத்தின் உண்மையென மேற்காட்டப்பட்ட பாட்டில் விளக்கப்பட்டுள்ளது.

மேல் விளக்கப்பட்டது போல் திருவுருவங்கள் மூலம் பெரும் தத்துவங்களை விளக்கும் முறையை இந்தியாவை விட வேறெங்கும் காணமுடியாது.

## மேற்கோள் நூல்கள்


1. Ananda Coomaraswamy
   Remembering and Remembering again and again.
   S. Dorai Raja Singam
   (A tribute to Kala Yogi Ananda Coomaraswamy in Words and Pictures) A Pre-Centennial Volume.
2. Triveni - (Journal of Indian Renaissance)
   Ananda K. Coomaraswamy - Special number Vol. 46.
   (July - Sept, 1977)
3. Homage to Ananda Coomaraswamy
   A Memorial Volume
   Edited Durai Raja Singam 1952
4. Ananda K. Coomaraswamy
   By P. S. Sastri
   Arnold - Heinama Publishers Pt. Ltd.
   New Delhi 1974
5. Ananda K. Coomaraswamy
   A Critical Appreciation
   by - S. Chandrasekhar
   Brackil & Son Publishers Pt. Ltd.
   Bombay - 1977
6. Kala Yogi Ananda Coomaraswamy
   S. Ambikaibakan
   (Varathar Velliyeedu)
   Jaffna - 1978




# சிவதொண்டர் அணி செய்தி



**சிவ தொண்டர் அணி அங்குரார்ப்பணம்**

பாடசாலை :- பொல / திம்பு / ஹெவன்பிட்டி
தமிழ் மகா வித்தியாலயம்
கறப்பளை
பொலன்னறுவை.

முகவரி:- அதிபர்
பொல / திம்பு / ஹெவன்பிட்டி
தமிழ் மகா வித்தியாலயம்
கறப்பளை
முத்துக்கல்
பொலன்னறுவை.

சிவ தொண்டர் அணி அங்குரார்ப்பணம்:- 2013.01.15

பொறுப்பாசிரியர்கள் :- V. விஜயநந்தினி
P. சுசிலா

கல்வி பயிற்றும் தரம் :- (10,11,12)

**சிவ தொண்டர் அணி**

தலைவர் :- றணிதா நடராஜா

உப தலைவர் :- மகேந்திரன் நிரோஜன்

செயலாளர் :- காளியப்பன் சுசாந்தினி

உப செயலாளர் :- சுதாஜினி திருச்செல்வம்

பொருளாளர் :- பிரதீபா சதானந்தம்

உப பொருளாளர் :- மகேந்திரன் விமலகாந்தன்

அங்கத்தவர்கள் :- சசிகலா வன்னமணி
சுசாந்தினி செல்வம்
ராமலிங்கம் நித்தியராஜ்
கோணலிங்கம் தினோஜன்
றொபின்ஷன் றொஷான்
கந்தசாமி சுஜீவன்

# Who Is Siva?



GOD SIVA IS AMONG THE MOST MYSTERIOUS, complex, compassionate and profound conceptions of the one Supreme Being to be found in the religious of mankind. He is looked upon as the Creator, Preserver and Destroyer of all existence, the Cosmic Dancer who animates the universe from within. He is honored as Pure Love, Light Energy and Consciousness. He is contemplated as the timeless, formless and spaceless Absolute Reality. In all three of these perfections is Siva revered in Kauai's Hindu temple.

*In ways to Siva*, curator Joseph Dye Lahendro wrote: "Who is Siva? What is Siva? To His devotees, Siva is everything: He is the root and support of the universe; He is the creative-destructive flow of life that rushes through it. He is motion and calm, male and female, light and dark, ascetic and lover, everything and its opposite. Siva is an ambiguous God who embodies, defines and reconciles within Himself all of life's processes and paradoxes. Siva is existence. Hie embodies the structure of the universe."

*Living with Siva,* by Sivaya Subramaniyaswami, explains, "Siva dances in the atoms throughout this universe. Siva dances energetically, eternally. Siva is eternal movement. His mind is all-prevasive, and thus He sees and knows everything in all spheres simultaneously and without effort. Siva is the Self , and He is the energy we put forth to know the self. He is the mystery which makes us see Him as separate from us. He is the energy of life, the power in the wind. He is the dissolution called death, the peace of motionless air. He is the great force of the ocean and the stillness on a calm lake. Siva is All and in all. Our great God Siva is beyond time, beyond space, byond form and form's creation, and yet He uses time and causes form. He is

**Text with courtesy: Island Temple Publication of Kauai's Hindu Temple Hawaii**

in the sky, in the clouds, in the swirling galaxies. Siva's cosmic dance of creation, preservation and dissolution is happening this very moment in every atom of the cosmos. God Siva is immanent, with a beautiful human-like form which can actually be seen and has been seen by many mystics in visions." Twenty centuries ago Rishi Tirumular, a South Indian saint, praised Siva's dance: "In all worlds He is, the Holy Lord. In darkness He is, light He is. In sun He is, in moon He is. Everywhere He is. The Lord is in all creation. None knows His coming and going. He is distant. He is near. Multiple He is. One He is. Water, earth, sky, fire and wind, the spark within the body-all these He is. He is the walking soul here below. Deathless He is."

**The religion of Siva:** Those who worship Lord Siva and Saivites, and their religion is called Saivite Hinduism. Saivism represents roughly half, perhaps somewhat more, of Hinduism's one billion members. It shares more common ground than differences with other denominations. Scholars tell us Saivite Hinduism is mankind's oldest religion, the venerable Sanatana Dharma. They trace its roots back 6,000 years and more to the Indus Valley civilization. But sacred writings and legend tell us that there never was a time when Saivism did not exist. Its grandeur derives from a sweet tolerance for the views of others, coupled with a practical culture, an emphasis on personal spiritual effort and experience, the perception that God is everywhere present, and therefore no aspect of life may be divided from religion, and a joyous devotion to the one God which all men worship and which it knows as Siva, "the Auspicious One," and the knowledge that Truth lies within man himself.

The four sacred *Vedas,* mankind's oldest scriptures, intone, "To Rudra(Siva), Lord of sacrifice, of hymns and balmy medicines, we pray for joy and health and strength. He shines in splendor like the sun, refulgent as bright gold is He, the good, the best among the Gods (Rig Veda 43.4-5)." "He is God hidden in all beings., their inmost soul who is in all. He watches the works of creation, lives in all things, watches all things. He is pure consciousness, beyond the three conditions of nature (Yajur Veda, Svet.U.6.11)." "There the eye goes not, nor words, nor mind. We know not. We cannot understand how He can be explained. He is above the unknown (Sama Veda, Kena U. 1.3)." "Fire is His head, the sun and moon His eyes, space His ears, the Vadas His speech, the wind His breath, the universe His heart. From His feet the Earth has originated. Verily, He is the inner Self of all beings. (Atharva Veda, Mund. U. 2.1.4)




## வரலாறு படைத்த நிகழ்வு

பாரத நாட்டில் பல இடங்களிலும் இருந்த இந்து மக்களின் அருஞ்சொத்துக்களான ஏடுகளை பாண்டிச்சேரி மாநிலத்தில் பிரெஞ்சு அரசாங்கம் நீண்டகாலமாக பாதுகாத்து, பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் காத்து வருவது ஆய்வாளர்கள் பலர் அறிந்த செய்தி. இவ்வரிய சொத்தை இந்து மக்கள் அறிய வேண்டும் என அயராது பாடுபட்டவர்கள் அமெரிக்கா ஹவாய் ஆதீனம். அதன் விளைவாக பாண்டிச்சேரியில் பாதுகாக்கப்பட்ட இந்து மதம் சார்ந்த ஏடுகளை நவீன கருவிகள் ஊடாக மிகவும் கடின முயற்சியால் புகைப்படங்களாக எடுத்து அவற்றை கணணி மயப்படுத்தி எதிர்கால சந்ததி இவ்வரிய ஆவண பொக்கிஷத்தை அறிய ஹவாய் சைவ ஆதீனம் உதவியுள்ளது. ஹவாய் சைவ ஆதீன முதல்வர் வணக்கத்திற்குரிய போதிநாத வேலன் சுவாமிகளின் ஆசியோடு விலை மதிக்க முடியாத இவ்வரிய ஏடுகளின் பிரதியை நவீன முறையில் வன்தகட்டில் (HARD DRIVE) எம்மண்ணுக்கு வணக்கத்திற்குரிய ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் கொண்டுவந்து சேர்த்துள்ளார். எம்மண்ணில் வாழும் ஆய்வாளர்கள், அந்தணர்கள், ஆன்மீக ஆர்வலர்கள், இவ்வரிய சொத்தைப் பாதுகாக்க கொழும்பில் அகில இலங்கை இந்து மாமன்றத் தலைமை அலுவலகத்திலும் யாழ்ப்பாணத்திலும் இப்பிரதிகளை சுவாமி கையளிக்கத் தீர்மானித்து அவ்வகையில் அகில இலங்கை இந்து மாமன்றத்தில் கையளிக்கும் புண்ணிய வைபவம் நந்தன வருடம் மாசி மாதம் 19ம் நாள் (03-03-2013) ஞாயிற்றுக்கிழமை நடந்தது. கொழும்பு அருள்மிரு சிவசுப்பிரமணிய திருத்தலத்தில் பூசை வழிபாடு செய்யப்பட்டு இந்துகுருமார் அமைப்பு கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தினதும் அனுசரணையுடன் அகில இலங்கை இந்து மாமன்ற தலைமையகத்துக்கு ஊர்வலமாக ஆன்மீகப் பேழை மங்கலவாத்தியம் சகிதம் பஜனை பிரார்த்தனையுடன் எடுத்து செல்லப்பட்டது.

வணக்கத்திற்குரிய ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆன்மீகப் பேழையை மாமன்ற அறங்காவலர் சபைத் தலைவர் மனிதநேய மாமணி இந்து சிரோரத்தினம் வி. கயிலாசபிள்ளை அவர்களிடம் கையளித்தார் கலாநிதி சைவஞானபானு செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனும் முத்தமிழ் பேரரசி சரஸ்வதி இராமநாதனும் பேராசிரியர் சி. பத்மநாதனும் உரையாற்றினர். (இந்த இதழில் நிழற்படங்களின் காட்சிகளை காணலாம்.)



# பங்குனி உத்தரம்

இது சிவபெருமானைக் கலியாண சுந்தரமூர்த்தியாகக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். பங்குனி மாதத்திலே உத்திர நட்சத்திரங் கலக்குந்தினத்திலே இவ்விரதம் அநுட்டிக்கப்படல் வேண்டும். பங்குனி மாதத்தில் பூமி மீன ராசியில் நிற்கச் சந்திரன் உத்திர நட்சத்திரத்தோடு கன்னியில் நின்று பூரண கலை பெற்று ஏழாமிடமாகிய அங்கிருந்து தன் பூரண கிரகணத்தை உத்திர நட்சத்திர குணத்தோடு பூமிக்குக் கொடுத்தலால் இத்தினம் விசேட தினமானதாகும். பார்வதிபாகராகிய சிவபெருமானைத் திருமணக்கோலத்தோடு தியானிப்பதாகலின் திருமண விரதமெனவும்படும். பங்குனி மாதத்திலே உத்திர நட்சத்திரத்திலே அநுட்டிக்கப்படுவதால் பங்குனி உத்திரம் எனப் பெயராயிற்று.

அம்மையப்பன் வடிவங்களைப் பொன்னால் அமைத்து, அபிஷேகாராதனைகள் புரிந்து, சிவபெருமானை உமாதேவியாரோடும் எழுந்தருளச் செய்து பூசை, அருச்சனை, தூபதீபங்களாதி கிரியைகளை விதிப்படி செய்தல் வேண்டும். ஓர் அந்தணனை மனையாளோடழைத்து வேண்டியன கொடுத்து அமுது செய்வித்தல் வேண்டும். உமா பிராட்டியாரைத் திருமணம் புரியுந் தன்மையுடன் சிவன் திருக்கோலத்தை மனதில் தியானஞ் செய்தல் வேண்டும். ஆலயஞ் சென்று வணங்கி, அஸ்தமனத்தின் மேல் இரவில் உணவுண்டு தருப்பையில் உறங்க வேண்டும்.

மற்றைநாட் காலையிற் சிவபெருமானைத் தேவியோடு தாபித்திருந்த பொற்கலசத்துடன், பிறபொருட்களையுந் தானமாகப் பிராமணருக்கு ஈந்து, வணங்கிச் சிவனடியாருடன் பாரணை செய்யின் எண்ணிய வரங்களையடைவர்.

திருமகள் இவ்விரதத்தையநுட்டித்து விஷ்ணுவின் திருமார்பில் வீற்றிருக்குந் தகைமையைப் பெற்றாள். இந்திரன் அநுட்டித்து இந்திராணியை அடைந்தான். பிரம்மன் சரசுவதியை நாவினிடத்தே வைத்துக்கொண்டு இருக்குந் தவம் பெற்றான். சந்திரன் அழகுவாய்ந்த இருபத்தேழு கன்னியர்களை மனைவியராகக் கொண்டு மகிழ்வித்தான். இவ்விரத மகிமையை அளவிட்டுரைக்க இயலாது. இவ்விரதத்தைஅநுட்டித்தவர்களும்பயனடைந்தவர்களும் எண்ணிலடங்கார். இளைஞர்களுக்கும் கன்னியர்களுக்கும் அருமையான இனிய விரதம் இது.

இன்னும், திருமயிலாப்பூரிலே சிவநேசர் என்றொரு செட்டியார்: பெருஞ்செல்வர்: சிவநேசருங்கூட. அவருக்குப் பூம்பாவையென்றொரு அருமைப் புதல்வி. சம்பந்த மூர்த்தி சுவாமிகளின் மகிமையையறிந்து தம் புதல்வியை அவருக்கே திருமணஞ் செய்துகொடுக்க எண்ணியிருந்தவர். பூம்பாவை பூக்கொய்யப் பூங்காவுக்குச் சென்று பாம்பு தீண்டி இறந்துவிட்டாள். பாவம்! சிவநேசர் மிக வருத்தப்பட்டார். உடலைத் தகனஞ் செய்து எலும்பையும் சாம்பரையும் சேமித்து வைத்தார். சம்பந்த சுவாமிகள் திருமயிலாப்பூரை அடைந்த நாளில் இதனையறிந்தார். எலும்பு, சாம்பரடங்கிய குடந்தை ஆங்குள்ள கபாலீச்சரமென்னுந் தலத்திற்கு வரவழைத்தார். அன்று கபாலீச்சரர் உற்சவ தினத்தின் ஒன்பதாம் நாள். கபாலீச்சரருக்குத் திருமண மகோற்சவ நாள். இந்நாளின் மகத்துவம் பற்றி ஞானசம்பந்தர் பூம்பாவைப் பதிகத்திலே,

*பலி விழாப் பாடல் செய் பங்குனி யுத்திர நாள்*
*ஒலி விழாக் காணாதே போதியோ பூம்பாவாய்*

எனப் பதிகம் பாடிப் பூம்பாவையை உயிர்ப்பித்தருளினார். தேவர்கள், முனிவர்கள், நாயன்மார்களுக்கு இறைவன் காட்சியளித்து ஆசிரவாதித்த பெருநாள்.

*பாரேரர் புகழவரும் பங்குனி யுத்திரத்தில்*
*ஆரூரர் வீதி யணுகினார் - நேரே*
*பணச்சர்ப்பந்தரித்துப் பொற்பதத்திற்கிண் கிணிச்சத்தம்*
*கிணுக்குக் கிண் கிணுக் கென்னவே*

எனத் திருவாரூர்த் தியாகேசப் பெருமான் வீதியிற் பவனிவருவது குறித்துப் புலவரொருவர் சந்தோஷித்துப் பாடியதும் இத்தினத்தின் மகிமையைக் குறிப்பிடும்.



# பங்குனித் திங்கள்

பங்குனி மாதத்தில் வரும் திங்கட்கிழமைகளிற் கொண்டாடப்படுதலின் இப்பெயராயிற்று. பெரும்பாலும் இவ்விழா கண்ணகையம்மன் கோயில்களிலே கொண்டாடப்படுகின்றது. கண்ணகியைப் பத்தினிக் கடவுள் எனவுங் கூறுவர். கோவலனோடு சுவர்க்கஞ் சென்றபின் இப்பெயருண்டாயிற்றென்பர்.

பத்தினி – கற்புநெறியுடையவள். கண்ணகி கற்பிற் சிறந்தவள். கவுந்தியடிகள் கண்ணகி கற்பின் பெருமை பற்றிச் சிலப்பதிகாரத்தில் நன்கு கூறுகின்அறார். கண்ணகி ஒரு வீர பத்தினி. திருச்செங்குன்று என்னும் மலையின்மீது தேவர்கள் - பூமாரிபொழிய ஆகாயத்தினின்றும் அழகிய விமானம் கீழே இறங்க-அவ்விமானத்தில் தெய்வவடிவோடு கோவலன் இலங்கக் களிப்பொடு அவ்விமானத்திலேறி விண்ணுலகடைந்தாள்.

சேரமன்னன் "பத்தினிக் கடவுளாகிய கண்ணகியை நாம் போற்றி வழிபட வேண்டும்" எனக் கூறிய அரசியின் விருப்பப்படி இமய மலையிற் கல்லெடுப்பித்துக் கங்கையாற்றில் நீர்ப்படை செய்து ஆலயஞ் சமைப்பித்துத் தெய்வவடிவமாயமைந்த கண்ணகியை நிறுத்தி வேள்வியும் விழாவும் மாண்புற நடத்தினான்.

கண்ணகி வழிபாடு பசு (ஆன்ம) வழிபாடாகும். இதற்கு ஆகமமில்லை. "யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்." என்றாங்கு, சிவசக்தி, பத்தினிக் கடவுளாகிய கண்ணகி மூலமாக அடியார்களின் வழிபாட்டுக்கேற்ற பலனைக் கொடுக்கின்றாள் எனக் கொள்வதே பொருத்தமானது.

ஆதலின், "கற்பக் கடம்பூண்ட பொற்புடைத் தெய்வ" மாகிய கண்ணகிக்கு ஆலயம் அமைத்து வழிபாடு புரிகின்றனர்.

குறிப்பு: கண்ணகி போன பாதை பற்றிய பழைய பாடல்கள் தென்மராட்சியிற் சில கிராமங்களில் வழங்குகின்றன. அன்பர்கள் அவற்றைத் தெரிவிப்பின் உதவியாகும்.

நன்றி : பண்டிதர் த. சுப்பிரமணியம்
எழுதிய சைவ சமய புண்ணியகாலம்

# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயில்



**கலாபூஷணம் க. மகேஸ்வரலிங்கம்**
**மகிழை மகேசன்**

கிழக்கிலங்கையிலே சைவமும், தமிழும், நீண்ட காலமாக நிலைத்து வாழ்ந்து வருகின்றன. இதனால் காலத்தால் தொன்மை வாய்ந்த கோயில்கள் பல இப்பகுதியில் காணப்படுகின்றன. இக் கோயில்களில் ஒரு பகுதி 'திருப்படைக் கோயில்கள்' அல்லது 'தேசத்துக் கோயில்கள்' என்று வழங்கப்பட்டும் வருகின்றன. திருப்படை என்பது பல்வேறு சாதி மக்களினதும் ஒன்றியம் என்று பொருள் கொள்ளத்தக்கதாக உள்ளது. தேசம் என்பது மட்டக்களப்பு என்னும் தேசமாகும். இது இன்றைய மட்டக்களப்பு மாவட்டத்தையும் அம்பாறை மாவட்டத்தையும் உள்ளடக்கிய பிரதேசமாகும். எனவே திருப்படைக் கோயில்கள் அல்லது தேசத்துக் கோயில்கள் என்று அழைக்கப்பட்டு வருபவை மட்டக்களப்பு தேசம் முழுவதிலுமுள்ள பல்வேறு சாதி மக்களுக்கும் உரிமையுள்ள கோயில்கள் எனப் பொருள்படும். இத்தோடு குளக்கோட்டு வேந்தனது திவ்விய திருப்பணியைப் பெற்ற பெருமையும் இக்கோயில்களுக்கு உரியதாகும். பண்டைக் கால அரசர்களது மதிப்பும் மானியங்களும் சீர்வரிசைகளும் பெற்றவையாகவும் இக்கோயில்கள் உள்ளன. இத் திருப்படைக் கோயில்களுள் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயிலும் ஒன்றாகும். மட்டக்களப்புத் தமிழகத்திலுள்ள ஒரேயொரு சிவன்கோயில் என்ற தனிப்பெருமை இக்கோயிலுக்குண்டு. இக்கோயிலில் இறைவன் சுயம்புலிங்கமாய் தானே தோன்றி விற்றிருந்து அருள் சுரந்து வருகிறார்.

மட்டுநகரிலிருந்து தெற்கே மண்முனையினூடாக ஒன்பது கல் தொலைவில் கொக்கட்டிச்சோலை என்னும் கிராமம் அமைந்துள்ளது. பண்டைக்காலத்தில் கொக்கட்டி அல்லது கொக்கு நெட்டி என்னும் மரங்கள் நிறைந்திருந்தமையால் இக்கிராமத்திற்கு இப்பெயர் ஏற்படலாயிற்று. இயற்கை எழில் மிகுந்த இக்கிராமத்தில் நிழல் மரங்கள் நிறைந்த திரு வீதியின் மத்தியில் தான்தோன்றீஸ்வரர் கோயில்கொண்டுள்ள இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

## கோயிலின் அமைப்பு

இக்கோயிலுக்கு இரண்டு சுற்றுமதில்கள் அமைக்கப்பட்டுள்ளன. வெளிப்புற மதிலொடு தொடர்பு படுத்தி நான்கு சிறு மடங்கள் நாற்புறங்களிலும் உள்ளன. உட்புறத்தில் சிவன் கோயிலின் பக்கங்களில் பார்வதியம்மன், விநாயகர், முருகன், வள்ளி, தெய்வானை, விஷ்ணு, நவக்கிரகங்கள், நாகதம்பிரான்,வைரவர், என்னும் தெய்வங்களுக்குரிய கோயில்கள் காணப்படுகின்றன. இச்சிறிய கோயில்கள் காலத்துக்குக் காலம் தனிப்பட்டவர்களாற் கட்டி அர்ப்பணிக்கப்பட்டவையாகும். சிவன் கோயில் சிகரத்தையுடைய கர்ப்பக்கிருகத்தையும், நான்கு மண்டபங்களையும்கோபுரம் இல்லாத முகப்பு என்னும் முன்பகுதியினையுங் கொண்டுள்ளது. இக்கோயிலின் தம்ப மண்டபம் மிக அண்மையிலேயே கட்டப்பட்டது. அறுபதடி உயரத்தையுடைய கொடித்தம்பத்தை இங்கு காணலாம். இக் கொடித்தம்பத்திலும் கர்ப்பக்கிருகச் சிகரம், பதிவாகவே அமைந்துள்ளது. இக்கோயிலின் தம்ப மண்டபம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் காலத்தால் முற்பட்டவை. இங்கு கற்சிலை ஒன்றுள்ளது. இக்கோயிலை தகர்க்க வந்த போர்த்துக்கீசரை உயிர்பெற்று எழுந்துநின்று விரட்டிய எருது இதுவேயாகும். கர்ப்பக்கிருகம் சுயம்பு லிங்கத்தை வைத்தே அமைக்கப்பட்டது என்று கூறுவர். ஆனால் இந்த லிங்கம் வெளியில் தெரியவில்லை. மூலஸ்தான பீடத்தில் உமா மகேஸ்வரர் விக்கிரகமே தாபிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

## கோயிலின் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டமை

இக்கோயிலின் வழிபாட்டு ஆரம்பம் பற்றிச் செவிவழி மரபுக் கதையொன்று நிலவி வருகிறது. இக்கதை வேடர்களே முதன் முதலில் இங்கு வழிபாட்டை ஆரம்பித்தனர் என்று கூறுகின்றது. தேன் தேடிச் சென்ற வேடர் இங்கிருந்த கொக்கட்டி மரம் ஒன்றில் தேனிருக்கக் கண்டு அம்மரத்தை வெட்டினர். அவ் வெட்டு வாயிலிருந்து இரத்தம் வெளிவந்தது. இவ்வதிசயத்தைக் கண்டு அக்கம் பக்கங்களை அவதானித்த போது அம்மரத்தடியில் ஒரு லிங்கம் இருக்கக் கண்டனர். அன்று முதல் கொத்துப் பந்தலிட்டு வேடர் வழிபாட்டு முறையில் இங்கு வழிபாடு ஆரம்பமாயிற்று என்று கூறப்படுகின்றது. கதிர்காம யாத்திரைக்கு வந்த கொக்கட்டியர் என்னும் இந்திய நாட்டைச் சேர்ந்த தபோதனர் இங்கு சமாதி இருத்தப்பட்டதாயும், அச்சமாதியிலிருந்து தோன்றிய லிங்கமே இங்குள்ள சுயம்புலிங்கம் என்றும் இந்த லிங்கத்தை முதன் முதல் கண்ட வேடன் பெயர் திகடன் என்றும் மட்டக்களப்பு மான்மியம் கூறும்.

இக்கதையைக் கொண்டு இக்கோயிலின் வழிபாடு எப்பொழுது ஆரம்பித்தது என்று கூற முடியாது. எனினும் இப்பகுதிகளில் வேடர் வாழ்ந்த காலத்தில் இவ் லிங்க வழிபாடு ஆரம்பமாயிற்று எனலாம். பௌத்தம் இலங்கைக்கு வருவதற்கு முன்பு லிங்க வழிபாடு இருந்தது என்பதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. இவ்வகையில் இக்கோயிலின் வழிபாட்டு ஆரம்பமும் மிக முற்பட்டதாக அமையினும் அமையலாம். இது எவ்வாறு இருந்தாலும் இங்கு நிலையான கோயில் கட்டப்படுவதற்கு நீண்டதொரு காலப்பகுதிக்கு முன்பே வழிபாடு ஆரம்பித்திருந்தது எனக் கொள்ளலாம்.

## கோயில் கட்டப்பட்டமை

வேடரால் கொத்துப்பந்தலிட்டு நீண்ட காலமாக வழிபடப்பட்டு வந்த இடத்தில் நிலையான கோயில்

கட்டியது யார் என்பது அறிய முடியாததாய் உள்ளது. இதுபற்றி மட்டக்களப்பு மான்மியத்தில் மூன்று வேறுபட்ட தகவல்கள் கூறப்பட்டுள்ளன. அவை:

1. மன்முனையைத் தலைநகராகக் கொண்டு சிற்றரசியாக இருந்த உலகநாச்சி என்னும் கலிங்க அரசியால் கட்டப்பட்டது.
2. இந்தியாவிலிருந்து கதிர்காம யாத்திரை வந்த செட்டி ஒருவரால் கட்டப்பட்டது.
3. பொலநறுவையில் அரசனாக இருந்த சேனன் என்பவனால் பாண்டிய நாட்டுக்கு அனுப்பப்பட்ட படையின் தளபதியும் மட்டக்களப்பின் நிதியதிபனுமாகிய தருமசிங்கன் என்பவனால் கட்டப்பட்டது.

இந்த தகவல்களில் எந்த அளவு வரலாற்று உண்மை உள்ளது என்பது தெரியவில்லை. இவற்றுள் செட்டி திருப்பணியை இக்கோயில் பெற்றுள்ளது என்பதற்கு வேறு ஆதாரங்களும் கிடைத்துள்ளன. இதற்கு பங்கு கூறும் - கல்வெட்டுச் சான்று கூறுகின்றது.

இதில் கூறப்பட்டுள்ளபடி செட்டி குலத்தோர்க்குத் தேர்த் திருவிழாவுக்கு முதல் திருவிழா கொடுக்கப்பட்டிருந்தது என்பதையும், இத்திருவிழாவை சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்வரையில் செட்டிக்குலத்தார் நடாத்தி வந்துள்ளனர் என்பதனையும் அறிய முடிகிறது. இவற்றால் இத்திருவிழா இன்றும் செட்டி திருவிழா என்றே அழைக்கப்பட்டு வருகின்றது.

இவற்றுக்கெல்லாம் மேலாக குளக்கோட்டு மன்னனால் இக்கோயில் கட்டப்பட்டது என்பது இக்கோயிலுடன் தொடர்புடைய அனைவரதும் அசையாத நம்பிக்கையாகும். இக்கருத்து கோணேசர் கல்வெட்டு இப்பகுதிகளிற் பெற்ற செல்வாக்கால் ஏற்பட்டது என்று சிலர் கருதுவர். குளக்கோட்டானது திருப்பணியைப் பெற்று ஒழுங்குபடுத்தப்பட்ட கோயில்கள் பற்றி இங்கு நிலவும் ஒரு கல்வெட்டுப் பாடல் கூறும்.

***சீர் மேவு இலங்கைப்பதி வாழ்வுதரு***
***செல்வமும் சிவநேச இருசமயமும்***
***செப்புதற் கரிதான மாணிக்க கெங்கையும்***
***செக மேவு கதிர மலையும்***
***ஏற் பெறும் தென் கயிலை வாழ் கோணலிங்கம்***
***மேன்மை தான் தோன்றுலிங்கம்***
***வெற்றி புனை மயூர சித்திர சங்கார வேல்***
***வெள்ளை நாவற் பதிய தாம்***
***பேர் பெறும் தென் திருக்கோயில்***
***சிவாலயம் சிவபூசை தேவாரமும்***
***செய்முறைகள் என்றென்றும் நீடூழிகாலமும்***
***தேசம் தளம்பாமலும்***
***ஏர்பெருகு பரிதி குலராசன்***
***குளக்கோட்டர் எவ்வுலகுமுய்வதாக***
***ஏழு கோபுரம் கோயில் தொழுவார்ர் தினம்***
***தேட எங்கெங்கு மியற்றினாரே***

இப்பாடலிற் குளக்கோட்டனது சேவையைப் பெற்ற ஏழு கோயில்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அவை கதிர்காமம் (மாணிக் கங்கை), கதிரமலை, கோணேஸ்வரம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் கோயில், போரதீவு சித்திரவேலாயுத சுவாமி கோயில், வெருகல் (வெள்ளை நாவற் பதி), திருக்கோயில் என்பனவாகும். திருப்படைக் கோவில்கள் அல்லது தேசத்துக்கோயில்கள் என்னும் தொகுப்புக்களுள் இக்கோயில்களே கூறப்பட்டு வருகின்றன. இங்கு நிலவும் மரபு வழியான தகவல்களிலிருந்து குளக்கோட்டன் இக்கோயிலைப் புதிதாக அமைத்தான் அல்லது புதுப்பித்தான் என்று கூறப்படுகின்றது. இத்தோடு நிர்வாகத்தைப் புதிய முறையில் அமைத்தும் தொண்டூழியங்களையும் அவற்றிற்கு உரியோரையும் வகுத்தும் பூசை விழாக்களைத் திட்டம் செய்தும் மானியங்களை வழங்கியும் இம் மன்னன் இக் கோயில்களுக்குத் திருப்பணி புரிந்தானென்று அறிய முடிகின்றது.

குளக்கோட்டன் என்பவன் யார் என்பது வரலாற்றில் தீர்வு காணப்படாத ஒரு பிரச்சினையாக இருந்து வருகின்றது. குளக்கோட்டானது மறுபெயர் சோழகங்கன் என்று கூறப்பட்டது. இம்மன்னன் பத்தாம் நூற்றாண்டின் பின்னரே வாழ்ந்திருக்க முடியும் என்பது பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. திருமலைக் கோட்டையிலுள்ள வடமொழிக் கல்வெட்டிற் கூறப்படுகின்ற கி.பி. 1223 இல் ஈழத்துக்கு வந்த சோழகங்கனே கோணேசர் கல்வெட்டுக் கூறும் குளக்கோட்டன் என்று சி.பத்மநாதன் ஐயுறுவர். கா.இந்திரபாலா குளங்கட்டி வளம் பெருக்கிய மஹா சேன மன்னன் அல்லது கோணேஸ்வர ஆலயத்தைத் திருத்திக் கட்டிச் சிற்றரசனாக ஆட்சி புரிந்த கலிங்கத்துச் சோழகங்கன், குளக்கோட்டன் ஆதல் கூடும் எனக் கருதுவார். இக்கருத்துக்களில் மஹா சேனனே குளக்கோட்டன் என்ற கருத்தை மற்றும் பலர் கூறினாலும் அது பொருத்தமுடையதாகத் தெரியவில்லை. தான்தோன்றீஸ்வரர் கோயிலில் வழங்கி வரும் மரபு வழியான செய்திகளும் பாடல்களும் குளக்கோட்டன் பற்றிப் பொதுவான சில முடிபுகளுக்கு வர உதவுகின்றன. இவர் கலிங்கர் அல்லது கலிங்கத்தோடு மிக நெருங்கிய தொடர்புடையவர். சோழ நாட்டிலும் இவருக்குத் தொடர்பிருந்தது. வீரசைவத்தில் ஈடுபாடுடையவர். கிழக்கிலங்கையில் போதுமான அரசியல் அதிகாரம் இவரிடம் இருந்திருக்கிறது. இவை இவ்வகையிற் குளக்கோட்டன் பற்றிக் கூறத்தக்க முடிபுகளாகும்.

கட்டிட அமைப்பை நோக்கில் இப்பகுதிகளில் கலிங்கர் செல்வாக்கு அதிகரித்திருந்த பதின்மூன்றாம் நூற்றாண்டிலே திருக்கோயில், தான்தோன்றீஸ்வரர் கோயில் என்பன கட்டப்பட்டுள்ளன எனலாம். திருக்கோயிலின் கட்டிட அமைப்பைக்கொண்டு அது திட்டவட்டமாக பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பர். தான்தோன்றீஸ்வரர் கோயில் சுண்ணத்தாலும் சாந்தாலும் கட்டப்பட்டது. இதனால் கட்டிடத்தில் காலத்துக்குக் காலம் சில மாற்றங்கள் செய்யப்பட்டு வந்துள்ளன. எனினும் திருக்கோயிலினதும், தான்தோன்றீஸ்வரர் கோயிலினதும் கட்டிட அமைப்பும் சிற்ப வேலைப்பாடுகளும் கோயில் அமைப்பு விதிகளும் ஒரே பாணியில் இருப்பதைத் தெளிவாக உணரலாம். எனவே இக்கோயிலை யார் கட்டினர் என்பதற்குத் திட்டமான பதில் கூற முடியாவிட்டாலும் பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் கட்டப்பட்டுள்ளது என்று திட்டமாகக் கூறலாம்.

## கோயிலின் பரிபாலனம்

இக்கோயிலின் பரிபாலனம் பழமை வாய்ந்தாகக் காணப்படுகின்றது. மூன்று வண்ணக் குமாரைக் கொண்டதாக

இப்பரிபாலனம் அமைந்துள்ளது. கோயிற் பரிபாலகர்களை 'வண்ணக்கர்' அல்லது 'வண்ணக்கு' என்று அழைப்பது மட்டக்களப்பின் பரவலான வழக்கமாக இருந்து வந்துள்ளது. 'வண்ணக்கர்' என்பது ஒரு தமிழ்ச்சொல். இது கணக்கறிஞர், தலைவன் எனப் பொருள்படும். இவ்வாறு கோயிற் பரிபாலகர்களை வண்ணக்கர் என்று கூறும் வழக்கினை மட்டக்களப்புத் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் காணமுடியவில்லை. இம்முறை எவ்வாறு இங்கு தோன்றியது என்பது தெரியவில்லை. கண்டிராச்சியத்தில் பௌத்த ஆலய பரிபாலகர்களை 'வண்ணக்கு நிலமை' என்று கூறுகின்ற வழக்கம் இருந்தது என்று அறிய முடிகின்றது. இதனால் கண்டிராச்சியத்தின் கீழ் மட்டக்களப்பு பிரதேசம் இருந்த காலத்தில் வண்ணக்கர் முறை மட்டக்களப்பிலிருந்து கண்டிக்கோ, அல்லது கண்டியிலிருந்து மட்டக்களப்பிற்கோ பரவியிருத்தல் வேண்டும். இம்முறை இந்தியாவிலெங்காவது இருந்ததா என்பது ஆராயப்பட வேண்டியதொன்று.

**நன்றி : திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலர் (1976)**

---




# இரத்மலானை மாணவர் விடுதிக்கான நன்கொடைகள்

## ஜனவரி 2013


| | | |
|---|---|---|
| 01 | திரு. நடராஜா | 36 000.00 |
| 02 | சுஜிதா ரோமோன் | 20 000.00 |
| 03 | திரு. கே. சிவராஜா | 20 000.00 |
| 04 | திரு. வி. வரதகுமார் | 20 000.00 |
| 05 | திருமதி. கேமா | 15 000.00 |
| 06 | திரு. ஜி. தர்ஷன் | 20 000.00 |
| 07 | திரு. P. பிரேமசங்கர் | 15 000.00 |
| 08 | திரு. சி. நாகேந்திரா | 16 500.00 |
| 09 | கலாநிதி. எஸ். செல்லையா | 20 000.00 |
| 10 | திரு. க. நீலகண்டன் | 20 000.00 |
| 11 | திருமதி. மகேஸ்வரன் | 40 000.00 |
| 12 | திருமதி. அ. செல்லையா | 20 000.00 |
| 13 | திருமதி. Y. அரவிந்தன் | 20 000.00 |
| 14 | திரு. கே. ராமதாஸ் | 20 000.00 |
| 15 | திருமதி. ஜெ. சசிரேகா | 20 000.00 |
| 16 | திரு. சந்திரசேகரம் | 20 000.00 |
| 17 | திரு. எஸ். மயூரன் | 20 000.00 |
| 18 | திருமதி. நிர்மலா நல்லையா | 20 000.00 |
| 19 | திருமதி. சசிகலா | 20 000.00 |
| 20 | திரு. எஸ். இராமச்சந்திரன் | 3 000.00 |
| 21 | திரு. T. சிவப்பிரகாசபிள்ளை | 20 000.00 |
| 22 | திருமதி. P. சச்சிதானந்தம் | 20 000.00 |
| 23 | திரு. எஸ். குலசபாநாதன் | 5 000.00 |
| 24 | திரு. T. பாலகிருஷ்ணன் | 20 000.00 |
| 25 | திரு. சோமசுந்தரம் | 20 000.00 |
| 26 | திருமதி. பவித்திரன் மோகனலோஜினி | 12 500.00 |
| 27 | திரு. திருக்ஷன் | 20 000.00 |
| 28 | திருமதி. கே. பிரியசாந்தி | 20 000.00 |
| 29 | திருமதி. விவேகானந்தன் | 20 000.00 |
| 30 | திரு & திருமதி. தினேஸ் துஷிகா | 17 500.00 |
| 31 | திரு. B. ஸ்கந்ததாசசர்மா | 20 000.00 |
| | மொத்தம் | 600 500.00 |

## பெப்ரவரி 2013

| | | |
|---|---|---|
| 01 | டாக்டர். பிரமன் சிவப்பிரகாசபிள்ளை | 20 000.00 |
| 02 | திருமதி. P. கனகலிங்கம் | 20 000.00 |
| 03 | திருமதி. T. சுப்பிரமணியம் | 20 000.00 |
| 04 | திரு. வி. சுவாமிநாதன் | 20 000.00 |
| 05 | திரு. டு. அருள்மதன் | 3 000.00 |
| 06 | திருமதி. P. பரமநாதன் | 20 000.00 |
| 07 | திரு. டிலக்ஷன் | 20 000.00 |
| 08 | திரு. டிலக்ஷன் | 33 000.00 |
| 09 | திரு. என். திருக்குமரன் | 20 000.00 |
| 10 | திரு. கருணை ஆனந்தன் | 35 000.00 |
| 11 | திரு. சு. வைத்திலிங்கம் | 20 000.00 |
| 12 | திரு. T. தர்ஷன் | 20 000.00 |
| 13 | திருமதி. அருள்நந்தி | 20 000.00 |
| 14 | டாக்டர். என். கணேஸ் | 14 000.00 |
| 15 | திரு. கே. பிரபாகரன் | 20 000.00 |
| 16 | திரு. சு. சோமஸ்கந்தன் | 20 000.00 |
| 17 | திரு. ராஜபக்சம் | 20 000.00 |
| 18 | திருமதி. மகானந்தன் | 15 000.00 |
| 19 | திருமதி. விக்னேஸ்வரி | 20 000.00 |
| 20 | திரு. எஸ். குலசபாநாதன் | 5 000.00 |
| 21 | திரு. ஸ்ரீரங்கன் திலீபன் | 20 000.00 |
| 22 | திரு. எ.வி. நவரட்ணம் | 20 000.00 |
| 23 | திரு. கே. வரதராஜா | 20 000.00 |
| 24 | திரு. கிருபாரட்னம் | 20 000.00 |
| 25 | திருமதி. தியாகராஜா | 20 000.00 |
| 26 | திரு. கிருஷ்ணராஜ் | 20 000.00 |
| 27 | திரு. எஸ். இராமச்சந்திரன் | 3 000.00 |
| 28 | திருமதி. திருநாவுக்கரசு | 20 000.00 |
| | மொத்தம் | 528 000.00 |

# A Personal Account of Yogaswami by the former Canadian High Commissioner to Sri Lanka.

By Rev. Rishi Thondunathan



In 2007, my dear friend and Yogaswami devotee, Dr. Indra Sivayoham in London, told me that a former Canadian High Commissioner to Sri Lanka was now living in Toronto, Canada. She also mentioned that the High Commissioner had written a book in which he had dedicated a chapter to Yogaswami.

We made several attempts through Dr. Sivayoham's brother, Dr. Sriskandarajah who lives in Canada, to locate the High Commissioner and arrange a meeting. Two years later, on June 30, 2009 our meeting with the former High Commissioner, Dr. James George took place. Dr. & Mrs. Sriskandarajah accompanied me on the visit to Dr. George. When we arrived at Dr.George's home that evening I received a very warm welcome from Dr. George and his wife, Barbara. Mrs. George most graciously served tea and we began our conversation.

Dr. George was the Canadian High Commissioner in Sri Lanka from 1960 - 1964. One of Yogaswami's devotees, Sandaswami, also known as Soulburyswami, was the son of the last British Governor of Sri Lanka, Lord Soulbury. Lord Soulbury's other son, Peter, also a diplomat, was the person who introduced Dr. George to Yogaswami.

Dr. George says of his first meeting with Yogaswami; "I knocked quietly on the door to his modest thatched hut in Jaffna and a voice from within roared, 'Is that the Canadian High Commissioner?' I opened the door to find him seated crosslegged on the floor - an erect, commanding presence, clad in a white robe, with a generous topping of white hair and long white beard. Well Swami, I began, that is just what I do, not what I am. 'Then come and sit with me', he laughed uproariously. I felt bonded with him from that moment. He helped me to go deeper towards the discovery of who I am, and to identify less with the role I played."

During Dr. George's four-year stay in Sri Lanka, he visited Yogaswami a dozen times. On one occassion Dr. George began his conversation with Yogaswami... "Swami, I think..." 'already wrong!'...Yogaswami thundered." And my mind again went into the non-conceptual state he was such a master at invoking, clearing the way for being."

I asked Dr. George if he would like to pay tribute to Yogaswami and the following was his response:

"I'm very glad to have my turn to pay tribute to Yogaswami. I think of him as one of the greatest spiritual pioneers of my lifetime, and in a broader sense, the catalyst for the gradual coming together of Eastern and Western spirituality. Because, what he was able to do was not only talk to me about the "Gospel According to St. John" and quote "in the beginning was the word" which is how the Gospel begins, and of course as a Christian, that was how I was brought up - but he was

able to take me from that all the way to the question of "Who Are You? - you think you are the Canadian High Commissioner - nonsense - that's not who you are - that's what you do"! Then the vigor with which he would impress that so it wasn't just a mental idea, it was an experience - an experience from his presence to my presence. Now, as we're trying to remember and speak about him, he is here in that presence because that energy is birthless and deathless. That is the energy that the world needs if it is to chart a course away from the destruction it seems to be heading for currently. And, I think the change, the great "turning" its been called, the change of course is coming, and Yogaswami, even so long ago, had a hand in making that turn possible. That shift of consciousness - both in the East and the West."

After this Dr.George gave me an autographed copy of his book, "Asking for the Earth"- Waking Up to the Spiritual/Ecological Crisis. In this book he has a chapter explaining his meetings with Yogaswami. The following is one excerpt from the book:

"The Tamils of Sri Lanka called Yogaswami "the Sage of Jaffna". His thousands of devotees, including many Singhalese Buddhists and Christians, called him a saint. Some of those closest to him referred to him as the "Old Lion" for he could be very fierce and unpredictable, chasing away unwelcome supplicants with a stick."

After two hours of a very warm, spiritual conversation, when Dr. George and I said good-by to each other, in my mind I thought... though Yogaswami lived in a simple, thatched hut in Jaffna, Sri Lanka, he made a global spiritual impact on many levels of humanity.

PS: Dr. James George served in many capacities - as a diplomat, a naval historian, an environmentalist and author - in some of the world's most interesting countries. Among other dignitaries, the Dalai Lama calls him "my old friend". The author of two books: The "Little Green Book on Awakening"; and "Asking for the Earth" (chapter on Yogaswami) are available through Amazon Books and this email geojam6@gmail.com I highly recommend these books. (In the centre picture on Page 48 Dr. George is with Rev. Thondunathan - Ed)




# சுவாமி விவேகானந்தரின்

## 150 ஆவது ஜனன தின வைபவம்



கொழும்பு விவேகானந்த சபை அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஜனன தின வைபவம் கடந்த ஜனவரி மாதம் 12ஆம் திகதியன்று மாலை 4.30 மணிமுதல் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்றது.

கொழும்பு விவேகானந்த சபையின் தலைவர் திரு. இ.சுரேந்திரன் (ஜனாதிபதியின் சட்டத்தரணி) தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது இராமகிருஷ்ண மிஷன் இலங்கைக் கிளையின் தலைவர் வணக்கத்துக்குரிய சுவாமி சர்வ ரூபானந்தா மகராஜ் அவர்களும், அமெரிக்கா ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய ஆன்மீகச்சுடர் தவத்திரு ரிஷி தொண்டுநாத சுவாமிகள் அவர்களும் பிரதம அருளாளர்களாகக் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்கள்.

இந்த வைபவத்தில் இலங்கைக்கான பாரத நாட்டு உயர் ஸ்தானிகர் மாண்புமிகு அசோக் கே.காந்தா அவர்கள் பிரதம விருந்தினராகவும், திருக்கேதீச்சர ஆலய அறங்காவலர் சபையினதும், அகில இலங்கை இந்து மாமன்ற நம்பிக்கை பொறுப்பாளர் சபையினதும், தலைவரான இந்து சிரோரத்தினம் மனித நேயமாமணி வி. கயிலாசபிள்ளை அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தார்கள்.

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு.கந்தையா நீலகண்டன், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபைத் தலைவரும், மாமன்றத்தின் யாழ் இந்து ஆராய்ச்சி நிலையத்தின் கௌரவ இயக்குநருமான சைவஞானபானு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் இலங்கைக்கான இணைப்பாளர் திரு இராதாகிருஷ்ணன் ஆகியோர் சிறப்பு சொற்பொழிவாற்றினார்கள்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டிதழான "இந்து ஒளி" யின் சுவாமி விகோனந்தரின் 150 வது ஜனனதின சிறப்பிதழும், இந்த வைபவத்தின்போது வெளியிட்டு வைக்கப்பட்டது. அருள்மொழியரசி வசந்தா வைத்தியநாதன், சிறப்பிதழின் வெளியீட்டுரையை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வின் சிறப்பம்சமாக கொழும்பு விவேகானந்தா கல்லூரி, மற்றும் கொழும்பு இந்துக் கல்லூரி (இரத்மலானை) "சக்தி இல்லம்" மாணவ மாணவிகளது கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் பதிவுசெய்திருந்த அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான மாமன்றத்தின் இலவச அப்பியாசப் புத்தகங்களும் இந்த வைபவத்தின் போது வழங்கப்பட்டன.

# வெள்ள நிவாரணம்

2012 மார்கழி மாதம் நாட்டில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாதிப்புக்குள்ளான எமது உறவுகளுக்கு அத்தியவசியப் பொருட்களான உலர் உணவுப் பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் பால்மா, சீனி, சவர்க்காரம், பற்பசை போன்ற அத்தியவசியப் பொருட்களை அகில இலங்கை இந்து மாமன்றம் அப்பிரதேசங்களிலுள்ள எமது அங்கத்துவ சங்கங்கள் மூலம் விநியோகித்தது:-

| | ரூபா |
|---|---|
| 01. மனிதநேயமாமணி வி. கயிலாசபிள்ளை 24, டீல் பிளேஸ் A – கொழும்பு – 03 | 100 000.00 |
| 02. திரு. மா. தவயோகராஜா 15/7, மெயிற்லண்ட் கிரசன்ற், கொழும்பு – 07 | 300 000.00 |
| 03. திருமதி. அ. கயிலாசபிள்ளை 24, டீல் பிளேஸ் A – கொழும்பு – 03 | 100 000.00 |
| 04. செல்வி. S. சுப்பிரமணியம் 24, டீல் பிளேஸ் A – கொழும்பு – 03 | 100 000.00 |
| 05. நீலகண்டன் & நீலகண்டன் நிறுவனம் 2, டீல் பிளேஸ் – கொழும்பு – 03 | 100 000.00 |
| 06. திரு & திருமதி. கந்தையா நீலகண்டன் & சசி நீலகண்டன் 39, யோசெப் ஒழுங்கை – கொழும்பு – 04 | 100 000.00 |
| 07. திருமதி. மகேசன் 700/79, பெரேரா அவனியூ - தளுவத்துகொட | 35 000.00 |
| 08. திரு. B. சுரேந்திரா 1/2, ஹீறகொறீஸ் வீதி – கொழும்பு – 07 | 25 000.00 |
| 09. செல்வி. கணேசன் 1, தர்மராஜா மாவத்தை – கொழும்பு – 03 | 10 000.00 |
| 10. திரு. மு. இரவீந்திரன் 29, ஸ்ரீ சிவானந்த வீதி – கொழும்பு – 13 | 10 000.00 |
| 11. திரு. T. இராஜசூரியர் 40 – 6/1, உருத்திரா மாவத்தை – கொழும்பு – 06 | 10 000.00 |
| 12. திரு. சுதர்சன் ஸ்ரீயோகநாதன் | 10 000.00 |
| 13. செயலாளர் சிவயோக சுவாமி நிதியம் இல. 5, மூர் வீதி – கொழும்பு – 06 | 9 645.00 |
| 14. திரு. S. பொன்னம்பலப்பிள்ளை இல. 93 – ¼, மன்னிங் பிளேஸ் - கொழும்பு – 06 | 5 000.00 |
| 15. திரு. S. கயிலை வாசன் இல. 273/75, கட்டுகஸ்தோட்டை – கண்டி | 5 000.00 |
| 16. திரு. மு. சிவரத்தினம் | 6 000.00 |
| 17. திரு. J.M. சுவாமிநாதன் இல. 9/5, தம்பையா அவனியூ - கொழும்பு – 07 | 5 000.00 |
| 18. பெயர் குறிப்பிடப்படாத அன்பர் | 5 000.00 |
| 19. திருமதி. Y. இரத்தினசிங்கம் இல. 13A – 2/5, பசில்ஸ் லேன் - கொழும்பு – 06 | 3 000.00 |
| 20. பெயர் குறிப்பிடப்படாத அன்பர் | 5 000.00 |
| 21. திரு. N. சபாரத்தினம் இல. 3, குடா எலுக்கண்ட வீதி – வத்தளை | 2 800.00 |
| 22. பெயர் குறிப்பிடப்படாத அன்பர் | 2 000.00 |
| 23. விடுதி மாணவிகள் சரஸ்வதி மண்டபம் - கொழும்பு – 04 | 2 450.00 |
| 24. திருமதி. நளினி கணேசயோகன் இல. 24/1, காலி வீதி – கொழும்பு – 06 | 2 000.00 |
| 25. செல்வி. சுகந்தி சரஸ்வதி மண்டபம் - கொழும்பு – 04 | 2 000.00 |
| 26. திரு. சிவபாதசுந்தரம் இல. 202 – 7/1, W.A.சில்வா மாவத்தை – கொழும்பு – 06 | 2 000.00 |
| 27. திரு. T. சிவானந்தன் இல. 24 – 6/4, மாதங்காவத்தை லேன் - கொழும்பு – 06 | 1 000.00 |
| 28. பெயர் குறிப்பிடப்படாத அன்பர் | 1 000.00 |
| 29. செல்வி. K. செல்லையா சரஸ்வதி மண்டபம் - கொழும்பு – 04 | 1 000.00 |
| 30. பெயர் குறிப்பிடப்படாத அன்பர் | 1 000.00 |
| 31. திரு. V. மாணிக்கவாசகர் இல. 12 – 1/6, காசில் வீதி – கொழும்பு – 04 | 500.00 |
| **மொத்தம்** | 960,595.00 |

## பொருட்கள் அன்பளிப்புச் செய்தோர்

1. டேரும் பறடைஸ் - கொழும்பு
2. ஸ்ரீ பெரேரா என்ரபிறைஸ் கொழும்பு - 12
3. திருமதி சு. சுரே ஆராய்ச்சி 12, மக்லிஸ்ற் பிளேஸ், கொழும்பு - 04
4. திரு. S. சபாநாதன் 102, அசோகா கார்டின், கொழும்பு - 04
5. திரு. S. அமரன் 465/1 , ஹவ்லொக் வீதி, கொழும்பு - 05
6. திரு. S. சிவகுருநாதன் 22, அசோகா கார்டன், கொழும்பு - 04
7. திரு. V. செல்லையா 294 4/1, காலி வீதி, கொழும்பு - 04
8. திருமதி. சத்தியராணி 24/3C, பிராங்போட் பிளேஸ், கொழும்பு - 04
9. திரு. K. தில்லையம்பலம் D.M கொலம்பகே மாவத்தை, கொழும்பு - 05
10. திரு. N. இராஜேந்திரன் 33 8/7, பிறற்றிக்கா றோட், கொழும்பு - 06
11. திருமதி ப. சாந்தி
12. திரு. K. பரமேஸ்வரன் R 2/2 அன்டசன் தொடர்மாடி, கொழும்பு - 05
13. திரு. S. சிவஸ்கந்தவேல் 32 4/6 றோகினி றோட், கொழும்பு - 05
14. திரு. K. சிங்காரநாதன் 35A, மெல்போட்கிறசன்ற், தெகிவளை
15. திரு. K. பாலசுந்தரம் 58, 2/4, 37ம் ஒழுங்கை, கொழும்பு - 06
16. திரு. S. பாலசுப்பிரமணியம் 24/3C, பிறாங்பேட் பிளேஸ் கொழும்பு - 04

# சண்டிகேசுவரர்

'சோமலெ'



*மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க*
*வெகுண்டெழுந்த தாதைதாள்*
*மழுவினாலெறிந்த*
*வம்மையா னடிச்சண்டிப்*
*பெருமானுக்கடியேன்*

*– சுந்தரர் திருத்தொண்டத் தொகை –*

சிவாலயங்களில் எல்லாம் வட பிராகாரத்தில் கோமுகிக்கு அருகில் சண்டிகேசுவருக்குத் தனிக்கோயில் இருப்பதைப் பார்க்கிறோம். இறைவனுக்குச் சாத்தியெடுக்கப்படும் நிர்மாலியங்களெல்லாம் அவருக்கு அணியப்படும் முறை கோயில்களில் இன்றும் நடைபெற்று வருகின்றது. சிவன் கோயிலை வழிபடச் செல்பவர்கள் இவர் சந்நிதியையும் வழிபட வேண்டும். திருவிழாக் காலங்களில் 1. இறைவன், 2. தேவி, 3. கணபதி, 4. முருகன் ஆகியோர்களுடன் சண்டேசுரரும் எழுந்தருளுகின்றார். பஞ்ச மூர்த்திகளில் ஒருவராகும் பேறு பெற்ற இந்த நாயனாரின் பெருமை சொல்லுந்தகையதோ! 'தந்தை தாளொடும் பிறவித்தாள் எறிந்த சண்டீசர்' என்பர். பன்னிரண்டு திருமுறைகளையன்றியும் தலபுராணங்கள், மற்றும் பிற்கால நூல்கள் பலவற்றுள் இவர் பாடப் பெற்றிருக்கிறார். தாயுமான அடிகள்,

*தந்தையிரு தாள் துணித்துத்*
*தம்பிரான் தாள்சேர்ந்த*
*எந்தையிரு தாளிணைக்கே*
*இன்புறுவ தெந்நாளோ*

என்று பாடுகிறார்.

*கடிசேர்ந்த போது மலரான*
*கைக்கொண்டு நல்ல*
*படிசேர்ந்த பால் கொண்டங்*
*காட டிடத் தாதை பண்டு*
*முடிசேர்ந்த காலை யறவெட்டிட*
*முக்கண் மூர்த்தி*
*அடிசேர்ந்த வண்ணமறிவார்*
*சொலக் கேட்டு மன்றே.*

*– திருஞானசம்பந்தர் –*

*தழைத்ததோ ராத்தியின் கீழ்த் தாபர மணலாற் கூப்பி*
*அழைத்தங்கே ஆவின்பாலைக் கறந்து கொண்டாட்டக் கண்டு*
*பிழைத்ததன்தாதை தாளைப் பெருங்கொடு மழுவால் வீசக்*
*குழைத்ததோ ரமுத மீந்தார் குறுக்கை வீரட்டனாரே.*

*– திருஞானசம்பந்தர் –*

இறைவனுடைய அருளைப்பெற, அவனுடைய அவயவர்களையும் வழிபட வேண்டும். திருக்காளத்தியில் கண்ணப்ப நாயனாருக்குச் சிறப்பான வழிபாடு நடப்பதை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

இறைவனுடைய அடியார்களுள் தலைசிறந்தவர், முன்னணியில் இருப்பவர், சண்டேசுவரர். ஆதி சண்டேசுவரர் அருளிச் செய்தபடி, கோயில் கட்டளைகள், கிராமம், பூமி, நகை முதலியன யாவும் இவருடைய பொறுப்பில் இருந்து வருகின்றன. பள்ளியறையில் ஒவ்வொரு நாளும் சண்டிகேசுவரர், கோயிலின் அன்றையக் கணக்கைப் படித்துக் காட்டும் பழக்கமும் சில கோயில்களில் உண்டு.

சண்டிகேசுவரரை வழிபடும் முறை குறித்து நான் 1972இல் ஆராய்ந்தேன். 18.2.1972 இல் சைவப் பேரறிஞர் மு. அருணாசலம் அவர்கள் திருச்சிற்றம்பலத்திலிருந்து பின் வருமாறு எனக்கு எழுதினார்.

"சண்டேசர் வரலாற்றைப் பெரிய புராணம் 59 பாடல்களால் சொல்லுகிறது. அவர் சிவலிங்க வழிபாடு செய்த போது, திருமஞ்சனப் பால் குடத்தைத் தந்தை காலால் இடறினார். அவர் பக்கத்தில் கிடந்த கோல் எடுத்தார், அதுவே மழுவாயிற்று. தந்தையின் தாளை எறிந்தார். 'நம் பொருட்டால் ஈன்ற தந்தையை விழ எறிந்தாய். அடுத்த தந்தை இனி உனக்கு நாம்' என்று சிவபெருமான் கூறினார். அவருக்கு உண்ட கலமும் உடுப்பனவும் சூடுவனவும் சண்டீசன் என்ற பதமும் தந்தார். அவர் சிவனார் மகனார் ஆயினார். ஆனபின், எந்த நேரமும் வேறு சிந்தனை இன்றி, சிவ சந்நிதியில் நிட்டைகூடி, சிவத்தையே சிந்தித்து இருக்கிறார்.

திருவாய்ப்பாடியில் பிறந்த விசாரசருமர் ஒருவரே சண்டேசர் என்பதில்லை. சண்டேசர் என்பது சிவகணங்களில் ஒரு பதவி. அப்பதவிக்குச் சிவபிரான் இப்பிள்ளையை உயர்த்தினார். அப்பதவியில் உள்ளார். சிவாலயத்தில் வந்து வழிபடுவோருக்கு, வழிபாட்டின் பலனை ஊட்டுவிக்கும் அதிகாரமுடையவர்கள். இவருக்கும் அந்த அதிகாரம் உண்டு. ஆனால், இவர் எந்த நேரத்திலும் சிவத்தியானத்தில் தோய்ந்திருப்பவர். ஆதலால் சூழ்நிலை இவருக்கு நினைவிராது. நாம் போய் வழி படும்போது, பயன்பெற வேண்டும் என்பது நமது கவலை. ஆகவே, இவரைத் தியானத்திலிருந்து சிறிது கலைத்து நம் வழிபாட்டை உணர்த்துகிறோம். கை தட்டுவது இவரை விழிப்படையச் செய்வதற்கே. மேலும் கோயிலில் சண்டேசருக்கும் சிவலிங்கத்துக்கும் குறுக்கே போகக் கூடாது என்பது ஒரு விதி. காரணம், இவருடைய மனம் சிவபெருமான் பால் சென்று கொண்டிருக்கிறது. அதை நாம் துண்டித்தல் தகாது என்பதே. இது பற்றியே தான் சண்டேசர் கோயிலில் வலப்புறம் வராமல் இடப்புறம் சுற்றி வந்து தரிசிக்கிறோம்.

மற்றப்படி இவரைச் செவிட்டுச்சாமி என்று கூறுவது, கூறுவோருடைய அஞ்ஞானத்தையே காட்டும். பாமர மக்கள் ஒன்றும் தெரியாதவர்கள்; அவர்கள் தவறாகச் சொல்லுகின்ற ஒரு பொருளை

*அறிவுடையவர்களும் தவறாகவே கருதிக் கொள்*
*வது பெரும் பிழை. சண்டேசர் செவிடரல்லர்;*
*நிஷ்டாபரர். நம்முடைய கவலையினால் இவருடைய*
*நிஷ்டையைக் கலைக்கிறோம்."*

கோயில்கள் பற்றியும் சைவசமய சம்பிரதாயங்கள் பற்றியும்

நிறைந்த புலமை உடையவரும் 'தொண்டர்குல சேகரர்' என்று காஞ்சி காமகோடி பீடம் பெரியவர்களால் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றவருமாகிய கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்கள் இதைப்பற்றி 1972 இல் என்னிடம் கூறியதாவது:

"சண்டிகேசுவரர் செவிட்டுச்சாமி இல்லை. அவர், முற்றிலும் தியானத்தில் மூழ்கியிருக்கிறார். அந்தத் தியானத்தைக் கலைக்கக் கூடாது கையைத் தட்டுவது அல்லது ஆடையிலிருந்து நூல் பிரித்துப் போடுவது சமயநெறிக்கு முற்றிலும் முரண்பட்டது. சண்டி என்ற சொல்லுக்கு CUSTODIAN என்று பொருள். சிவன் கோயில்களுக்கு, சண்டிதான் டிரஸ்டி, அறங்காவலர் என்று கல்வெட்டுக்களிலிருந்து தெரிகிறது."

சிவபெருமான் தன் மாலையை எடுத்துச் சண்டிகேசுவரர் முடியில் சூட்டி, திருவடி தீட்சை கொடுத்து இன்று முதல் நீ சண்டி அல்ல, சண்டீசன் என்று அனுக்கிரகித்தார். அந்த மூர்த்தத்துக்கு, சண்டீசானுக்ரக மூர்த்தி என்று பெயர். அந்த மூர்த்தியைத் தெளிவாக வழிபட விரும்புபவர்கள் கங்கை கொண்ட சோழேச்சரத்தில் ஞானசரசுவதிக்கு நேரே வடபுற வாயிலில் காணலாம்.

நன்றி : கோயில் (1979)




## *மாமன்றத் தலைமையகத்திலிருந்து அன்பு வேண்டுகோள்*

*இந்து ஒளி காலாண்டிதழை மேலும் சிறப்பாக வெளியிட வேண்டும். அதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. முதற் படியாக, எமது யாழ் பணிமனையில் இயங்கும் இந்து ஆராய்ச்சி நிலையம் இந்து ஒளியினை தயாரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும். இந்து ஆராய்ச்சி நிலையக் கௌரவ இயக்குநர் சைவ ஞானபானு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனின் வழிகாட்டலும் வெளியீடுகள் குழுவின் செயலாளர் திரு. அ. கனகசூரியர் மற்றும் யாழ்பணிமனை நிர்வாக அலுவலகர் திரு. வி. ஜெயசிங்கம் ஆகியோரின் உதவியும் இதற்கு கிடைப்பது குறிப்பிடத்தக்கது.*

*இந்து ஒளி சஞ்சிகையின் இச் சுடர் மகாசிவராத்திரி சிறப்பிதழாக மலர்வதால் சில முக்கிய கட்டுரைகளை பழைய ஏடுகளிலிருந்தும் எடுத்து வெளியிடப்படுவது இச்சிறப்பிதழுக்கு மகிமை தருகின்றது. இந்து ஒளி ஓர் ஆன்மீகச் சஞ்சிகையாக மட்டுமல்லாமல் பழைய ஏடுகளிலிருந்து கிடைக்கும் அரிய பொக்கிஷங்களையும் தரும் மஞ்சரியாகவும் மலர வேண்டும். அதற்கு அனைவரினதும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் வேண்டுகிறோம். இந்துஒளி வாசகர்கள் தங்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் அனுப்பி இந்துஒளியின் வளர்ச்சிக்கு உதவுமாறும் அழைக்கின்றோம்.*

*கொழும்பிலிருந்து யுனி ஆர்ட்ஸ் நிறுவனம் தொடர்ந்தும் இந்து ஒளியை அச்சிட்டு வரும்.* ***அடுத்த இதழுக்கு விடய தானங்களை அனுப்ப விரும்புவோரும் தங்களின் செய்திகளை பிரசுரிக்க விரும்பும் அங்கத்துவ சங்கங்களும் தயவு கூர்ந்து அவற்றை 30.04.2013 க்கு முன் யாழ் பணிமனைக்கு அல்லது தலைமையகத்திற்கு அனுப்பி உதவவும்.***

**கந்தையா நீலகண்டன்**
தலைவர்

**முத்தையா கதிர்காமநாதன்**
பொதுச் செயலாளர்

# வரலாறு படைத்த நிகழ்வு
## (தொடர்ச்சி)



ஸ்ரீ சிவகாமி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் பாதாந்தரத்தில் ஆன்மீகப் பேழையைச் சமர்ப்பித்து பூசை செய்யப்படும் காட்சி



ஆன்மீகப் பேழை தலைமையகப் பிரார்த்தனை மண்டப மேடையில் வைக்கப்பட்டிருக்கிறது



ஆன்மீகப் பேழையை ஆன்மீகச்சுடர் மாமன்ற அறங்காவலர் சபைத் தலைவர் மனிதநேய மாமணி இந்து சிரோரத்தினம் வி. கயிலாசப்பிள்ளை அவர்களிடம் கையளிக்கும் காட்சி



முத்தமிழ்ப் பேரரசி ஞானவித்தகி பேராசிரியை சரஸ்வதி இராமநாதனுக்கு இந்து சமயக் கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் கௌரவம் செய்யும் காட்சி



சபையோர்

HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/19/NEWS/2013




இக் காலாண்டிதழ் இல. 48B, புளுமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது.